Uthayan.com

வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.25
கொழும்பு : ரூபா.30

# உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily

சுடர்: 28 | கதிர்: 200 | வள்ளுவர் ஆண்டு: 2044 | வைகாசி 31, வெள்ளி 14.06.2013

சேமிப்பு ஒளி
யூன் மாதம் 15ம் திகதி சனிக்கிழமை
மு.ப 9.00 தொடக்கம் பி.ப 1.30 வரை
யாழ்ப்பாண (ஆஸ்பத்திரி வீதி) கிளையில் இடம்பெறும்
விசேட சேமிப்பு ஒளி நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
COMMERCIAL BANK

பக்கம் 24

இந்தியன்

பக். 06
மும்பையில் பெய்துவரும் கடும் மழையினால் வீதிகள் எங்கும் வெள்ளம் பாய்கின்றது.

உலகம்

பக். 07
மீண்டும் மோதல் தடைப்பட்டன கொரியப் பேச்சுக்கள்

விளையாட்டு

பக். 22
யாழ்.மாவட்ட ஆடவர், மகளிர் சம்பியனாகத் தெரிவாகினர்

# மாகாணங்கள் இணைவை தடுப்பதற்கு அரசு தீர்மானம்

## 13 ஆவது திருத்தச் சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்ள விசேட தெரிவுக்குழு ஒன்றையும் அமைப்பதற்கு முடிவு

> “இரண்டுக்கு மேற்பட்ட எட்டு அல்லது ஒன்பது அல்லது எதிர்காலத்தில் இதைவிடவும் அதிகமான மாகாணசபைகள் ஒன்றாக இணையலாம். இவ்வாறு இணைந்து ஆட்சியமைத்தால் மத்திய அரசு பலவீனமாகிவிடும். அதற்காகவே இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கொழும்பு, ஜூன் 14
இலங்கையில் உள்ள மாகாண சபைகளைத் தேவைப்படும் பட்சத்தில் இணைப்பதற்கு ஜனாதிபதிக்கு உள்ள அதிகாரத்தை நீக்குவதற்கு அமைச்சரவை முடிவு செய்துள்ளது. அத்துடன் மாகாணசபை முறையை உள்ளடக்கிய 13 ஆவது திருத்தச் சட்டத்தில் மேற்கொள்ளப்படவேண்டிய ஏனைய திருத்தங்கள் குறித்து ஆராய்வதற்கு விசேட தெரிவுக்குழு ஒன்றை அமைப்பது என்றும் அமைச்சரவையில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.
மாகாண சபைகளுக்குரிய காணி, பொலிஸ் அதிகாரங்கள் போன்ற சர்ச்சைக்குரிய விடயங்களையும் இந்த நாடாளுமன்ற தெரிவுக்குழு ஆராயும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
இந்த நாடாளுமன்றத் தெரிவுக்குழுவை அமைப்பதற்கான கோரிக்கையை எதிர்வரும் 18 ஆம் திகதி நாடாளுமன்ற சபாநாயகரிடம் அரசு முன்வைக்கும் என நேற்று நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிக்கும் செய்தியாளர் மாநாட்டில் அமைச்சரவைப் பேச்சாளர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.
இந்த மாநாட்டில் அமைச்சர் கெஹலிய மேலும் தெரிவித்ததாவது:-
13ஆவது திருத்தச் சட்டத்தில் இரண்டு திருத்தங்களை மேற்கொள்வது குறித்து கடந்த ஒருவார கால இடைவெளியின் பின்னர் இன்று (நேற்று) அமைச்சரவையில் தீவிரமாக ஆராயப்பட்டது. இதில் இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட மாகாணசபைகள் ஒன்றாக இணைவது குறித்த சரத்தை நீக்குவதற்கு அமைச்சர்களிடையே இணக்கம் ஏற்பட்டது.
இந்தத் திருத்தத்தை அசவர சட்டவரைவாக - 19ஆவது திருத்தச் சட்டவரைவாக எதிர்வரும் செவ்வாய்க் கிழமை நாடாளுமன்றில் சமர்ப்பிக்கவுள்ளோம். ஏனெனில் எதிர்காலத்தில் இரண்டுக்கு மேற்பட்ட அல்லது அதற்கும் அதிகமான மாகாண சபைகள் ஒன்றாக இணையலாம். இவ்வாறு இணைந்து ஆட்சியமைத்தால் மத்திய அரசு பலவீனமாகிவிடும். எனவே இது குறித்து நீண்டநேர பேச்சுகளின் பின்னரே நாம் இந்தத் தீர்மானத்தை மேற்கொண்டுள்ளோம்.
அடுத்ததாக நாடாளுமன்றத்தில், மாகாணசபைகள் தொடர்பில் சட்டவரைவுகள் நிறைவேற்றப்படும்போது அனைத்து மாகாணங்களின்

தொடர்ச்சி: பக்கம் 21

## மஹிந்த நாளை கிளிநொச்சிக்கு

யாழ்ப்பாணம், ஜூன் 14
ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நாளை சனிக்கிழமை கிளிநொச்சியில் ஏ-9 வீதியை முற்பகல் 10.30 மணிக்குதிறந்து வைப்பதுடன் மக்கள் வங்கியின் அலுவலகத்தையும் அங்கு திறந்து வைக்கவுள்ளார் என கிளிநொச்சி அரச அதிபர் தெரிவித்தார். அத்துடன் இரணை மடு விமான ஓடுபாதையையும் அவர் திறக்கவுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (த-5)

## இலங்கையில் சிறார்கள் படைகளில் இல்லை

நியூயோர்க், ஜூன் 14
இலங்கையில் எந்தவொரு தரப்பும் சிறுவர்களை ஆயுதப் போராட்டத்தில் ஈடுபடுத்தவில்லை என்று ஐ.நா. சபையினால் நேற்றுமுன்தினம் புதன்கிழமை வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி: பக்கம் 21

## வடக்குத் தேர்தல் நீதியாக நடவாது

### ஜனாதிபதிக்கு ரணில் கடிதம்

கொழும்பு,ஜூன் 14
வடக்கில் சுதந்திரமானதும், நீதியானதுமான தேர்தல் இடம்பெறும் என்ற நம்பிக்கை குறைவடைந்துள்ளதாக எதிர்க் கட்சித் தலைவர் விக்கிரமசிங்க, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.
அவர் ஜனாதிபதிக்கு எழுதிய கடிதத்தில் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
உலகளாவிய மற்றும் சம வாக்குரிமை அடிப்படையில் இது உண்மையான தேர்தலாக இருக்க வேண்டும். வாக்காளர் விருப்பம் சுதந்திரமாக வெளிப்படுத்தப்படவேண்டும்.
தேர்தலின் போது அரச இயந்திரங்களைப் பயன்படுத்தி எதிர்க்கட்சியினரை அச்சுறுத்தும் நடவடிக்கைகள் தொடர்பில் நாடாளுமன்றில் நாம் பல முறை தெரிவித்துள்ளோம். வடக்கில் இராணுவம் மற்றும் பிரதான கட்சி அரசியல்வாதிகளிடையே ஏற்படும் மோதல் இதனை உறுதி செய்கின்றது. இதனால்

தொடர்ச்சி: பக்கம் 21

## யாழில் வசித்த சிங்களவரின் விவரம் திரட்டுகின்றது அரசு

யாழ்ப்பாணம், ஜூன் 14
1983 ஆம் ஆண்டுக்கு முன்னர் யாழ். மாவட்டத்தில் வாழ்ந்த சிங்கள மக்கள் தொடர்பான விவரங்களை அரசு, யாழ். மாவட்ட செயலகம் ஊடாகத் திரட்டுகிறது.
1983 ஆம் ஆண்டுக்கு முன்னர் இங்கு குடும்பமாக வசித்த மற்றும் தொழில் நிமித்தம் தங்கியிருந்த சிங்கள மக்கள் தொடர்பான விவரங்களே திரட்டப்படுகின்றன.
கொழும்பிலிருந்து விடுக்கப்பட்ட விசேட சுற்றிக்கைக்கு அமைவாகவே மேற்படி விவரங்களை திரட்டும் பணி நடக்கிறது.
யாழ். மாவட்டத்திலுள்ள சகல பிரதேச செயலர் பிரிவுகளுக்கும் கடந்த வாரம் இந்த சுற்றறிக்கை அனுப்பப்பட்டுள்ளது. ஒவ்வொரு கிராம சேவையாளருக்கும் மேற்படி விவரங்களைத்திரட்டும்பொறுப்புஒப்படைக்கப்பட்டுள்ளது. 1983ஆம்ஆண்டுக்குமுற்பட்டதகவல்களைப் பெறுவதில் கிராம சேவையாளர்கள் இடர்பாடுகளை எதிர்நோக்கியுள்ளனர். (த-5-68)

## வாக்காளர்கள் பட்டியலை படைகளுக்கு வழங்காதீர்

### தேர்தல் ஆணையாளர் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 14
வாக்காளர் பெயர்ப்பட்டியலை இராணுவத்தினருக்கோ அல்லது வேறு எந்த தரப்பினருக்கோ கிராமசேவையாளர்கள் வழங்க வேண்டாம்- வழங்கக் கூடாது என்று தேர்தல்கள் ஆணையாளர் சகல பிரதேச செயலாளர்களுக்கும் அறிவித்துள்ளார்.
2013 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பெயர்ப் பட்டியல் தயாரிக்கும் நடவடிக்கைகளுக்காகக் கிராம சேவகர்களுக்கு 2012 ஆம் ஆண்டுக்குரிய வாக்காளர் பெயர்ப் பட்டியல் வழங்கப்பட்டுள்ளது.
இவ்வாறு வழங்கப்பட்ட 2012 ஆம் ஆண்டுக்குரிய வாக்காளர் பட்டியலை யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் இராணுவத்தினர் கோரியுள்ளனர்.
இந்த விடயம் தொடர்பில் கிராம சேவையாளர்களால் தேர்தல் திணைக்களத்துக்குத் தெரியப்படுத்தப்பட்டிருந்தது. இதனையடுத்து தேர்தல்கள் திணைக்களத்தால் சகல பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கும் கடிதம் ஒன்று அனுப்பப்பட்டுள்ளது.
அதில், வாக்காளர் பெயர்ப் பட்டியலுக்குக் கிராம சேவையாளர்களே பொறுப்பு எனவும், அதனை யாருக்கும் வழங்க வேண்டியதில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-5)

## தேர்தலை வடக்கில் ஒத்தி வைக்க சூழ்ச்சி

கொழும்பு, ஜூன் 14
அவசர அவசரமாகக் கொண்டுவரப்பட்ட வாக்காளர் திருத்தச் சட்ட வரைவு, அரசினால் அவசியமற்றதாக்கப்பட்டமை வடமாகாண சபைத் தேர்தலை ஒத்திவைக்கும் சூழ்ச்சியின் திட்டமே என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு குற்றஞ்சாட்டியுள்ளது.
அதிகாரத்தைப் பகிர்ந்து ஐக்கியப்படுத்தும் இயக்கம் நேற்று முன்தினம் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.

தொடர்ச்சி: பக்கம் 21

## இந்து ஆலயங்களின் மீதான தாக்குதலை கண்டித்து பேரணி

### இன்று யாழ். நகரில் நடைபெறும்

யாழ்ப்பாணம், ஜூன் 14
இந்து ஆலயங்கள் மீது மேற்கொள்ளப்படும் தாக்குதல் சம்பவங்களைக் கண்டித்து இன்று வெள்ளிக்கிழமை யாழ். நகரில் கண்டனப் பேரணி ஒன்று இடம்பெறவுள்ளது.
இந்தப் பேரணிக்கான ஏற்பாடுகளை விஸ்வ இந்து பரிஷத் அமைப்பு மேற்கொண்டுள்ளது.
அண்மைக் காலமாக நாட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் இந்து ஆலயங்கள் மீதான தாக்குதல்கள், ஆலயங்களில் பெறுமதிமிக்க பொருள்கள் சூறையாடப்படுதல் ஆகியவற்றைக் கண்டித்தே இந்தப் பேரணி இடம்பெற

தொடர்ச்சி: பக்கம் 21

## அரசு சாரா அமைப்புகளுக்கு இலங்கை அரசு கடிவாளம்

கொழும்பு, ஜூன் 14
இலங்கை அரசுக்கு எதிராக சர்வதேச ரீதியில் அரச சார்பற்ற நிறுவனங்களால் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு வரும் நிலையில், இலங்கையில் இயங்குகின்ற அரச சார்பற்ற நிறுவனங்களுக்குக் கடிவாளம் போடுவதற்கு இலங்கை

தொடர்ச்சி: பக்கம் 21


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘13’ விவகாரத்தால் இந்தியா கவலை

## வடக்குத் தேர்தல் தொடர்பிலும் சந்தேகம்

புதுடில்லி,ஜூன் 14

13 ஆவது அரசமைப்புத் திருத்தச் சட்டத்தை நீர்த்துப் போகச் செய்வதற்கு இலங்கை அரசு உறுதியாக நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவது, இந்தியாவுக்கு ஆழ்ந்த கவலையை ஏற்படுத்தியுள்ளதாக, நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ் செய்தி வெளியிட்டுள்ளது.



“ராஜபக்ஷ அரசு 13 ஆவது திருத்தத்தை ஒழிக்க நடவடிக்கை எடுத்தால், அது பதிலடியான நடவடிக்கையாக அமையும் என்றும் இந்திய அரச வட்டாரங்கள் தெரிவித் துள்ளன.

இலங்கையில் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு முக்கியமான இந்த அரசமைப்புத் திருத்தத்தை நீர்த்துப் போகச்செய்யும் முயற்சிகள், வடக்கு மாகாணசபைத் தேர்தல் மீதான நம்பகத் தன்மையைக் கேள்விக்குறியாக்கியுள்ளதாக அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மாகாண சபைகளின் அதிகாரங்கள் எந்த வகையிலேனும் குறைக்கப்பட்டால், தாம் தேர்தலைப் புறக்கணிக்க நேரிடும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்கள் ஏற்கனவே பகிரங்கமாக எச்சரித் துள்ளனர். ராஜபக்ஷ அரசு 13 ஆவது திருத்தத்தை ஒழிக்க நடவடிக்கை எடுத்தால், அது பதிலடியான நடவடிக்கையாக அமையும் என்றும் இந்திய அரச வட்டாரங்கள் தெரிவித் துள்ளன.

வடக்கில் தேர்தலை நடத்தப் போவதாக அனைத்துலக சமூகத்திடம் கூறிக்கொண்டே, இன்னொரு பக்கத்தில் அரசு மாகாண சபைகளின் அதிகாரங்களைப் பறிக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளதாகவும் அந்த வட்டாரங்கள் கூறியுள்ளன.

மூன்று வாரங்களுக்கு முன்னர், மாகாண சபைகளின் காணி, பொலிஸ் அதிகாரங்களைப் பறிக்க இலங்கை அரசு நடவடிக்கை எடுத்து வருவதாகத் தகவல்கள் வெளியான போது, இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித், இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸைத் தொலைபேசியில் அழைத்துப் பேசியிருந்தார்.

இதன்போது, 13 ஆவது திருத்தத்தின் கீழ் உள்ள அதிகாரங்களை நீக்க நடவடிக்கை எடுக்கப்படக் கூடாது என்று சல்மான் குர்ஷித் வலியுறுத்தியிருந்தார். (த)

## கொழும்பில் கைதான பொலிஸாருக்கு மேலும் எட்டு கொலைகளில் தொடர்பு

கொழும்பு, ஜூன் 14

பம்பலப்பிட்டியில் கோடீஸ்வர முஸ்லிம் வர்த்தகரைக் கடத்திப் படுகொலை செய்த வழக்கில் கைது செய்யப்பட்டுள்ள பொலிஸாருக்கு மேலும் எட்டுக் கொலைகளில் தொடர்புள்ளமை விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.



இந்த ஒப்பந்தக் கொலை தொடர்பாக, பொலிஸ்துறையின் மூத்த அதிகாரியான கொழும்பு வடக்கு பிரதிப் பொலிஸ்மா அதிபர் வாஸ் குணவர்த்தன மற்றும் 6 பொலிஸார் உள்ளிட்ட 8 பேர் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களிடம் நடத்தப்பட்டு வரும் விசாரணைகளிலேயே மேலும் எட்டுக் கொலைகளுடன் இவர்களுக்கும் தொடர்பு உள்ளமை தெரியவந்துள்ளது.

வாஸ் குணவர்த்தனவின் நெருங்கிய நண்பர் ஒருவரையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.இதையடுத்து கடத்தலுக்குப் பயன்படுத்தப்பட்ட வாகனம் அடையாளம் காணப்பட்டுள்ளது.

கொலைக்குப் பயன்படுத்தப்பட்ட இரு துப்பாக்கிகள் பேலியகொட பகுதியில் மீட்கப்பட்டு அரச பகுப்பாய்வாளரின் ஆய்வுக்காக அனுப்பப்பட்டுள்ளன. (த)

## தன்னை துரத்திய யானைகளை வேடிக்கை பார்த்த அமைச்சர்



கொழும்பு,ஜூன் 14

வனவள அமைச்சர் விஜித்த விஜயமுனி சொய்சாவை இரண்டு யானைகள் சுமார் இரண்டு கிலோமீற்றருக்குத் துரத்திச் சென்றுள்ளன. அதனை வாகனத்தில் இருந்தவாறு அமைச்சர் வேடிக்கை பார்த் துள்ளார்.

கதிர்காமம்-புத்தல வீதியி லேயே இந்தச் சம்பவம் அண்மையில் இடம்பெற்றுள்ளது.

18 வயதுக்கும் 22 வயதுக்கும் இடைப்பட்ட இரண்டு யானைகளே அமைச்சர் பயணித்த வாகனத்தை இவ்வாறு துரத்தியுள்ளன. அமைச்சரோ வாகனத்தைச் சாதாரண வேகத்தில் செலுத் துமாறு கூறிவிட்டு வாகனத்தின் இருக்கையில் ஏறி யானைகளின் செயற்பாட்டை அவதானித்துக் கொண்டு வந்தார். குறித்த பிரதேசத்தில் 25க்கும் 30 க்கும் இடைப்பட்ட யானை கள் இருக்கின்றன.

அவ்விடத்துக்கு வரும் மிருகங் களுக்கு உணவுகளை வழங்க வேண்டாமென வனஜீவராசி கள் திணைக்கள அதிகாரிகள் பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். (த)

## கடலுக்குச் செல்லாதீர் மீனவர்களே!

கொழும்பு,ஜூன் 14

மன்னாரிலிருந்து கொழும்பு, காலி, பொத்துவில் வரையான கடல் மற்றும் கரையோரப் பகுதிகளில் சீரற்ற காலநிலை நிலவுவதால் மீனவர்கள் மீன் பிடிக்கச் செல்வதை தவிர்த் துக்கொள்ள வேண்டும் என அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித் துள்ளது.

இதேவேளை யாழ்ப்பாணத்திலிருந்து திருகோணமலை வரையான கடல் மற்றும் கடற் கரையோரப் பிரதேசங்களிலும் சீரற்ற காலநிலை நிலவும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது.

இப்பிரதேசங்களில் மணித்தியாலத்துக்கு 60 கிலோமீற் றர் வரையான வேகத்தில் காற்று வீசுவதற்கான வாய்ப் புக்கள் உள்ளதன் காரணமாக

மீனவர்களை அவதானமாக செயற்படுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (த-51)

## பிரதேச சபை மீது சட்ட நடவடிக்கை

வலி.தென்மேற்கு, ஜூன் 14

வலி.தென்மேற்கு பிரதேச சபையின் தலைமைக் காரியாலயம் கட்டியமைக்கான மிகுதிக் கொடுப்பனவை வழங்காமல் காலம் கடத்திவரும் பிரதேசசபை மீது சட்ட நடவடிக்கை எடுக்க முன்வந்துள்ள கட்டட ஒப்பந்தகாரர் முதற் கட்டமாக மத்தியஸ்தர் சபையின் உதவியை நாடியுள்ளார். இது சம்பந்தமான கடிதம் பிரதேசசபை செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

வலி.தென்மேற்கு பிரதேச சபையின் தலைமைக் காரியாலயம் பொதுமக்களின் நிதியுதவியுடன் வாங்கப்பட்ட காணியில் சுமார் 40 மில்லியன் ரூபா செலவில் கட்டப் பட்டுள்ளது.

கட்டடத்தைப் பொறுப்பேற்றுக் கட்டி முடித்த கட்டட ஒப்பந்தகாரர் கடந்த வருடம் ஓகஸ்ட் மாதம் 15ஆம் திகதி கட்டடத்தைப் பிரதேச சபையிடம் ஒப் படைத்துள்ளார். கட்டடம் பிரதேச சபையிடம் ஒப்படைக் கப்பட்டுப் பல மாதங்கள் கடந்தும் ஒப்பந்தகாரருக்கு வழங்க வேண்டிய மிகுதிப் பணம் சுமார் 10 மில்லியன் ரூபா இதுவரை வழங்கப்படவில்லை.

இது குறித்து பல தடவைகள் கட்டட ஒப்பந்தகாரர் பிரதேச சபைக்கு அறிவித்திருந்த போதிலும் அவருக்குச் செலுத்த வேண்டிய பணத்தைச் செலுத் தாமல் பிரதேச சபை காலம் கடத்தி வருகின்றது. இதனால் சட்ட நடவடிக்கை எடுக்க முன் வந்துள்ள ஒப்பந்தகாரர் தற் பொழுது மத்தியஸ்தர் சபையிடம் உதவியை நாடியுள்ளார்.

பிரதேச சபை செயலாளருக்கு ஒப்பந்தகாரரால் அனுப்பி வைக்கப்பட்ட கடிதத்தின் பிரதியை செயலாளர் சகல பிரதேச சபை உறுப்பினர்களுக்கும் அனுப்பி வைத்துள்ளார். (த-115)

## வாஸ் குணவர்த்தன வைத்தியசாலையில்

கொழும்பு,ஜூன் 14

முஸ்லிம் வர்த்தகர் ஒருவர் படுகொலை செய்யப்பட்ட சம் பவம் தொடர்பில் குற்றப்புல னாய்வுப் பிரிவினரால் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ள பிரதிப் பொலிஸ் மா அதிபர் வாஸ் குணவர்த்தன வைத்தியசாலையில் அனும திக்கப்பட்டுள்ளார்.

கொழும்பு தேசிய வைத்தியசாலையிலேயே அவர் அனுமதிக்கப்பட்டுள்ளார் என அவரது சட்டத்தரணிகள் தெரிவித்தனர். நீரிழிவு மற்றும் உயர் அழுத்தம் காரணமாகவே அவர் வைத்தியசாலையில் அனு மதிக்கப்பட்டுள்ளதாக சட்டத்தரணிகள் மேலும் தெரிவித்தனர். (த)

## ஆஸியில் தமிழ் அகதிக் குடும்பம் 3 வருடங்களின் பின் விடுதலை

கான்பரா,ஜூன் 14

'ஆசியோ' எனப்படும் ஆஸ்திரேலியா புலனாய்வுத் தரப்பின் உத்தரவின் கீழ் கடந்த மூன்று வருடங்களாகத் தடுத்து வைக்கப்பட்டிருந்த இலங்கைத் தமிழ் அகதி குடும்பம் ஒன்று அடுத்த வாரம் விடுவிக் கப்படவுள்ளது. அவர்களுக்கு இணைப்பு வீசா வழங்கப் பட்டு சமூகத்துடன் இணைக் கப்படவிருப்பதாக, ஆஸ் திரேலிய குடிவரவுத்துறை அமைச்சு தெரிவித்துள் ளது.

எனினும் ஏனைய இணைப்பு வீஸா வழங்கப்பட்ட அகதிகள் போலவே அவர்களும் தீவிர கண்காணிப்பின் கீழ் இருப் பார்கள் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

தாய் மற்றும் பிறந்து சில மாதங்களேயான குழந்தை உள்ளிட்ட ஐந்து பேர் இவ்வாறு விடுவிக்கப்படவுள்ளனர்.

இதேவேளை இந்தக் குடும்பத்தின் தந்தையான ராகவன் என்பவர் தொடர்ந்தும் முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள நிலையில், அவரது தடுத்து வைத்தலுக்கு எதிரான மனு அடுத்த வாரம் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள் ளப்படவுள்ளது.இதன் போது அவர் பெரும்பாலும் விடுவிக் கப்படலாம் என்று எதிர்பார்க்கப் படுகிறது. (த)

## அம்பாந்தோட்டை துறைமுகத்தில் வாகன உதிரிப்பாகங்கள் திருட்டு

கொழும்பு,ஜூன் 14

அம்பாந்தோட்டை துறைமுகத்தில் இறக்குமதி செய்யப்படும் வாகனங்களிலிருந்து அதிகளவு உதிரிப்பாகங்கள் திருடப் படுவதாகவும், இதன் காரணமாக வாகன இறக்குமதியாளர்கள் பெரும் பின்னடைவுகளை எதிர்நோக்கியுள்ளதாகவும் இதனைக் கட்டுப்படுத்தும் வகையில் பாதுகாப்பு பலப்படுத்தப் பட்டுள்ளதாகவும் அதிகாரிகள் அறிவித்துள்ளனர்.

இது குறித்து வாகன இறக்குமதியாளர்கள் சம்மேளனத்தின் செயலாளர் கீர்த்தி குணவர்த்தன கருத்து தெரிவிக்கையில், 'கடந்த இரண்டு மாத காலமாக எமது அங்கத்தவர்களிடமிருந்து, இந்த வாகன உதிரிப்பாகங்கள் திருடப்படுவதாக முறைப்பாடுகள் கிடைத்த வண்ணமுள்ளன. ரேடியோக்கள், என்ஜின் உதிரிப்பாகங்கள் போன்றவை பெருமளவு திருடப்படுவதாகவும், ஹைபிரிட்ரக வாகனங்கள் பெருமளவு திருட்டுக்கு இலக்காவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. வாகனங்களை ஏற்றுமதி செய்யும் நாடுகள் வாகனங்களுடன் எவ்விதமான குறிப்புகளையும் அனுப்பி வைக்காமையால், அவற்றைப் பரிசீலனை செய்வதிலும் சிக்கல் நிலை காணப் படுகிறது' என்றார்.

இது குறித்து துறைமுக அதிகார சபையின் தலைமை அதிகாரி பிரியாத் விக்கிரம கருத்து தெரிவிக்கையில், 'இந்த விடயம் குறித்து நான் சுமார் இரண்டு வார காலப்பகுதிக்கு முன்னர் தான் கேள்வியுற்றேன். துறைமுகத்தின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. இந்தப் பகுதியைக் கண்காணிப்பதற்காகப் பாதுகாப்பு கமராக்களைப் [illegible] களையும் நாம் கோரியுள்ளோம்' என்றார். (த)

## ‘13’ குறித்து மஹிந்தவுடன் பிரபா கணேசன் நேற்று பேச்சு

ஜனாதிபதி மஹிந்தவுடன் கொழும்பு மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர் பிரபா கணேசன் சந்திப்பொன்றை நடத்தியதாக ஜனநாயக மக்கள் காங்கிரஸ் தெரிவித்துள் ளது. 13 ஆவது அரசமைப்புத் திருத்தம் தொடர்பில் இதன்போது பேசப்பட்டதாக கூறப்பட்டுள்ளது.

இது குறித்து ஜனநாயக மக்கள் காங்கிரஸ் தலைவரும் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான பிரபா கணேசன் கருத்து தெரி விக்கையில், ஜனாதிபதியுடனான சந்திப்பு கொழும்பு, களுத்துறை, கேகாலை மாவட்ட தோட்டப் புறங்களின் அபிவிருத்தி தொடர்பாக இருந்தது.13 ஆவது திருத்தச் சட்ட சர்ச்சை குறித்து ஜனாதிபதி கருத் துக்களை பரிமாறினார். மாகாண சபைகளுக்குள்ள பொலிஸ், காணி அதிகாரங்கள் இல்லாதொழிக் கப்படுமேயானால் அதற்கு ஒரு போதும் நான் ஆதரவு அளிக்க முடியாது என்று அவரிடம் தெரிவித்தேன். ஜனாதிபதியும் இவ்விரண்டு அதிகாரங்களை குறைக்கப் போவதில்லை என என்னிடம் தெரிவித்தார்–என்றார். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாஷையூர் அந்தோனியார் பெருவிழாவில்...



பாஷையூர் புனித அந்தோனியார் ஆலய திருவிழா திருப்பலி பூசை நேற்று மாலை யாழ்.ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை தலைமையில் நடைபெற்றது. பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் கலந்துகொண்ட காலைத் திருவிழாவில் புதுவை நகரில் இருந்து எடுத்துவரப்பட்ட அந்தோனியாரின் அழியாத உடற் பகுதிகளின் திருப்பண்டத்திலிருந்து யாழ். மறை மாவட்டத்துக்கு வழங்கப்பட்ட சிறு பகுதியைக் கொண்ட பேழையால் ஆசீர்வாதம் சிறப்பாக இடம்பெற்றது. (வ-23-135)

# வாகன நிறுத்தத்துக்கு எதிராக வவுனியா வர்த்தகர்கள் ஹர்த்தால்


### நகரசபை தலையீட்டினால் நீதிமன்ற உத்தரவு வாபஸ்

நெளுங்குளம், ஜூன் 14

வாகனங்களை நிறுத்த விதிக்கப்பட்ட தடைக்கு எதிராக நேற்றைய தினம் வவுனியா பஸ் நிலையத்துக்கு அருகில் உள்ள கடைத் தொகுதிகள் மூடப்பட்டு ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

வர்த்தக நிலையங்களுக்கு அருகில் வாகனங்களை நிறுத்தக் கூடாதென நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ள நிலையில் இந்த ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

நீதிமன்ற உத்தரவு காரணமாக வாடிக்கையாளர்கள் தமது வாகனங்களை நிறுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளதால் தமது வர்த்தக நடவடிக்கைகள் பாதிக்கப்படுவதாக வர்த்தகர்கள் தெரிவித்தனர்.



நேற்றையதினம் வவுனியா பஸ் நிலையத்துக்கு அருகில் உள்ள கடைத் தொகுதிகள் மூடப்பட்டு ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

மேலும் இந்தக் கடையடைப்புத் தொடர்பாக வர்த்தகர்களுடன் பொலிஸார் உரையாடினர். எனினும் சாதகமான பதில் கிடைக்கும்வரை கடையடைப்பை மேற்கொள்வோம் என வர்த்தகர்கள் தெரிவித்தனர். இதனால் பொலிஸார் அங்கிருந்து அகன்று சென்றுவிட்டனர்.

பின்னர் வர்த்தகர்கள் கூட்டமாக வவுனியா நகரசபைக்குச் சென்றனர். அங்கு வவுனியா நகரசபை உப தலைவர் எம்.எம்.ரதன் வர்த்தகர்களுடன் உரையாடினார். "நீதிமன்றத்தின் தீர்ப்பு இது. இதனைச் சட்ட ரீதியாகவே அணுக வேண்டும். அதனால் கடையடைப்பைக் கைவிடுங்கள். மேலும் இது உங்கள் வாழ்வு சார்ந்த பிரச்சினை. நீதி மன்றத் தீர்ப்புக் குறித்து சட்டத்தரணிகளை அணுகியுள்ளோம்'' என்று உப தலைவர் அப் போது தெரிவித்தார்.

இந்த உத்தரவாதத்துக்குப் பின்னரும் முற்பகல் 10.30 மணிவரை கடைகள் மூடப்பட்டிருந்தன. அதைத் தொடர்ந்து உப தலைவர் சட்டத்தரணிகள் சகி தம் நீதிமன்றத்துக்குச் சென் றிருந்தார். அதை அடுத்து சில நிபந்தனைகளுடன் வாகனங்கள் நிறுத்தப்படுவதற்கான தடை உத்தரவை நீதி மன்றம் திரும்பப் பெற்றுக் கொண்டது.

இதன் பின்னர் முற்பகல் 11 மணியளவில் கடைகள் யாவும் திறக்கப்பட்டன. தொடர்ந்து வாடிக்கையாளர்களின் வாகனங்கள் அந்தப் பகுதி யில் நிறுத்தப் பட்டதைக் காணக் கூடியதாக இருந்தது. (க-402)

## எழுவைதீவு, அனலைதீவுக்கு புதிதாக ஜெனரேற்றர்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 14

வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் எழுவைதீவு, அனலைதீவுப் பகுதிகளுக்கு புதிய ஜெனரேற்றர்கள் வழங்கப்படவுள்ளதாக ஊர்காவற்றுறை பிரதேச சபை தவிசாளர் ம.ஜெயகாந்தன் தெரிவித்தார்.

இந்தப் பகுதிகளில் குறிப்பிட்ட நேரங்களுக்கே தற்போது மின் விநியோகம் இடம்பெறுகின்றது. இதனால் பாடசாலை மாணவர்கள் உட்பட பொதுமக்கள் மின்விநியோகம் சீராகக் கிடைக்க வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பாக அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தாவிடம் பிரதேச சபை கோரிக்கை விடுத்ததை அடுத்து புதிதாக ஜெனரேற்றர்கள் விரைவில் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டார். (வ-7)

## கோரக்கன்கட்டுப் பகுதியில் கத்திமுனையில் கொள்ளை

கிளிநொச்சி, ஜூன் 14



கிளிநொச்சி கண்டாவளை கோரக்கன் கட்டுப் பகுதியில் உள்ள வீடொன்றில் இரண்டு லட்சம் ரூபா பெறுமதியான பணம், நகைகள் என்பன கொள்ளையிடப்பட்டதாக கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த 12 ஆம் திகதி இரவு வாள், கத்தி போன்ற கூரிய ஆயுதங்களுடன் புகுந்த கும்பல் ஒன்று வீட்டில் இருந்தவர்களை அச்சுறுத்தி, அவர்களிடம் இருந்த பணம், நகைகள் மற்றும் உடைமைகளைக் கொள்ளையிட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக கிளி. பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ள நிலையில் விசாரணைகளைக் கிளிநொச்சிப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

கொள்ளைச் சம்பவம் இடம்பெற்ற பகுதியில் சந்தேகத்துக்கு இடமான வகையில் ஓட்டோ ஒன்றில் சிலர் பல தடவைகள் சுற்றித்திரிந்ததாகவும், இவர்களே கொள்ளையில் ஈடுபட்டிருக்கலாம் எனவும் பிரதேச மக்கள் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். (ஐ-6)

# இராணுவ மலையேறும் பயிற்சிகள் எதற்கு பாடசாலை அதிபர்களுக்கு?

### கேள்வி எழுப்புகின்றனர் பெற்றோர்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 14

பாடசாலைகளின் அதிபர்கள் கேணல்களாக பதவி மாற்றம் செய்யப்படவுள்ளார்களா? இவர்களுக்கு ஏன் இராணுவப் பயிற்சியும் மலையேறும் பயிற்சியும்? இவ்வாறு பெற்றோர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

பாடசாலைகளில் கடமையாற்றும் அதிபர்களுக்கு கட்டாய இராணுவப் பயிற்சி மற்றும் மலையேறும் பயிற்சியும் வழங்குவதற்காக இரு தொகுதியினர் அழைக்கப்பட்டுள்ளனர். இராணுவப் பயிற்சி பெறும் ஒருவரிடம் அதிபருக்குரிய சேவைகளைப் பெற முடியுமா அல்லது பாடசாலைகள் அனைத்தையும் இராணுவ நிலையங்களாக மாற்ற அரசு ஏற்படுத்தியுள்ள திட்டமா இது எனவும் கேட்டுள்ளனர்.

இலங்கையில் உள்ள அனைத்துப் பாடசாலைகளின் அதிபர்களுக்கும் கட்டாய இராணுவப் பயிற்சிகள் வழங்குவதற்காக கட்டம் கட்டமாக அதிபர்கள் இராணுவப் பயிற்சி நிலையங்களுக்கு அழைக்கப்பட்டு இராணுவச் சீருடைகளுடன் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன. அத்துடன் மலையேறும் பயிற்சியும் வழங்கப்படுகின்றது.

இந்தப் பயிற்சிக்கு காலநீடிப்பு சேவையிலுள்ள அதிபர்களுக்கும் பெண் அதிபர்களும் அழைக்கப்பட்டு பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

முன்னைய காலங்களில் பாடசாலை அதிபர்கள் பெரிதும் மதிக்கப்பட்டனர். தலைமை வாத்தியார் அல்லது அதிபரை பாடசாலையில் மட்டுமல்ல வெளியில் கண்டால் கூட மாணவர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர்கள் பயபக்தியுடன் மதிப்பர். அன்றைய அதிபர்களின் "நடை, உடை, பாவனை'' அவர்களின் பதவிக்கு மேலும் மதிப்பையும் வழங்கியது.

அவ்வாறான அதிபர்களுக்கு இராணுவப் பயிற்சிகள் வழங்கப்பட்டால் மிக உயர்வாகக் கருதப்பட்ட பண்புகள் மாற்றமடைந்து கல்விச் சமூகத்தை அடக்கி ஆளும் நிலையை உருவாக்கி விடுமென அச்சம் கொண்டுள்ளனர்.

கல்விப் புலத்தையே வழிநடத்தும் அதிபர்களுக்கு இராணுவப் பயிற்சி வழங்குவது ஏன், எதற்கு...? எனவும் பெற்றோர் பலர் கேள்வி எழுப்பியுள்ளனர். (ஒ)

### தேசிய அ.அ.விண்ணப்பங்களைப் பெறுவதில்

## பிரதேச செயலகங்களிடையே வேறுபட்ட நடைமுறைகள்

யாழ்ப்பாணம், ஜூன் 14

யாழ். மாவட்டத்தில் தேசிய அடையாள அட்டைக்கான விண்ணப்பங்களைப் பெற்றுக் கொள்வதில் பிரதேச செயலகங்களிடையே வேறுபட்ட நடைமுறைகள் பின்பற்றப்பட்டு வருவதால் பொதுமக்கள் குழப்பத்துக்கு உள்ளாகின்றனர்.

குறிப்பாக சில பிரதேச செயலகங்களில் 6 மாத காலத்தினுள் பெறப்பட்ட பிறப்புச் சான்றிதழ் கொண்டுவரப்பட வேண்டும் எனவும், அதற்கு முந்திய சான்றிதழ்களாக இருந்தால் ஏற்க முடியாது என தெரிவிக்கப்படுகின்றது.

சில இடங்களில் முன்னர் வழங்கிய மஞ்சள் தாளிலான பிறப்புச் சான்றிதழ்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது என திருப்பியனுப்பப்படுகின்றது. இவ்வாறு எந்த வகையான எழுத்து மூலமான அறிவித்தல்கள், சுற்றறிக்கைகளும் இன்றி பிரதேச செயலகங்களி டையே புதிய நடைமுறைகளை தமது வசதிக்கு ஏற்ப ஏற்படுத்திக் கொள் வதால் பொதுமக்களும், கிராம அலுவலர்களும் முரண்படும் நிலைமையும் ஏற்படுவதாக பொதுமக்கள் தெரிவிக்கின்றனர். (வ-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்கள்

### திருமதி கமலாதேவி இராசதுரை

சுழிபுரம் தெற்கு, சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கமலாதேவி இராசதுரை நேற்று (13.06.2013) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் இராசதுரையின் அன்பு மனைவியும், சிறிஸ்கந்தராசா, சிறிதரன் (ஆசிரியர் யா/மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயம்) சிறிராசா (கணக்காளர்- BIMPUTH FINANCE PLC) மனோகரன் (ஆசிரியர் முல்/பாலிநகர் மகாவித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.06.2013) வெள்ளிக்கிழமை பி.ப 1.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருவடிநிலை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சுழிபுரம் தெற்கு, சுழிபுரம். (38321)(16.14.9)

தகவல்: குடும்பத்தினர்.

### சின்னத்தம்பி செல்லத்துரை



எழுதுமட்டுவாழ் வடக்கைப் பிறப்பிட மாகவும், உசன்தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி செல்லத்துரை நேற்று (13.06.2013) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத் தம்பி-வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான இளையதம்பி - சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மருமகனும், புவிதரன், மகேந்திரன், புவிதா (நோர்வே), பகீரதன் (பிரான்ஸ்), புஸ்பாகரன், பிரபாகரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், ரஞ்சிதா, மைதிலி, ரமேஸ் (நோர்வே), சுஜித்தா (பிரான்ஸ்), பிரியநந்தினி ஆகியோரின் பாசமிகு மாமனும், பிரசாந்தன், கிருசாந்தன், ரக்சன், ரக்ஷனா, ஆகாஷ், ஆருஷ் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.06.2013) வெள்ளிக்கிழமை பி.ப. ஒரு மணியளவில் மீசாலை வடக்கு, மீசாலையில் உள்ள அவரது மகனின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மீசாலை வடக்கு, மீசாலை.

தகவல்: குடும்பத்தினர்.

### கணபதிப்பிள்ளை காளிராசா



வட்டுக்கோட்டை தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை காளிராசா நேற்று (13.06.2013) வியாழக்கிழமை காலமானார்.


அன்னார் கோமேஸ்வரி பாக்கியத்தின் அன்புக் கணவரும் இரத்தினம், நாகம்மா, இராசு, சிவசுப்பிரமணியம், இராஜேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும் வசந்தராணி, சிவனேசன், காலஞ்சென்ற தவநேசன் மற்றும் மோகனா, விக்கினேஸ்வரன், கோணேஸ்வரன் ஆகியோரின் பாசமிகு தகப்பனும் காலஞ்சென்ற அமிர்தலிங்கம் மற்றும் சுதாகினி, மோகனசாந்தன், சிவந்தினி, ஜசிதா ஆகியோரின் அன்பு மாமனும் காலஞ்சென்ற சபேசன் மற்றும் தேவராஜ், மீரா ரகுவரன், தனஞ்ஜெயன், சியாம், யதுசா, கஜீபனா, டனிலா, விஷானி, கிஷஜுஜன், சியாந், சாருஜன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.06.2013) வெள்ளிக்கிழமை பி.ப. 1.30 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கையாறு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

காளி கோயிலடி, வட்டு தெற்கு, வட்டுக்கோட்டை. (சி/9620)

தகவல்: குடும்பத்தினர்.

### முத்தையா பாலசிங்கம்



ஈவினைபுன்னாலைக்கட்டுவனை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட முத்தையா பாலசிங்கம் (13-6-2013) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார்முத்தையா - தங்கமுத்து தம்பதிகளின் மகனும் சின்னம்மாவின் அன்புக்-கணவரும், சிபாலினி (ஆசிரியர் ஈவினை அ.த.க. பா சாலை, சிவாஜினி (சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் பிரதேசசெயலகம் உடுவில), சிவறாஜனி ஆகியோரின் அன்புத் தந்தையும், அசோக்குமார் மற்றும் கிரிமோகன் ஆகியோரின் மாமனாரும் தசாங்கன், கிருஸ்ணிகா ஆகியோரின் அன்புப்பேரனும் காலஞ்சென்ற நல்லரத்தினம் மற்றும் இராசரத்தினம், இரத்தினேஸ்வரி ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14-6-2013) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பி.ப. 1.00 மணியளவில் தகனக் கிரியைகளுக்காக ஈவினை விலங்கன் இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சிவமகால் குணையாவீதி, ஈவினை, புன்னாலைக்கட்டுவன் வடக்கு, சுன்னாகம். (38310)

தகவல்: குடும்பத்தினர்.

## பாம்பால் கடியுண்ட இருவர் ஆஸ்பத்திரியில்

பாம்பால் கடியுண்ட இருவர் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இரவு வேளையில் வீதியில் நடந்து சென்ற வேளையில் பாம்பினால் கடியுண்ட இயக்கச்சி முகாவிலைச் சேர்ந்த மூத்த தம்பி ஜெயசிங்கம் (வயது-49) என்பவரும், உற்பத்திப் பயிருக்கு உரமிடுவதற்காக அதை எடுக்க வந்த விவசாயியான மட்டுவில் தெற்கைச் சேர்ந்த கிட்டினன் சண்முகம் (வயது-74) என்பவரும் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (வ-9)

## சமுர்த்தி அலுவலருக்கான பரீட்சை ஞாயிறன்று


யாழ். மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு அண்மையில் நியமிக்கப்பட்ட சமுர்த்தி உத்தியோகத்தர்களுக்கான பரீட்சை நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை பி.ப .2 மணிக்கு யாழ். வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலையில் நடைபெறுமென அறிவிக்கப் பட்டுள்ளது.

யாழ். மாவட்டப் பிரதேச செயலக பிரிவுகளுக்கு 331 சமுர்த்தி அலுவலர்கள் அண்மையில் நியமிக்கப்பட்டு கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (வ-9)

## மரண அறிவித்தல்கள்

### சரவணமுத்து பரம்சோதி

(வெங்கடேஸ்வரா உரிமையாளர்)



காரைநகர் இடைப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தியை வசிப்பிடமாகவும் கொண்ட சரவணமுத்து பரம்சோதி நேற்று (13.06.2013) வியாழக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

354/7, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (சி/9625)

தகவல்: குடும்பத்தினர்.

### மயில்வாகனம் இராசரத்தினம்



கோப்பாயைப் பிறப்பிடமாகவும், கோப்பாய் மத்தி அப்பிளானையை வசிப்பிடமாகவும் கொண்ட மயில்வாகனம் இராசரத்தினம் நேற்று(13.06.2013) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் மயில்வாகனம்-செல்லாச்சி தம்பதியரின் அன்புப் புதல்வரும், அம்பலவாணர், பூரணம் தம்பதியரின் அன்பு மருமகனும், இந்திராணியின் பாசமிகு கணவரும், சாந்தேஸ்வரி, தேவகி, தயாபரன், சகிலா(லண்டன்), ஜானகி, கிருபாகரன்(சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவபாலகுமாரன், தேவராசா, ஜர்மிளா, கிருஸ்ணானந்தன்(லண்டன்), ஸ்ரீவசந்தன்(லெபனான்), மஞ்சுளா (சுவிஸ்) ஆகியோரின் மாமனும், செந்தூர்க்கன், மதுரா, அனுசன், கேதுஜா-கங்காதரன், நிருஜன், ஜசிபன், தரணிகா, சதுர்சிகன், அபிஸ்(லண்டன்), ஸ்ரீசாந், விஷ்ணவன், பகீனன்(சுவிஸ்) ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான கனகம்மா, சண்முகலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற சரஸ்வதி மற்றும் மகேஸ்வரி, கந்தசாமி, நவரத்தினம், சற்குணநாதன், செல்வரத்தினம், யோகநாயகி ஆகியோரின் மைத்தனரும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் 14.06.2013 வெள்ளிக்கிழமை பி.ப. 2.00மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கந்தன்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அப்பிளானை, கோப்பாய் மத்தி, கோப்பாய்.

தகவல்: குடும்பத்தினர்.

### சுப்பையா சண்முகம் (ரைக்ரர் கார சண்முகம்)



சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும் இந்தியாவை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பையா சண்முகம் நேற்றுமுன்தினம் (12.06.2013) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பையா -முத்துப்பிள்ளை தம்பதியரின் மூன்றாவது புதல்வனும், காலஞ்சென்ற கந்தையா- தங்கம்மா தம்பதியரின் மருமகனும், அன்னலட்சுமியின் (தவம்) அன்புக் கணவரும், உருத்திரசிங்கம் (பிரான்ஸ்), இலங்கேஸ்வரன் (பிரான்ஸ்), ராஜேஸ்வரன் (பிரான்ஸ்), பரமேஸ்வரன் (இந்தியா), பாலசிங்கம் (இந்தியா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், கலாமதி (பிரான்ஸ்), கிருஸ்ணாநிதி (பிரான்ஸ்), தயாநிதி (பிரான்ஸ்), சுகிதா (இந்தியா) ஆகியோரின் மாமனும், பிரான்ஸ்சைச் சேர்ந்த திவ்யா, மதுமிதா, பவித்திரன், லச்சனா, நவரத்தினம், வைஷ்ணவி, அஸ்வினி ஆகியோரின் பாசமிகு தாத்தாவும், காலஞ்சென்றவர்களான பாலசிங்கம், நவரத்தினம், பொன்னம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற அன்னம்மா மற்றும் சிவபாக்கியம் (கனடா), காலஞ்சென்றவர்களான முருகையா, செல்வராசா மற்றும் சிவராசா (பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனரும், சத்தியசீலன் (அமெரிக்கா), சத்தியமேதர் (கனடா) ஆகியோரின் சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

இந்தியா- 0091 9840165965, 0091 9710955955, 0091 4426164360

பிரான்ஸ்- 0033 183740068, 0033 142432639, 0033 950905928

தகவல்: மனைவி, பிள்ளைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தென்மராட்சி பிரதேசத்தில் இயங்கும் கல் உடைக்கும் நிலையங்கள், அரிசி ஆலைகள், மர அரிவு நிலையங்கள் ஆகியவற்றில் பணிபுரியும் பணியாளர்களுக்கான சுவாச நோய் தொடர்பான சளிப் பரிசோதனை நேற்று முன்தினம் சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் இடம்பெற்றது. பரிசோதனைக்கு வந்தோரிடம் மாவட்ட காசநோய்த் தடுப்பு அலுவலர் வைத்திய கலாநிதி செ.யமுனானந்தா சோதனைகளை மேற்கொள்கிறார். (வ-9)

# ஊழியர்களுக்காக கழிக்கப்பட்ட பணம் வைப்பில் இடப்படவில்லை

## யாழ். மாவட்ட கூட்டுறவு ஆணையாளர் விசாரணையில் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 14

தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் கடமையாற்றும் ஊழியர்களின் சம்பளப் பணத்திலிருந்து மாதாந்தம் கழிக்கப்பட்ட பணம், வங்கியில் வைப்பிலிடப்படவில்லை என்று யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வி.அருந்தவநாதன் விசாரணைகளின் போது தெரிவித்துள்ளார்.

தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் கடமையாற்றி விலகிய ஊழியர் ஒருவர், தனது சம்பளப் பணத்திலிருந்து கழிக்கப்பட்ட பணம் மீளவழங்கப்படவில்லை அதனைப் பெற்றுத் தர நடவடிக்கை எடுக்கக் கோரி இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ். பிராந்தியக் கிளையில் முறைப்பாடு செய்துள்ளார்.

குறித்த முறைப்பாடு தொடர்பான விசாரணைக்குப் பதிலளிக்கும் போதே உதவி ஆணையாளர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

2005 ஆம் ஆண்டிலிருந்து ஊழியர்களிடம் மாதாந்தம் ஆயிரம் ரூபா கழிக்கப்பட்டுள்ளது. பின்னர் 2007 ஆம் ஆண்டிலிருந்து இந்தத் தொகையை இரட்டிப்பாக்கி இரண்டாயிரம் ரூபா வீதம் கழிக்கப்பட்டுள்ளது. சங்கத்தில் கடமையாற்றிய 93 ஊழியர்களிடம் இவ்வாறு கழிக்கப்பட்ட தொகை வட்டியுடன் செலுத்தப்பட வேண்டிய நிலுவை ஒரு கோடியே 13 லட்சத்து 26 ஆயிரத்து 426 ரூபா ஆகும்.

மேற்படி பணத்தொகை வங்கியில் வைப்பிலிடப்படவில்லை எனவும் உதவி ஆணையாளர் பதிலளித்தார்.


இந்த விடயம் தொடர்பில் சங்கத் தலைவர் எஸ்.தனபாலசிங்கத்தைத் தொடர்பு கொண்டு கேட்டபோது, ஊழியர்களிடமிருந்த பணம் கழிக்கப்பட்டமை உண்மைதான். 1999 ஆம் ஆண்டு மற்றும் 2006 ஆம் ஆண்டு புதிய கொடுப்பனவின் பிரகாரமே கழிக்கப்பட்டது.

கழிக்கப்பட்ட பணத்தைப் பயன்படுத்தியே சங்கத்துக்குத் தேவையான பொருள்களைக் கொள்வனவு செய்து இயக்கிக் கொண்டிருக்கிறோம். நிலைமை சீரானதும் ஊழியர்களுக்கான பணம் வழங்கப்படும் - என்றார்.

தற்போதுதான் சங்கம் இலாபத்தில் இயங்குகின்றதே எனக் கேட்க இன்னும் சில மாதங்களில் பணம் வழங்கப்படும்- என்றார். (வ-5-86)

# கோப்பாய் உணவு கையாளும் நிலையங்களில் பரிசோதனை

## 38 பேர் மீது வழக்கு



யாழ்ப்பாணம், ஜூன் 14

கோப்பாய் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்குட்பட்ட பகுதியில் உணவு கையாளும் நிலையங்கள் மீது மேற்கொள்ளப்பட்ட திடீர் சோதனை நடவடிக்கையில் 38 பேருக்கு எதிராக வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

கோப்பாய் பிரதேச மேற்பார்வை பொதுச் சுகாதார பரிசோதகர் தலைமையில் பொதுச்சுகாதார பரிசோதகர்கள் இணைந்து கடந்த திங்கட்கிழமை இரவு இந்தத் திடீர் சோதனை நடவடிக்கைகளை முன்னெடுத்தனர். இதன்போது பேக்கரிகள், சிற்றுண்டிச்சாலைகள் என்பன பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

மேலங்கி அணியாமல் தொழில் நடவடிக்கையில் ஈடுபட்டவர்கள், வைத்தியப் பரிசோதனை மேற்கொள்ளாமல் தொழில் நடவடிக்கையில் ஈடுபட்டவர்கள் எனப் பல்வேறு வகைகளில் உடல் நலத்துக்குக் கேடான முறையில் உணவு தயாரிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டவர்கள் இனம்காணப்பட்டனர். இனங்காணப்பட்டோரில் 13 பேருக்கு எதிராக யாழ். நீதிமன்றிலும், 25 பேருக்கு எதிராக மல்லாகம் நீதிமன்றிலும் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

இதேவேளை, திடீர் சோதனை நடவடிக்கைகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட வேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (வ-5)

# 13 ஆவது திருத்த சட்டத்தில் மாற்றம் ஏற்படுத்த எதிர்ப்பு

## வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச சபையில் தீர்மானம் நிறைவேற்றம்

வடமராட்சி, ஜூன் 14

13 ஆவது திருத்தச் சட்டத்தில் மாற்றம் செய்வதன் மூலம் தமிழ் மக்களை நிரந்தர அடிமைகளாக மாற்றுவதற்கு அரசு திட்டமிட்டுச் செயற்பட்டு வருகின்றது. இந்தத் திருத்தச் சட்டத்தில் மாற்றம் கொண்டு வருவதை வன்மையாகக் கண்டிக்கின்றோம் என வடமராட்சி தெற்கு மேற்குப் பிரதேச சபை தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

சபையின் மாதாந்தக் கூட்டம் நேற்று முன்தினம் பிரதேச சபை மண்டபத்தில் சபைத் தலைவர் பொ.வியாகேசு தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில் ஆளும்கட்சி உறுப்பினரான கே.பரஞ்சோதி இந்தக் கண்டனத் தீர்மானத்தை முன்மொழிந்தார். உறுப்பினர்களின் கருத்துப் பகிர்வைத் தொடர்ந்து தீர்மானம் சபையால் ஏகமனதாக நிறைவேற்றப் பட்டது.

இலங்கையில் இனங்களுக்கிடையே சமாதானம் ஏற்படுத்தும் நோக்கில் 1987 ஆம் ஆண்டில் இலங்கை அரசியல் அமைப்புக்கான 13 ஆவது திருத்தச் சட்டம் நிறைவேற்றப் பட்டது. இந்தத் திருத்தச் சட்டத்தின் மூலம் நிர்வாகப் பரவலாக்கலாக மாகாணங்களுக்கு சில அதிகாரங்கள் வழங்கப்பட்டிருந்தன.

ஆனால் ''திவிநெகும'' சட்டத்தின் மூலம் தமிழ் மக்களின் கருத்துக்களையும் செவி சாய்க்காது 15 அதிகாரங்களை அரசு மீளப்பெற்றுக் கொண்டுள்ளது. அத்துடன் நின்று விடாது முக்கிய அதிகாரங்களான காணி, பொலிஸ் அதிகாரங்கள் உட்படப் பலவற்றை நீக்கி 13 ஆம் திருத்தச் சட்டத்தில் மாற்றத்தைக் கொண்டு வர அரசு திட்டமிட்டுச் செயற்பட்டு வருகின்றது. இதன் காரணமாக தமிழ் மக்களை நிரந்தர அடிமைகளாக மாற்றுவதற்கும் அரசு திட்டமிட்டுச் செயற்பட்டு வருகின்றது.

எனவே, 13 ஆவது திருத்தச் சட்ட மாற்றம் கொண்டு வருவதை கரவெட்டி, வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச சபை கண்டிக்க வேண்டும் என முன்மொழியப்பட்ட கண்டனத் தீர்மானப் பிரேரணையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்தத் தீர்மானத்துக்கான பிரேரணை தொடர்பாக சபைத் தலைவர் பொ.வியாகேசு கருத்துத் தெரிவிக்கையில்:

இந்தத் திருத்தச் சட்டத்தில் மாற்றம் கொண்டு வருவதன் மூலம் சிறுபான்மையினரான தமிழ், முஸ்லிம் மக்களின் உரிமைகள் பறிக்கப்படுகின்றன. இந்தச் சட்டத்தை மாற்றுவதற்கு அரசில் உள்ள சிலர் ஆதரவு அளிக்கின்றனர். வேறு சிலர் கடுமையான எதிர்ப்புகளைத் தெரிவித்து வருகின்றனர். அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அந்தச் சட்டத்தில் மாற்றம் செய்ய சம்மதிக்கவில்லை என்றார்.

உறுப்பினர் ந.கந்தசாமி கருத்து வெளியிடுகையில் :-

யாழ். மாவட்டத்தில் உள்ள சகல பிரதேசசபைகளும் ஒன்றிணைந்து கண்டனத் தீர்மானம் கொண்டு வரவேண்டும் எனத் தெரிவித்தார்.

மற்றொரு உறுப்பினரான கே.இரத்தினம் கருத்துக் கூறுகையில்:-

இதே போன்ற கண்டனத் தீர்மானத்தை ஏனைய பிரதேச சபைகள் தனித்தனியாக நிறைவேற்றும். நாமும் இந்தத் தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டும்- என்றார்.

பிரேரணையைக் கொண்டு வந்த உறுப்பினர் கே.பரஞ்சோதி நான் இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்துள்ளேன். விரும்பினால் ஆதரவு தாருங்கள் இல்லையேல் வாக்கெடுப்புக்கு விடுங்கள் என தலைவரைப் பார்த்துக் கேட்டுக் கொண்டதுடன், இது ஜே.ஆர்.ஜெயவர்த்தனா தற்காலிக சமாதானத்துக்காக செய்து கொண்ட ஒப்பந்தமாகும். ஆனால் மாறி மாறி வந்த அரசுகள் இதனை நடைமுறைப்படுத்தவில்லை. தமிழ் மக்களை அடிமைப்படுத்தவே 13 ஆவது திருத்தச் சட்டத்தில் உள்ள சில அதிகாரங்களைப் பறித்து திவிநெகும சட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன. இது தமிழ் மக்களை நாடற்ற பிரஜைகளாக மாற்றுவதற்கு எடுக்கப்படும் முயற்சியாகும். எனவே இந்தக் கண்டனத் தீர்மானத்துக்கு அனைவரும் ஆதரவளிக்க வேண்டும்-என்றார்.

தலைவர் பதிலளிக்கையில், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கூட 13 ஆவது திருத்தச் சட்டத்தை ஒழிப்பதை விரும்பவில்லை. இந்தச் சட்டம் 13 க்கு மேலேயும் செல்ல வேண்டும் எனத் தெரிவித்தார்.

இறுதியில் கண்டனத் தீர்மானம் எதிரணியின் ஆதரவுடன் ஏகமனதாக நிறைவேறியது. (வ-8)

# உயிரிழந்த மீனவர்களுக்கு மயிலிட்டி சங்கம் இரங்கல்

யாழ்ப்பாணம், ஜூன் 14

தென் பகுதியில் அண்மையில் ஏற்பட்ட இயற்கை இடரில் சிக்கிய தென்பகுதி மீனவர்கள் பலர் காணாமற் போனமைக்கும், சிலரின் உயிர்கள் காவு கொள்ளப்பட்டதற்கும் மயிலிட்டித்துறை கடற் றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் மற்றும் வலி.வடக்கு மீள் குடியேற்ற குழுவும் இணைந்து இரங்கல் வெளியிட்டுள்ளன.

''ஒருநாள் போவார் ஒருநாள் வருவார் ஒவ்வொரு நாளும் துயரம், தனியாய் சென்றோர் தனிமையைத் தவிர துணையாய் வருபவர் யாரோ'' என்பதுதான் மீனவரின் வாழ்க்கை. தென்பகுதியில் அண்மையில் ஏற்பட்ட இயற்கை இடரில் சிக்குண்டு மீனவர்கள் பலர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பலர் உயிரிழந்தும், காணாமற் போயுமுள்ளனர். உயிரிழந்த உறவுகளின் ஆத்மா சாந்தியடைய வேண்டுவதோடு, அவர்களின் குடும்பத்தாருக்கு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (வ-5)

# பனையிலிருந்து தவறி விழுந்த தொழிலாளி உயிரிழப்பு

பனையிலிருந்து தவறி விழுந்த வயோதிபரான தொழிலாளிசம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். இந்தச் சம்பவம் கோண்டாவில் வடக்கு, குமரகோட்டம் வீதியில் நேற்றுமுன்தினம் முற்பகல் 10 மணியளவில் இடம்பெற்றது.

அந்த இடத்தைச் சேர்ந்த வீரகத்தி நாகலிங்கம் (வயது 66) என்ற இரண்டு பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்தார்.

நெடுங்காலமாகச் சீவல் தொழில் புரிந்து வந்த அவர் வழமை போன்று கடந்த புதன்கிழமை காலையிலிருந்து தொழிலில் ஈடுபட்டிருந்தார். இந்த நிலையிலேயே முற்பகல் அவர் பனையில் இருந்து தவறி விழுந்து உயிரிழந்தார் என உறவினர்கள் தெரிவித்தனர். சடலம் யாழ்.போதனா வைத்திய சாலைக்கு எடுத்துச்செல்லப்பட்டு விசாரணைகளின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (த-4)

# முதியோருக்கான இலவச மருத்துவ முகாம்

பருத்தித்துறை ஸ்ரீசத்திய சாயி சேவா நிலையத்தால் முதியோருக்கான இலவச மருத்துவ முகாம் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணி தொடக்கம் 3 மணிவரை சேவா நிறுவன மண்டபத்தில் நடைபெறும். (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கச்சதீவு மீட்பு விரைவில்

## மத்திய இணை அமைச்சர் நராயணசாமி தகவல்

புதுடில்லி, ஜூன் 14
கச்சதீவை மீட்பதற்கான நடவடிக்கை விரைவில் மேற்கொள்ளப்படும் என்று மத்திய இணை அமைச்சர் நாராயணசாமி தெரிவித்துள்ளார். பட்டமளிப்பு விழா ஒன்றில் கலந்துகொள்ள திருநின்றவூர் வந்திருந்த அமைச்சர் நாராயணசாமி அங்கு செய்தியாளர்களைச் சந்தித்தபோதே இவ்வாறு தெரிவித்தார்.
தமிழக மீனவர்கள் தொடர்ந்தும் இலங்கைக் கடற்படையினரால் தாக்கப்படுவது குறித்து அவரிடம் கேட்டபோது,
''இது தொடர்பாக இலங்கை அரசிடம் மத்திய அரசு ஆலோசனை நடத்தி வருகிறது. விரைவில் தமிழக-இலங்கை எல்லையில் இந்திய இராணுவக் கப்பல்கள் பாதுக்காப்புப் பணியில் ஈடுபடுத்தப்படும். தற்போது தமிழக மீனவர்கள் 10 பேரும், ஆந்திர மீனவர் கள் 35 பேரும் இலங்கை சிறையில் உள்ளனர். அவர்களை மீட்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.'' என்றார்.
கச்சதீவு விவகாரம் தொடர்பாக அவரிடம் கேட்டபோது,
''கச்சத்தீவை மீட்பது தொடர்பாக தமிழக காங்கிரஸ் தலைவர் ஞானதேசிகன், தி.மு.க. தலைவர் கருணாநிதி மற்றும் தமிழக முதல்வர் ஆகியோர் மத்திய அரசுக்கு கடிதம் அனுப்பியுள்ளனர். இது குறித்து பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது. விரைவில் இந்தியா, இலங்கைக்கு இடையேயான ஒப்பந்தம் மீறப்படாமல் கச்சத்தீவை மீட்பது குறித்து நடவடிக்கை எடுக்கப்படும்.'' என்று கூறினார்.
தமிழகத்தில் இலங்கை இராணுவத்துக்கு பயிற்சிகள் வழங்கப்படுவது குறித்துக் கருத்துத் தெரிவிக்கும்போது, ''இலங்கையில் உள்ள இந்தியர்களின் பாதுகாப்புக் குறித்தும் மத்திய அரசு கரிசனை கொண்டுள்ளது. விரைவில் இலங்கை இராணுவத்தினர் திருப்பி அனுப்பப்படுவார்கள் என்று எதிர்பார்க்கின்றேன்,'' என்றார் அவர்.(ற)

# பயணிகள் ரயில் மீது மாவோயிஸ்ட் தாக்கு

பாட்னா, ஜூன் 14
பிஹாரில் பயணிகள் ரயில் மீது மாவோயிஸ்டுகள் தாக்குதல் நடத்தியுள்ளனர். பிஹார் மாநிலம் ஜமுய் மாவட்டத்தில் இந்த தாக்குதல் சம்பவம் நடந்துள்ளது.
பாட்னாவில் இருந்து தான் பாத்திற்கு ரயில் சென்று கொண்டிருந்தபோதே மாவோயிஸ்டுகளின் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளது.
100க்கும் மேற்பட்ட மாவோயிஸ்டுகள் இந்தத் தாக்குதலில் ஈடுபட்டனர் என்றும், தாக்குதலில் பயணிகள் ஒரு சிலர் காயமடைந்தனர் என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (ற)

### சத்தீஸ்கர் தாக்குதல்

# புலன் விசாரணை ஆரம்பமாகியது


புதுடில்லி, ஜூன் 14
சத்தீஸ்கரில் மாவோயிஸ்ட்கள் நடத்திய தாக்குதல் தொடர்பாக இந்திய தேசிய புலனாய்வு அமைப்பின் விசாரணை தொடங்கியுள்ளது. தாக்குதல் நடந்த பஸ்தர் மாவட்டத்துக்கு, உயரதிகாரிகளைக் கொண்ட தேசிய புலனாய்வு அமைப்பின் குழு சென்றடைந்துள்ளது.
தாக்குதலுக்குக் காரணம், மத்திய படைகளின் பாதுகாப்பு குறைபாடுகளா? அல்லது மாநில அரசின் போதிய பாதுகாப்பின்மையா? என்பது பற்றி தேசிய புல னாய்வு அமைப்பினர் முதற்கட்ட விசாரணைகளை மேற்கொண் டுள்ளனர்.
நக்சல்களின் முன்னணி தலைவர் சுதர்சன், தாக்குதலுக்கு மூளையாக செயல்பட்டிருக்ககூடும் எனச் சந்தேகம் எழுந்துள்ள நிலையில், பாதுகாப்பு குறைபாடுக்கு காரணமானவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என மத்திய உள்துறை இணை அமைச்சர் ஆர்.பி.என்.சிங் தெரிவித்துள்ளார்.
சத்தீஸ்கரில் கடந்த 25ஆம் திகதி மாவோயிஸ்ட்கள் நடத்திய தாக்குதலில் காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர் சுக்லா, அந்த மாநில காங்கிரஸ் தலைவர் நந்த் குமார் படேல், அவரது மகன் தினேஷ் உள்பட 27 பேர் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.(ற)

# சேலத்தில் சிறுநீரக விற்பனை

### பொலிஸார் தீவிர விசாரணை


சென்னை, ஜூன் 14
சேலம் மாவட்டத்தில் சிறுநீரகம் விற்கப்படுகின்றது என்று கிடைக்கப்பெற்ற தகவலை அடுத்து நடத்தப்பட்ட விசாரணைகளில் திடுக்கிடும் தகவல்கள் வெளியாகியுள்ளன. விசாரணைகளின் அடிப்படையில் சிறுநீரக மாற்று அறுவைச் சிகிச்சை நிபுணர் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.
இதுகுறித்து பொலிஸார் கூறும்போது,
''இரண்டு மருத்துவமனைகளில் விசாரணையை தொடர்கிறோம். குறித்த நிபுணரிடம் 80 பேர்கள் சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை செய்துள்ளனர். தேவை ஏற்பட்டால் அந்த 80 பேரையும் அழைத்து அவர் களிடமும் விசாரிப்போம்'' என்றனர்.
இதேவேளை, நீதிமன்றில் இது தொடர்பாக ஒருவர் தானாகவே சரணடைந்துள்ளார்.
''சரணடைந்தவர் தனியார் மருத்துவமனையில் அம்புலன்ஸ் ஓட்டுநராக வேலை பார்க்கிறார். இவர் தரகராக இருந்தவர். குறிப்பிட்ட அப்பகுதியில் நெசவுத் தொழில் செய்வோரே அதிகம் வசிக்கின்றனர். அந்தத் தொழில் நலிவடைந்ததால் வாங்கிய கடனுக்கே வட்டி கூட கட்ட முடியாமல் சிறு நீரகத்தை இழந்தவர்கள் தான் அதிகம். அதை விற்றுத் தான் கடன் அடைத்துள்ளனர். இந்த மக்களை குறி வைத்தே இங்கு நூற்றுக்கு மேற்பட்ட தரகர்கள் உள்ளனர்'' என்கின்றனர் அந்தப் பகுதி மக்கள்.
பொலிஸார் இது குறித்து தீவிர விசாரணைகளை முடுக்கி விட்டுள்ளனர். (ற)





மும்பையில் பெய்துவரும் கடும் மழையால் வீதிகள் எங்கும் வெள்ளம் பாய்கின்றது. போக்குவரத்துப் பாதிக்கப்பட்டுள்ளதால் மக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

# கவிஞர் வாலிக்கு உடல்நலக் குறைவு



சென்னை, ஜூன் 14
கவிஞரும், திரைப்பட பாடலாசிரியருமான வாலி உடல் நலக் குறைவு காரண மாக மருத்துவமனை யில் சேர்க்கப்பட்டுள்ளார்.
நேற்றுக் காலை திடீரென வாலிக்கு (வயது 82) மூச்சுத் திணறல் ஏற்பட்டதை அடுத்தே அவர் உடனடியாக நுங்கம்பாக்கத்தில் உள்ள தனியார் மருத்துவமனை யில் சேர்க்கப்பட்டார். அங்கு அவருக்கு மருத்துவர்கள் தீவிர சிகிச்சை அளித்து வருகின்றனர். (ற)

# முடிவெடுக்கவில்லை

### மாநிலங்களவை தேர்தல் குறித்து கருணாநிதி

சென்னை, ஜூன் 14
மாநிலங்களவைத் தேர்தல் குறித்து எந்த ஒரு முடிவும் எடுக்கப்படவில்லை என்று தி.மு.க. தலைவர் கருணாநிதி தெரிவித்துள்ளார்.
மாநிலங்களவைத் தேர்தலில் போட்டியிடுவது குறித்து தி.மு.க. தலைவர் கருணாநிதி அக்கட்சியின் உறுப்பினர்களுடன் நேற்று அவசர ஆலோசனை நடத்தினார்.
சென்னை அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்ற ஆலோசனைக்கூட்டத்திற்குப் பின்னர் செய்தியாளர்களை சந்தித்த கருணாநிதி,
''மாநிலங்களவைத் தேர்தல் குறித்து எந்த ஒரு முடிவும் எடுக்கவில்லை . மனு தாக்கல் செய்ய இன்னும் 4 நாள்கள் உள்ளதால் தகுந்த ஆலோசனைக்குப் பின்னர் உரிய நேரத்தில் முடிவு எடுக்கப்படும்'' என்றார்.
23 உறுப்பினர்களைக் கொண்டுள்ள திராவிட முன்னேற்ற கழகம், 10 உறுப்பினர்களைக் கொண்டுள்ள மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் ஆதரவைப் பெற முயற்சித்து வருகின்றது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. அதனை உறுதி செய்வது போல் செய்தியாளர்கள் சந்திப்பில் பேசிய கருணாநிதி ''குறிப்பிட்ட எந்தக் கட்சியிடமும் இதுவரை ஆதரவு கோரவில்லை. ஆனால் கட்சிகளின் ஆதரவைப் பெற முயற்சி செய்து வருகின்றோம்'' என்று தெரிவித்தார். (ற)

# சமரச முயற்சிகளில் அத்வானி

### கூட்டணிக் கட்சிகளுடன் பேசினார்

புதுடில்லி, ஜூன் 14
பா.ஜ.கவில் நரேந்திர மோடிக்கு அளிக்கப்படும் முக்கியத்துவத்தை அடுத்து எழுந்துள்ள பிரச்சினை குறித்து ஐக்கிய ஜனதா தளம் தலைவர்களான நிதிஷ்குமார், சரத்யாதவ் ஆகியோருடன் தொலைபேசியில் பேசியுள்ள அத்வானி கூட்டணியில் தொடர்ந்து நீடிக்குமாறும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

#### 3ஆவது அணி

நரேந்திர மோடிக்கு பா.ஜ.கவில் முக்கியத்துவம் அதிகரிப்பதை தொடர்ந்து, பா.ஜனதா கூட்டணியில் விரிசல் ஏற்பட்டு உடையும் நிலை உருவாகி வருகிறது. ஐக்கிய ஜனதா தளம் கட்சி அது குறித்து இன்னும் இரண்டு நாள்களில் தனது முடிவை அறிவிக்க இருக்கிறது.
காங்கிரஸ் மற்றும் பா.ஜ.க. தலைமையிலான கூட்டணிக்கு மாற்றாக, 3ஆவது புதிய அணி தொடங்கும் முயற்சியும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மூன்று மாநில முதலமைச்சர்களான நிதிஷ்குமார், மம்தா பானர்ஜி, நவீன் பட்நாயக் ஆகியோர் இது குறித்து ஆலோசனை நடத்தியுள்ளனர்.

#### அத்வானி பேச்சு

அதிரடி பதவி விலகல் மூலம் பா.ஜ.கவுக்கு அதிர்ச்சி வைத்தியம் அளித்த அத்வானி, பதவி விலகல் முடிவை மாற்றித் தற்போது கூட்டணியில் இருந்து ஐக்கிய ஜனதா தளம் பிரிந்து செல்வதை தடுக்க முயற்சிகளை மேற்கொள்கின்றார்.
ஐக்கிய ஜனதா தளம் தலைவரும், பா.ஜனதா கூட்டணியின் அமைப்பாளருமான சரத்யாதவ், பீகார் முதலமைச்சர் நிதிஷ்குமார் ஆகியோருடன் அவர் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசினார். அப்போது அவர், ''கூட்டணியில் தொடர்ந்து நீடித்து அடுத்த நாடாளுமன்ற தேர்தலை சந்திக்க வேண்டும்'' என்று வேண்டுகோள் விடுத்துள்ளார். (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரகசியம் பேணுவதால் எமக்கே பாதிப்பு

## அமெ.அரசிடம் வலியுறுத்தும் சமூக வலைத்தளங்கள்

நியூயோர்க், ஜூன் 14
அமெரிக்க அரசால் தம்மிடம் கேட்கப்படும் தகவல்கள் குறித்த விவரங்களை பகிரங்கமாக வெளியிட அனுமதிக்க வேண்டும் என்று கூகுள், பேஸ்புக், மைக்ரோ சொப்ட் ஆகிய முன்னணி நிறுவனங்கள் அரசிடம் கோரியுள்ளன.
சமூக வலைத்தளங்களின் முழுமையான கட்டுப்பாடு அமெரிக்காவின் தேசியப் பாதுகாப்பு அமைப்பிடம் உள்ளது என்று 'கார்டியன்' இதழ் அண்மையில் வெளியிட்ட தகவலை அடுத்தே இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.
'பிரிசம்' என்ற திட்டத்தின் மூலம் இணைய வழங்கிகளை அமெரிக்கா உளவு பார்க்கின்றது என்று 'கார்டியன்' இதழில் தகவல் வெளியாகியிருந்தது. 'கார்டியன்'வெளியிட்ட தகவல் தவறு என்று கூறிவரும் சமூக வலைத்தளங்கள், தம்மிடம் கேட்கப்படும் தகவல்கள் இரகசியமாக இருப்பதால்தான் இதுபோன்ற ஊகங்கள் கிளம்புகின்றன என்றும் கூறியுள்ளன.(ற)

# மேலாடை இன்றி போராடியோருக்கு 4 மாதம் சிறை

## டுனிசியா நீதிமன்று வழங்கியது

டுனிஸ், ஜூன் 14
டுனிசியாவில் அமீனா டைலர் என்ற பெண்ணிய ஆர்வலர் கைது செய்யப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து மேலாடை இன்றிப் பொது இடத்தில் போராட்டம் நடத்திய மூன்று பெண்களுக்கு நான்கு மாதச் சிறைத் தண்டனை விதித்தது டுனிசியா நீதிமன்றம்.
தமது எதிர்ப்பைக் காட்டவே அவ்வாறு போராட்டத்தில் ஈடுபட்டனர் என்று நீதிமன்றில் வாதிடப்பட்டாலும், இஸ்லாமிய மதத்தை அவமதித்தார்கள் என்ற அடிப்படையில் அவர்களுக்கு இந்தத் தண்டனை வழங்கப்பட்டுள்ளது.
இதேவேளை, கடந்த செப்ரெம்பர் மாதம் 14ஆம் திகதி அமெரிக்க தூதரகத்தில் நடந்தேறிய வன்முறை சம்பவங்களில் ஈடுபட்டவர்களுக்கு பணி இடை நீக்கமே வழங்கப்பட்டது. அந்த வகையில் பெண்ணிய ஆர்வலர்களுக்குச் சிறைத் தண்டனை அளித்திருப்பது பாரபட்சமான செயலாகும் என்று கண்டனம் வெளியிடப்பட்டுள்ளது.(ற)

# மண்டேலா உடல் நிலை மேலும் மோசம்

ஜொகன்னஸ்பேர்க், ஜூன் 14
மருத்துவனையில் அனுமதிக்கப்பட்டுள்ள தென்னாபிரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி நெல்சன் மண்டேலாவின் உடல்நிலை தொடர்ந்தும் கவலைக்கிடமாக உள்ளது என்று தென்னாபிரிக்க அரசு தெரிவித்துள்ளது.
தொடர்ந்து 4 தினங்களாக தீவிர சிகிச்சைகளுக்கு உட்படுத்தப்பட்டுவரும் நெல்சன் மண்டேலா நுரையீரல் அழற்சியால் பாதிக்கப்பட்டுள்ளார் என்று மருத்துவனை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.
இதேவேளை, மண்டேலாவுக்கு சிகிச்சை அளித்து வரும் மருத்துவக் குழுவினரை தென்னாபிரிக்க ஜனாதிபதி ஜேகப் ஸுமா சந்தித்து, மண்டேலாவின் உடல்நிலை குறித்துக் கேட்டறிந்தார்.(ற)



ஜேர்மனியின் வடகிழக்குப் பகுதியில் ஏற்பட்டுள்ள கடும் வெள்ளப்பெருக்குக் காரணமாக அங்கு இயல்பு நிலை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. அங்குள்ள எல்பி நீர்த்தேக்கத்தின் அணை உடைத்தமையால் அருகில் உள்ள கிராமங்கள் அனைத்தும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. வெள்ள அனர்த்தங்களால் இதுவரை 4 பேர் உயிரிழந்துள்ளனர்.


# பாராட்டியவர் பதவி நீக்கம்

லாகூர், ஜூன் 14
பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப்பின் தடையையும் மீறி, அவருக்கு பாராட்டு விளம்பரம் கொடுத்த அரச அதிகாரி ஒருவர் பதவியில் இருந்து நீக்கப்பட்டார்.
ஷெரீப் பிரதமராகத் தெரிவாகியதும், ஏராளமான வாழ்த்துகள் பத்திரிகைகளில் வெளியாகின்றன. அரச துறைகளும் பாராட்டு விளம்பரங்களைக் கொடுத்துள்ளன.
எனினும் இதுகுறித்து ஷெரீப் கூறும்போது, "அரச பணத்தை வாரி இறைப்பதை நான் விரும்பவில்லை. இது போன்ற தேவையில்லாத செலவுகள் செய்வதைத் தவிர்க்க வேண்டும். மீறி விளம்பரம் செய்பவர்கள் மீது, கடும் நடவடிக்கை எடுக்கப்படும்" என்று தெரிவித்திருந்தார். அதன்பின்னர் பத்திரிகையில் விளம்பரம் கொடுத்த அரச அதிகாரியே தற்போது பதவியிழந்து இருக்கின்றார். (ற)

# மீண்டும் மோதல்

## தடைப்பட்டன கொரியப் பேச்சுக்கள்

சியோல், ஜூன் 14
தென்கொரியாவுக்கும் வட கொரியாவுக்கும் இடையே இடம்பெறவிருந்த அமைதிப் பேச்சுக்கள் இரு நாடுகளுக்கும் இடையே ஏற்பட்ட கருத்து வேறுபாடுகளால் தடைப்பட்டுள்ளன.
சமதகுதி வாய்ந்த அதிகாரிகளை பேச்சுக்களில் ஈடுபடுத்துவது தொடர்பிலேயே இரு நாடுகளுக்கும் இடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டுள்ளது. அதையடுத்து இரு நாடுகளுக்கும் இடையிலான பேச்சுக்கள் தடைப்பட்டுள்ளன என்று அங்கிருந்து வரும் தகவல்கள் கூறுகின்றன.
இதுகுறித்துக் கருத்து வெளியிட்டுள்ள தென்கொரிய ஒருங்கிணைப்பு அமைச்சகம், "வடகொரிய தலைவர் கிம் ஜோங் உன்-னிற்கு நெருங் கிய மூத்த அதிகாரி பேச்சுக் களில் கலந்துகொள்வார் என்று எதிர்ப்பார்க்கப்பட்ட நிலையில் வேறொரு அதிகாரி வருவார் என்று தற்போது அறிவிக்கப்பட்டுள்ளது. தென்கொரியாவுடன் நல்லுறவைக் காக்க வட கொரியா அக்கறை காட்ட வேண்டும்" என்று தெரிவித்துள்ளது.
இந்தக் கருத்து மோதல்களை அடுத்து கொரிய நாடுகளுக்கு இடையே 6 ஆண்டுகளுக்குப் பின்னர் நடைபெறவிருந்த அமைதிப் பேச்சுக்கள் தடைபட்டுள்ளன.(ற)



# காலத்துக்கேற்ற மாற்றம் சிரியாவில் தேவை

## ரஷ்யாவின் போக்கிலும் மாற்றம்

மொஸ்கோ, ஜூன் 14
"சிரியாவில் காலத்துக்கு ஏற்றவாறு மாற்றங்கள் செய்யப்படாமையே தற்போதைய பிரச்சினைக்குக் காரணம்" என்று கூறியுள்ளது ரஷ்யா.
கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக நடைபெற்று வரும் சிரிய உள்நாட்டுப் போரில், பெரும்பாலான ஐரோப்பிய நாடுகள் சிரிய ஜனாதிபதி அசாத்துக்கு எதிராகச் செயற்பட்டுவருகின்றன. எனினும் ரஷ்யா மட்டுமே சிரிய ஜனாதிபதிக்கு ஆதரவாக இதுவரை செயற்பட்டு வந்தது.
தற்போது ரஷ்யாவும் தனது போக்கில் இருந்து மாறி வருகின்றது என்று அரசியல் நோக்கர்கள் குறிப்பிடுகின்றனர். அதற்கேற்றவாறு ரஷ்யாவும் கருத்துகளை வெளியிட்டு வருகின்றது.
சிரிய உள்நாட்டுப் பிரச்சினை தொடர்பாக கருத்து வெளியிட்டுள்ள ரஷ்ய ஜனாதிபதி புடின் கருத்துக் கூறும்போது, "சிரியாவில் காலப்போக்குக்கு ஏற்றவாறு மாற்றங்களை சிரிய ஜனாதிபதி மேற்கொள்ளவில்லை. அதுவே தற்போதைய பிரச்சினைகளுக்கு மூல காரணமாகும். உரிய மாற்றங்களை அவர் செய்ய வேண்டும். சிரியாவில் மீண்டும் இதுபோன்ற பிரச்சினைகள் ஏற்படக் கூடாது" என்று தெரிவித்தார்.
ரஷ்யாவின் இவ்வாறான நிலைப்பாடு சிரிய அரசுக்கு மேலும் நெருக்கடிகளை ஏற்படுத்தக்கூடும் என்று கூறப்படுகிறது.
ரஷ்யாவும் தனது போக்கில் இருந்து மாறும் பட்சத்தில் ஒரு சில அரபு நாடுகளின் ஆதரவே சிரியாவுக்கு எஞ்சும் என்பது குறிப்பிடத்தக்கது. (ற)

# பாகிஸ்தானுக்கான நிதி நிறுத்தப்பட வேண்டும்

## அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர் கோரிக்கை

நியூயோர்க், ஜூன் 14
பாகிஸ்தான் இராணுவத்துக்கு என அமெரிக்காவால் வழங்கப்படும் நிதியுதவியை நிறுத்த வேண்டும் என்று அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர் டொனா ரோரபேச்சர் கோரிக்கை விடுத்துள்ளார்.
ஒஸாமா பின்லேடனை கண்டுபிடிக்க உதவிய மருத்துவர் அப்ரிதியை பாகிஸ்தான் அரசு சிறையில் அடைத்துள்ளமை பாகிஸ்தான் அரசு தீவிரவாதிகளின் பக்கமே சாய்ந்துள்ளது என்பதைக் காட்டுகின்றது என்று தெரிவித்துள்ள அவர் பாகிஸ்தான் அரசு இவ்வாறான செயற்பாடுகளைக் கைவிடும் வரை அந்த நாட்டுக்கான நிதியுதவியை நிறுத்துமாறு கோரிக்கை விடுத்துள்ளார்.
தீவிரவாத இயக்கங்களுக்கு பாகிஸ்தான் நிதியுதவி அளித்துவரும் நிலையில் இவ்வாறான அமெரிக்காவின் நிதியுதவி அந்தநாட்டுக்குத் தேவையில்லை என்றும் அவர் மேலும் வலி[illegible] [illegible] ஷியாவுக்கான வெளிநாட்டு விவகாரங்கள் துறை துணைக் குழுவின் தலைவராக உள்ள ரோஹ்ரபச்சர் ஏற்கெனவே கொண்டுவந்த இதுபோன்ற தீர்மானங்கள் தோல்வி அடைந்துள்ளன.
அமெரிக்கா 2001ஆம் ஆண்டு முதல் பாகிஸ்தானுக்கு 3.94 [illegible] நிதியுதவி [illegible] குறிப்பிடத்தக்கது. (ற)

# கிளர்ச்சியாளர்களின் தாக்குதலில் சிரியாவில் 60 பேர் உயிரிழப்பு

டமாஸ்கஸ், ஜூன் 14
சிரியாவில் கிளர்ச்சியாளர்கள் மேற்கொண்ட தாக்குதலில் 60 பேர் உயிரிழந்துள்ளனர்.
சிரியாவின் கிழக்குப் பிராந்தியத்தில் உள்ள ஹட்லா பகுதியிலேயே இந்தச் சம்பவம் நடைபெற்றுள்ளது. தம்மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலுக்கு பதிலடியாகவே கிளர்ச்சியாளர்கள் குறித்த கிராமத்தின் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர்.
தாக்குதலில் 60 பேர் உயிரிழந்துள்ளனர் என்றும் பெருந்தொகையானோர் கிராமத்தை விட்டு தப்பியோடுகின்றனர் என்றும் அங்குள்ள மனித உரிமை அமைப்புகள் தகவல் தெரிவிக்கின்றன. (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'அந்தோனியார் காவியம்' நாட்டுக்கூத்து நூல் நாளை வெளியீடு

கொழும்புத்துறை, ஜூன் 14

பாஷையூர் புனித அந்தோனியார் திருவிழாவையொட்டி 'அந்தோனியார் காவியம்' நாட்டுக்கூத்து நூல் வெளியீட்டு விழா நாளை சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

கலாபூஷணம் அண்ணாவியார் மு.அருள்பிரகாசம் எழுதிய இந் நூல் நாளை மாலை 6 மணிக்கு அந்தோனியார் விளையாட்டுக் கழக அரங்கில் வெளியிடப்படவுள்ளது.

பதுவையர் கலாமன்றத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள வெளியீட்டு விழா பாஷையூர் பங்குத் தந்தை அருட்திரு றோய் பேடினன் தலைமையில் நடைபெறும்.

வெளியீட்டுரையை திருமறைக் கலாமன்ற பிரதி இயக்குநர் யோ.யோண்சன் ராஜ்குமாரும் ஆய்வுரையை கொழும்புத்துறை புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி அதிபர் அருட்திரு மைக்கல் சவுந்தரநாயகம் அடிகளும் நிகழ்த்துவர்.

இறுதியில் புனித அந்தோனியார் நாட்டுக் கூத்தும் இடம்பெறும். (ஓ-135)


### துயர் பகிர்கின்றோம்



எமது பாடசாலையில் கணித ஆசிரியராகக் கடமையாற்றும் திருமதி க.க.சிதரன் அவர்களின் அன்புத் தந்தை

**வல்லிபுரம் முருகேசு**

அவர்களது மறைவையிட்டு துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(38292) (3.6.11)

பாடசாலை சமூகம், யா/ நயினாமடு மகேஸ்வரி வித்தியாசாலை



### 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம்
14.01.1949

மறைவு
16.05.2013



திருமதி **கெங்காதேவி துரைராஜா**

*எமதருமை பாசமிகு அன்னையே!*
*எமை விட்டு நீ பிரிந்தாலும்*
*எம் நினைவின் நிழலாய் என்றும் நீ வாழ்கின்றாய்*
*இன்பத்தைத் தந்து எமை வளர்த்த எம் அன்னையே!*
*இன்று துன்பத்தைத் தந்து இறைவனடி சேர்ந்தாயே!*
*எமதுயிர் பிரியும் வரை இத்துயரம் மாறாதே*
*உங்கள் நினைவின் நிழலும் எம்மை விட்டுப் போகாதே*

என்றும் உன் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்
ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

எமது தாயார் நோயுற்றிருந்தபோது பல வழிகளிலும் அவருக்கு ஒத்தாசை புரிந்த வைத்தியர்கள் மற்றும் சக உத்தியோகத்தர்கள், உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதோடு, எமது தாயாரின் மறைவுச் செய்தி கேட்டு அனுதாபம் தெரிவித்த அனைத்து உள்ளங்களுக்கும் எமது உளம் கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நெட்டிலிப்பாய், கோண்டாவில். (34516)(6.7.31) குடும்பத்தினர்.



### நன்றி நவிலல்

திருமதி **குழந்தைவேல் பரிமளாதேவி**



எமது குடும்பத்தின் ஒளிவிளக்காய்த் திகழ்ந்த எமது அன்புத்தாய் திருமதி குழந்தைவேல் பரிமளாதேவி கடந்த 05.06.2013 அன்று இறைவனடி சேர்ந்த செய்தி கேட்டு அன்னாரின் இல்லத்தில் கொழும்பி லும் வட்டுக்கோட்டை யிலும் நேரில் கலந்து கொண்டு அன்னாரின் பூதவுடலுக்கு அஞ்சலி செலுத்திய உற்றார், உறவினர்கள் மற்றும் அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் அவர்களின் செயலாளர்கள், இணைப்பாளர்கள், அரசியல் பிரமுகர்கள், கட்சி அமைப்பாளர்கள், அரசியல் கட்சித் தலைவர்கள், கொழும்பு மாநகர சபை மற்றும் வலிகாமம், எட்டியாந்தோட்டை, பிரதேச சபைகள் ஆகியவற்றின் உறுப்பினர்கள், வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கம் உள்ளிட்ட சங்கங்கள், அமைப்புகளின் தலை வர்கள், பிரதிநிதிகள், ஊடகத்துறையினர் மற்றும் நண்பர்களுக்கும், தொலைபேசி, தந்தி, மின்னஞ் சல்கள், தபால் மடல்கள் மூலம் வெளிநாடுகளிலி ருந்தும் உள்ளூரில் இருந்தும் ஆறுதல் கூறியோருக் கும் மலர் மாலை, மலர்வளையம் சமர்ப்பித் தோருக் கும், பதாகைகள் மற்றும் கண்ணீர் அஞ்சலிகளை வெளியிட்டோருக்கும் இறுதிக்கிரியை அன்று அஞ்சலி உரை நிகழ்த்திய அனைத்துப் பிரமுகர் களுக்கும் உணவு ஆகாரம் அளித்தோருக்கும் சகல வழிகளிலும் உறுதுணையாக நின்று இறுதி வரை உதவி புரிந்த அனைவருக்கும் எமது நன்றி நவிலலைத் தெரிவித்துக்கொள்கின்றோம். ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(சி/8955) (45.6.3) குடும்பத்தினர்.


### சமய சந்நிதிகளில்

வண்ணை விசுவேச விநாயகர் ஆலய வருடாந்த பெருந்திருவிழா இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்மாகவுள்ளது. தொடர்ந்து 10 தினங்கள் திருவிழா நடைபெறும்.

எதிர்வரும் 22 ஆம் திகதி சனிக் கிழமை முற்பகல் 10.30 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (வ)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஜூன் 14

செருத்தனைப்பதி இராஜ மகாமாரி அம்பாள் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா இன்று முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. தொடர்ந்து 18 தினங்கள் திருவிழா நடை பெறும். (வ)

★ ★ ★

தென்மராட்சி, ஜூன் 14

சாவகச்சேரி பெருங்குளம் ஸ்ரீ அம்பலவாணர் வீரகத்தி விநாயகர் ஆலய பெருந்திருவிழா இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்து தினங்கள் நடைபெறும்.

எதிர்வரும் 22 ஆம் திகதி தேர்த்திரு விழாவும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும்.

பெருந்திருவிழா கிரியைகள் பிரதிஸ்டாசிரோமணி சிவஸ்ரீ சு.க. சோமஸ்கந்தக் குருக்கள் தலைமையில் நடைபெறும். (வ-9)

★ ★ ★

தென்மராட்சி, ஜூன் 14

சாவகச்சேரி மண்டுவில் இலஞ்சியாரணியம் சோலை அம்மன் ஆலய பெருந்திருவிழா இன்று வெள்ளிக்கிழமை மு.ப.10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்து தினங்கள் இடம்பெறும். எதிர் வரும் 22 ஆம் திகதி தேர்த்திரு விழாவும் மறுநாள் ஞாயிற்றுக் கிழமை தீர்த்தத் திரு விழா வும் இடம்பெறும். (வ-9)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஜூன் 14

சரவணை, பள்ளம்புலம் முருகமூர்த்தி ஆலய வருடாந்த பெருந்திருவிழா இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. தொடர்ந்து 11 தினங்கள் திருவிழா நடைபெறும். எதிர்வரும் 22 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு தேர்த் திருவிழா வும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும்.

★ ★ ★

யாழ்ப்பாணம், ஜூன் 14

பெருமாக்கடவை சித்தி விநாயகர் ஆலய வருடாந்த பெருந்திருவிழா இன்று வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. தொடர்ந்து பத்துத் தினங்கள் திருவிழா இடம்பெறும்.

எதிர்வரும் 22 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு தேர்த் திருவிழாவும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளது. (வ)

★ ★ ★

வடமராட்சி, ஜூன் 14

புலோலி புற்றளை சித்தி விநாயகர் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா இன்று வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது. எதிர்வரும் 20 ஆம் திகதி வியாழக்கிழமை வேட்டை திருவிழாவும், 21 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சப்பரத் திருவிழாவும், 22 ஆம் திகதி சனிக்கிழமை தேர்த் திருவிழாவும், 23 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (ந-8)

## ஜனாதிபதி செயலகத்தில் குருதிக்கொடை நிகழ்வு

யாழ்ப்பாணம்., ஜூன் 14

உலக குருதி கொடையாளர் தினம் இன்று 14 ஆம் திகதி அனுஷ்டிக்கப்படுகின்றது. இந்த நிகழ்வு நாடெங்கும் குருதிக் கொடையாளர்கள் இரத்ததான நிகழ்வு ஒழுங்கமைப்பாளர்களால் கொண்டாடப்படவுள்ளது. இதேவேளை ஜனாதிபதி செயலகத்தில் வைத்து குருதிக் கொடையாளர்கள், இரத்ததான ஒழுங்கமைப்பாளர்கள், ஜனாதிபதியால் விருது வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளனர். மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த 65 குருதிக்கொடையாளர்களும், 10 இரத்ததான நிகழ்வு ஒழுங்கமைப்பாளர்களும் விருது வழங்கிக் கௌரவிக்கத் தெரிவாகியுள்ளனர். (ந-8)

## செயலமர்வு

ஆயுள்வேத மருந்தக உரிமையாளர்கள் மற்றும் பணியாளர்களுக்கான இரண்டு நாள் செயலமர்வும், பயிற்சிப் பட்டறையும் இன்று வெள்ளிக் கிழமை யாழ். பண்ணை சுகாதாரத் திணைக்கள பயிற்சி நிலையத்தில் நடை பெறவுள்ளது. சுதேச மருந்து வகைகளை பேணிப்பராமரித்தல், மருந்து பயன்பாட்டு சட்ட விதிமுறைகள் மற்றும் ஒழுங்குகள் தொடர்பான செயலமர்வும், பயிற்சிப்பட்டறையும் மருத்துவர் திருமதி வி.செல்வநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது. (த-11)

## இன்னிசை நிகழ்வு

தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையினால் சந்நிதியான் ஆச்சிரமத்தில் வாரம் தோறும் நடைபெற்றுவரும் வாராந்த நிகழ்வு வரிசையில் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு இன்னிசை இடம்பெறும். உரும்பிராய் இந்துக் கல்லூரி ஆசிரியை கலா வித்தகர் திருமதி சபீதா கதிரைமலை பக்க வாத்தியங்கள் சகிதம் இன்னிசையை நிகழ்த்துவார். (ந-8)


### 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



திருமதி **சுப்பிரமணியம் சரஸ்வதி**

மலர்வு: 04.05.1941
உதிர்வு: 15.05.2013

*பாசத்தின் இருப்பிடமாய் எமது குடும்ப*
*விளக்காய் இருந்து எம்மை*
*எல்லாம் வழிநடத்திய அன்புத் தெய்வமே!*
*எம்மை விட்டுப் பிரிய உமக்கு*
*எப்படி மனம் வந்தது? ஒரு மாதம்*
*என்ன ஓராயிரம் வருடங்கள்*
*கடந்தாலும் உங்கள் அன்பு முகமும்*
*கூடின்ற பணி விடைகளும்*
*என்றும் எம் மனதில் நிறைந்து நிற்கும்*
*தங்கள் ஆத்மா சாந்திபெற*
*பிரார்த்திக்கின்றோம்.*

உங்கள் பிரிவால் துயருறும்
கணவர், மகன்மார், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

வைத்தியமேற்கு, வைத்தி.



### அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



ஸ்ரீமதி **சுயந்தி கணேசமூர்த்தி**

குவலயத்தில்
26.01.1961

சிவமயத்தில்
17.05.2013

இமைப்பொழுதும் எம் நெஞ்சில் நீங்கா அன்பின்
தவப்பொருளே! தாரமே! தாயே! தயாநிதியே!
நமைப் பெரிதும் தவிக்கவிட்டுச் சென்றனையே!
சிவனடியில் சாந்தியுறப் பிரார்த்திக்கின்றோம்!
ஓம் சாந்தி !

17.05.2013 இல் நித்திய ஜோதியாகி எங்கள் குடும்பச் சுடர் திருமதி சுயந்தி கணேசமூர்த்தி அவர்களின் பிரிவால் நாம் பெருந்துயர் கொண்டிருந்த வேளை பல்வேறு வழிகளிலும் நேரில் வந்தும், தொலைபேசி ஊடாகவும், தந்தி மூலமும், பத்திரிகை கண்ணீர் அஞ்சலி செய்தியூடாகவும் துண்டுப்பிரசுரங்கள், பதாகைகள் ஊடாகவும், மலர் வளையங்கள் வைத்தும் , e.mil ஊடாகவும், எமக்கு ஆறுதல் தெரிவித்த உங்கள் அன்பு மிகுந்த உள்ளத்து உணர்வுக்கு என்றும் நாம் நன்றிக்கடன் பட்டிருக்கிறோம். பெருந்திரளாக நீவிர் கூடி இறுதிக்கிரியைகளில் கலந்து ஆறுதல் அளித்தமையை எண்ணுகையில் எங்கள் மனம் உங்கள் ஒவ்வொருவருக்கும் நன்றியும் அந்தியேட்டி அழைப்பும் தெரிப்பதெனப் புரியவில்லை காலக்கோலத்தில் செய்வதறியாது நிற்பதனால் உங்கள் ஒவ்வொருவரையும் அன்பும், நன்றியும் நிறைந்த உள்ளக் கரங்களால் உங்கள் கரங்கள் உரிமை பூண்டு அழைக்கின்றோம். பெருமனம்கொண்டு இதனைத் தனிப்பட்ட அழைப்பாகக் கருதி வருகை தரவேண்டும் என்று இறைஞ்சுகிறோம். எங்கள் குடும்பத்து ஒளிவிளக்கு திருமதி சுயந்தி கணேசமூர்த்தி அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (14.06.2013) கீரிமலை ஸ்ரீ நகுலேஸ்வரன் புனித தீர்த்தக் கரையிலும் வீட்டுக்கிருத்திய சபிண்டீகரணக் கிரியைகள் 16.06.2013 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 இக்கு எங்கள் இல்லத்திலும் இவற்றைத் தொடர்ந்து இல. 1229, கே.கே.எஸ். வீதி, பூநகரி மரத்தடி யாழ்ப்பாணத் தில் உள்ள "செல்வ மஹால்" மண்டபத்தில் முற்பகல் 11 மணிக்கு ஆத்மசாந்திப் பிரார்த் தனையும், மதியபோசன நிகழ்வும் நடைபெறும். இந் நிகழ்வில் தாங்களும் வருகை தந்து கலந்து கொள்ள வேண்டும் என்று நன்றியுணர்வுடனும் அன்புரிமையுடனும் அழைக் கின்றோம்.

(இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொண்டு வருகை தருமாறு அன்புடன் அழைக்கின்றோம்)

இல. 60, சேர்.பொன் இராமநாதன் வீதி,
யாழ்ப்பாணம்.

த.கணேசமூர்த்தி (கணவர்)
மற்றும் பிள்ளைகள்,
குடும்பத்தினர்.
தொ.பே. 077 621 5500


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கரித்தாஸ்- கியூடெக் அல்லைப்பிட்டி மாதர் சங்கத்துக்கு உதவி

யாழ்ப்பாணம், ஜூன் 14
அல்லைப்பிட்டி மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்துக்கு சுய தொழில் முயற்சிக்கென கரித்தாஸ் கியூடெக் ஒரு லட்சத்து 90 ஆயிரம் ரூபா நிதியுதவி வழங்கியுள்ளது.
பெண் தலைமைத்துவத்தைக் கொண்ட ஐந்து பயனாளிகளுக்கும் மகளிர் குழுவைச் சேர்ந்த 7 பயனாளிகளுக்கும் பன்ன வேலைக்கென ஐந்து பயனாளிகள் குழுவுக்கும் குறித்த உதவிகள் வழங்கப்படவுள்ளதாக வேலணைப் பிரதேச செயலர் தெரிவித்துள்ளார். (வ-7)

# பொம்மைவெளியில் குடிதண்ணீர் பற்றாக்குறை



யாழ்ப்பாணம், ஜூன் 14
யாழ்.நகரை அண்டிய பொம்மை வெளி பகுதியில் குடிதண்ணீருக்கு பெரிய அளவில் பற்றாக்குறை நிலவிவருகிறது.
இது தொடர்பாக பொம்மைவெளிப் பகுதியில் வாழும் எம்.நிலாம் கூறுகையில்:
இந்தப் பகுதியில் கடுமையான வறட்சி நிலவுகின்றது. குடிதண்ணீர் பிரச்சினை நீண்டகாலமாக இங்கு நிலவி வருகின்றது. தினமும் இரு தடவை வழங்கப்படும் மாநகராட்சி குடிதண்ணீர் வழங்கல் திட்டம் மூலமே தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டி உள்ளது. குடிதண்ணீரைப் பெறுவதற்கு வரிசை முறை பின்பற்றப்பட்டாலும் முரண்பாடுகள் இடம்பெறத்தான் செய்கின்றன. எமக்கான நிரந்தர குடிதண்ணீர் திட்டத்தை பெற்றுக் கொடுத்தால் பொம்மை வெளிப்பகுதியின் குடிதண்ணீர் பிரச்சினைக்கு ஒரு விடிவு கிடைக்கும்-என்றார்.
பொம்மை வெளிப் பகுதியில் கிணறுகள் இருந்தாலும் அவற்றிலிருந்து பெறப்படும் தண்ணீர் குடிக்க உகந்ததல்ல. எனவே மாநகரசபை விநியோகிக்கும் குடிதண்ணீரை உபயோகிக்கப்படுகின்றது. இந்த நிலையில் தினமும் குடிதண்ணீருக்காக் காத்திருக்க வேண்டிய நிலை உள்ளது. எமக்கு 24 மணிநேரமும் தண்ணீர் கிடைக்க உரிய தரப்பினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பிரதேசவாசியான எம்.ஆர்.நௌஷாத் தெரிவித்தார்.
இதேவேளை, குடிதண்ணீருக்காகக் காத்திருக்கும் மக்கள் வரிசையில் வெற்றுக் குடங்களை வைத்துச் செல்வதை காணக் கூடியதாக உள்ளது. இது தொடர்பாக யாழ்.மாநகரசபை நீர் வேலைத் திட்ட பகுதியினருடன் தொடர்பு கொண்டபோது:
மாநகர சபையினரால் கிணற்றிலிருந்து பெறப்படும் நீரே குழாய் மூலம் விநியோகிக்கப்படுகின்றது. இந்த நிலையில் அதிக நீர் வழங்குவதானால் யாழ்ப்பாணத்தின் கிணற்று நீர்வளம் குன்றிவிடும். எனவே, தற்போதைய நிலைமையில் எம்மால் ஒரு நாளுக்கு 2 தடவைகள் மட்டுமே நீரை விநியோகிக்க முடியும். எதிர்காலதிட்டங்களால் இந்தப்பிரச்சினைதீர இடமுண்டு எனத் தெரிவித்துள்ளனர். (வ-ரி-17)

## கொடிகாமம் -கச்சாய் ஊடாக யாழ்ப்பாணத்துக்கு பஸ் சேவை

### அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை



தென்மராட்சி, ஜூன் 14
நீண்டகாலமாக இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ள கொடிகாமம் -கச்சாய் ஊடாக யாழ்ப்பாணத்துக்கான பஸ் சேவையை மீண்டும் ஆரம்பிக்குமாறு அந்தப் பகுதி மக்கள் வடமாகாண இலங்கைப் போக்குவரத்துச் சபையின் வடமாகாண முகாமையாளரைக் கோரியுள்ளனர்.
கச்சாய் பகுதியில் உள்ள அரச உத்தியோகத்தர்கள், மாணவர்கள், விவசாயிகள் போன்றோர் யாழ்ப்பாணம் செல்வதாயின் கொடிகாமம் அல்லது சாவகச்சேரிக்கு மோட்டார் சைக்கிள்களில் அல்லது சைக்கிள்களில் சென்று தமது பயணத்தைத் தொடர்வதாகவும் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெறும் கச்சாய் பகுதி மக்களும் பஸ் சேவை இல்லாததால் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர் எனவும் சுட்டிக்காட்டியுள்ளனர்.
கொடிகாமம்-கச்சாய்-சாவகச்சேரி மார்க்கத்தில் சுமார் 3 ஆயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் வசித்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-9)

# 2012 இல் கட்டடங்கள் அமைக்க 2 ஆயிரத்து 322 பேருக்கு அனுமதி

யாழ்ப்பாணம், ஜூன் 14
யாழ்.குடாநாட்டில் கடந்த வருடம் கட்டடங்கள் அமைப்பதற்கென 2 ஆயிரத்து 322 பேருக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. உரிய விதிமுறைகளைப் பின்பற்றாதோரின் 135 விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன என்று யாழ்.பிராந்திய சுகாதாரசேவைகள் திணைக்களத் தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:
கட்டடங்கள் அமைப்பதற்கான அனுமதிகோரி கடந்த வருடம் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளுக்கு 2 ஆயிரத்து 466 விண்ணப்பங்கள் கிடைக்கப் பெற்றன.
அவற்றில் 2 ஆயிரத்து 457 விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டுள்ளன. 9 விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படவில்லை.

**சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு ரீதியாக சாவகச்சேரியில் 384 விண்ணப்பங்களில் 359 இற்கு அனுமதி வ்ழங்கப்பட்டுள்ளது.**



பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்கு உட்பட்ட 7 விண்ணப்பங்களும், கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரிப் பிரிவுக்கு உட்பட்ட 2 விண்ணப்பங்களும் இவ்வாறு பரிசீலிக்கப்படவில்லை.
சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு ரீதியாக சாவகச்சேரியில் 384 விண்ணப்பங்களில் 359 இற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.
பருத்தித்துறையில் 377 கட்டடங்களுக்கும், கரவெட்டியில் 211 இல் 196 கட்டடங்களுக்கும், ஊர்காவற்றுறையில் 101 இல் 95 கட்டடங்களுக்கும், வேலணையில் 67 இல் 33 கட்டடங்களுக்கும், தெல்லிப்பழையில் 97 இல் 85 கட்டடங்களுக்கும், உடுவிலில் 128 இல் 119 கட்டடங்களுக்கும், சண்டிலிப்பாயில் 164 இல் 157 கட்டடங்களுக்கும், சங்கானையில் 214 கட்டடங்களுக்கும், கோப்பாயில் 331 இல் 304 கட்டடங்களுக்கும், நல்லூரில் 169 கட்டடங்களுக்கும், யாழ்ப்பாணத்தில் 214 கட்டடங்களுக்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது - என்றுள்ளது. (வ-4)

## வட்டுக்கோட்டையில் ஞாபகார்த்த நிழல் குடை

யாழ்ப்பாணம், ஜூன் 14
மறைந்த ஒருவரின் ஞாபகார்த்தமாக வட்டுக்கோட்டையில் நிழல்குடை ஒன்று அமைக்கப்படவுள்ளது.
பிரம்படி வீதி, கொக்குவில் கிழக்கைச் சேர்ந்த ச.இரத்தினசபாபதி இதற்கான நடவடிக்கைகளை எடுத்துள்ளார்.
வட்டுக்கோட்டை யாழ்ப்பாண கல்லூரிக்கும் சங்கரத்தை சந்திக்கும் இடையிலான ஓர் இடத்தில் அதனை அமைப்பதற்கான அனுமதியை கோரி வடமாகாண இலங்கை போக்குவரத்துச் சபையின் கோண்டாவில் முகாமையாளக்கு சமூக சேவகர் ச.இரத்தினசபாபதி, விண்ணப்பித்துள்ளார். (வ-50)

## மயிர்கொட்டிகளின் தாக்கம் குடாநாட்டில் அதிகரிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 14
யாழ்.மாவட்டத்தில் தற்போது நிலவும் காலநிலையில் மயிர்கொட்டிகளின் தாக்கத்துக்கு உள்ளாகி சில நோயாளர்களின் பார்வை பாரதூரமாகப் பாதிக்கப்பட்டிருப்பதாக யாழ்.போதனா வைத்தியசாலை கண் வைத்திய நிபுணர் அறிவித்துள்ளார். எனவே பொதுமக்கள், குறிப்பாகக் குழந்தைகள் கண்களில் மயிர்கொட்டிகளின்தாக்கம்ஏற்படாதவாறு அவதானமாக இருக்க வேண்டும்தற்செயலாககண்களால்மயிர்கொட்டிகளின் தாக்கம் ஏற்பட்டால் காலம் தாழ்த்தாது உடனடியாக யாழ்.போதனா வைத்தியசாலை கண் சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற வேண்டும். காலம் தாழ்த்திச் சிகிச்சைக்குச் செல்வதனால் கண் பார்வையை இழக்கும் அபாயம் ஏற்படலாம்.
பொதுமக்கள் இயன்றளவு மயிர்கொட்டிகளின் பெருக்கத்தைக் குறைக்கும் வகையில் தமது வீட்டு வளவுகளையும் சுற்றாடலையும் துப்புரவாகப் பேணுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர் என்று அவர் மேலும் தெரிவித்தார். (வ)

# அராலி-வேலணை கடற்பாதையை உடனடியாகப் புனரமைக்கவும்

### வலி.தென்மேற்கு கிராம அபிவிருத்தி சபைத் தலைவர் வலியுறுத்து



யாழ்ப்பாணம், ஜூன் 14
வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் ஆய்வு செய்யப்பட்டு, ஜெய்கா திட்டத்தின் கீழ் மதிப்பீடு செய்யப்பட்ட அராலி-வேலணை கடற்பாதை விரைவாக புனரமைப்புச் செய்யப்பட வேண்டும் என்று வலி.தென்மேற்கு கிராம அபிவிருத்திச் சங்கங்களின் சமாசத் தலைவர் ச.செல்வரத்தினம் யாழ். அரச அதிபருக்கு அனுப்பிவைத்த கடிதத்தில் வலியுறுத்தியுள்ளார்.
இது தொடர்பில் அவர் எழுதிய கடிதத்தில் மேலும் தெரிக்கப்பட்டுள்ளதாவது:-
பிரதேசசபைக் கூட்டங்களிலும்,செயலக அபிவிருத்திக் கூட்டங்களிலும் ஆராயப்பட்டபோதும் இதுவரை அராலி-வேலணை கடற்பாதை புனரமைப்புக்கு நிதி ஒதுக்கப்படவில்லை.
தீவகத்தையும், வலிகாமத்தையும் இணைக்கும் பிரதான பாதையாக இருந்தது அராலி-வேலணை கடற்பாதையாகும்.
இந்தப் பாதை அபிவிருத்தி குறித்து தொடர்ச்சியாக விண்ணப்பங்களையும் இதற்கான நியாயப்பாடுகளையும் முன்னிறுத்தி வருகின்றோம். எனினும் இதுவரை அதற்கான தீர்க்கமான முடிவு எட்டப்படவில்லை.
அராலி-வேலணை கடற்பாதையின் தேவை குறித்து வேலணை பிரதேச சபை தலைவர் சி.சிவ ராசா பிரத்தியேகமான தீர்மானம் ஒன்றை நிறைவேற்றி அமைச்சர் டக்ளஸ் [illegible] னத்துக்கும் அரச அதிபரின் கவனத்துக்கும் கொண்டு வந்திருந்தார்.
எனவே தேசிய நெடுஞ்சாலைக்குப்பொறுப்பான அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி மேற்படி அராலி-வேலணை கடற்பாதை அபிவிருத்திக்கு நிதி ஒதுக்கீடு செய்யவேண்டும். வடக்கின் பிரதான வீதி அபிவிருத்தியாக அராலி-வேலணை கடற்பாதையை முன்னெடுக்க வேண்டும் - என்றுள்ளது.
கடிதத்தின் பிரதி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (வ-50)

## மாணவத் தலைவர்களுக்கு தலைமைத்துவப் பயிற்சி


தென்மராட்சி, ஜூன் 14
தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளைச் சேர்ந்த 75 மாணவ தலைவர்களுக்கான மூன்று நாள்கள் வதிவிட தலைமைத்துவப் பயிற்சி வகுப்புகள் இன்று வெள்ளிக்கிழமை ஆரம்பமாகவுள்ளன.
வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் தலைமையில் நடைபெறும் இந்தப் பயிற்சி வகுப்புக்களில் எதிர்வரும் சனிக்கிழமை இரண்டாம் நாள் பயிற்சி நெறிக்கு முதன்மை விருந்தினராக மாகாணக் கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலனும், சிறப்பு விருந்தினராக மாகாண மேலதிக கல்விப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தனும் கலந்து கொள்வர்.
மூன்றாம் நாள் பயிற்சி நெறிக்கு முதன்மை விருந்தினராக மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் ப.விக்னேஸ்வரனும் சிறப்பு விருந்தினராக மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் எம்.ராதாகிருஷ்ணனும் கலந்து கொள்வர். (வ-9)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முருகன் ஆலய சர்ச்சை; துரோகம் இழைக்கமாட்டேன்

## அம்பாறை அரச அதிபர் கூட்டமைப்பிடம் உறுதி



அம்பாறை, ஜூன் 14
''உகந்தை முருகன் ஆலயத்துக்குப் பாதிப்பு ஏற்படும் வகையிலோ, அதன் மூலம் இந்து மக்களுக்குத் துரோகம் செய்யும் வகையிலோ எந்த நடவடிக்கையையும் நிச்சயம் மேற்கொள்ள மாட்டேன்.''
இவ்வாறு அம்பாறை மாவட்ட அரச அதிபர் நீல் டி.அல்விஸ் தம்மைச் சந்தித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முக்கியஸ்தர்களிடம் உறுதியளித்தார்.
மட்டக்களப்பு மாவட்டத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் பொன். செல்வராசா தலைமையில் கூட்டமைப்பு முக்கியஸ்தர்கள் குழு புதன்கிழமை அரச அதிபர் நீல் டி. அல்விஸைச் சந்தித்து அம்பாறை மாவட்ட தமிழ் மக்கள் நலன் குறித்த பல்வேறு விடயங்கள் தொடர்பில் கலந்து ரையாடியது.
அம்பாறை மாவட்டச் செயலகத்திலுள்ள மாவட்ட அரச அதிபர் அலுவலகத்தில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பில் கூட் டமைப்புச் சார்பில் , கிழக்கு மாகாண சபை உறுப்பினர்களான ரீ. கலையரசன், எம். இராஜேஸ்வரன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.
இந்தக் குழுவுக்குத் தலைமை தாங்கிச் சென்ற நாடாளுமன்ற உறுப்பினர் பொன். செல்வராசா, முதலில் உகந்தை முருகன் ஆலய வளாகத்தில் பௌத்த விகாரை அமைக்கப் படவிருப்பதாகக் கூறப்படும் விவகாரம் தொடர்பில் அரச அதிபரிடம் தெரிவித்தார்.
இதன்போதே அரச அதிபர் இவ்வாறு உறுதியளித்தார்.
இந்த விடயம் குறித்து அரச அதிபர் மேலும் தெரிவித்ததாவது:
''உகந்தை முருகன் ஆலய வளாகத்தில் பௌத்த விகாரை அமைப்பதற்கான எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.''
உகந்தை முருகன் ஆலயம் பழம் பெருமை மிக்க புனித தலம். அங்கு முதல் உரிமை இந்து மக்களுக்கும் அந்த ஆலயத்துக்குமே உள்ளது என்பதில் நான் உறுதியாகவுள்ளேன்.


**விகாரை**

உகந்தைப் பிரதேசத்தில் பௌத்த விகாரை ஒன்றை அமைப்பதற்கு காணி ஒன்றைத் தருமாறு பௌத்த விகாராதிபதி ஒருவர் கோரிக்கை விடுத்திருந்தார். ஆனால் அந்தக் கோரிக்கை தொடர்பில் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.
என்னைப் பொறுத்தவரை உகந்தை முருகன் ஆலய வளாகத்துக்கு பாதிப்பு ஏற்படும் வகையிலோ, இந்து மக்களுக்கு அங்கு துரோகமிழைக்கும் வகையிலோ நிச்சயமாக எந்த நடவடிக்கையும் நான் மேற்கொள்ளமாட்டேன்.
அங்கு முதல் உரிமை இந்து மக்களுக்கே உரியது என்பதே எனது நிலைப்பாடாகும்.

**ஆலயக்காணி**

எனவே உகந்தை முருகன் ஆலயத்துக்குரிய எல்லைகளை முழுமையாக நிர்ணயம் செய்து அது எவ்வளவு விஸ்தீரணம் கொண்டது என்பதை எனக்குக் கோரிக்கையாகத் தருமாறு ஆலய முக்கியஸ்தர்கள், தமிழ் பிரமுகர்களிடம் கோரியுள்ளேன்.
அவ்வாறு தந்தால் ஆலய வளாகத்துக்குரிய அவ்வளவு நிலங்களையும் நான் வனவிலங்கு திணைக்களத்திலிருந்து பெற்றுத்தர நடவடிக்கையெடுப்பேன்-என்றார். (ச-30)

## மாமாங்கேஸ்வரருக்கு மகா கும்பாபிஷேகம்




மட்டக்களப்பு,ஜூன் 14
மட்டக்களப்பு அமிர்தகழி ஸ்ரீ மாமாங்கேஸ்வரர் ஆலயத்தின் மகா கும்பாபிஷேகம் புதன்கிழமை காலை நடைபெற்றது.
இலங்கையில் தமிழர்களின் வரலாற்றுடனும் கலாசாரத்துடனும் பின்னிப்பிணைந்துள்ள மாமாங்கேஸ்வரர் ஆலயத்தின் மகா கும்பாபிஷேகம் 50 வருடங்களின் பின்னர் நடைபெற்றது.
இந்த கும்பாபிஷேகத்தில் நாடெங்கிலும் இருந்து ஆயிரக்கணக்கானோர் கலந்து கொண்டனர். (ச)



மட்டக்களப்பு,பெரியகல்லாற்றைச் சேர்ந்த அருட் சகோதரி கே.தவமலரின் துறவற வாழ்வில் வெள்ளிவிழாவை முன்னிட்டு புனித அருளானந்தர் ஆலயத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட பாராட்டு விழாவில், மட்டக்களப்பு மறை மாவட்ட ஆயர் ஜோசப் பொன்னையா ஆண்டகை, அருட் சகோதரி ஆகியோர் ஆலயமுன்றலில் ஆரத்தி எடுத்து வரவேற்கப்படுகின்றனர். (ச-31)

## மட்டக்களப்பு- பொத்துவில் வரை ரயில் பாதை அமைக்கவேண்டும்

### கிழக்கு முதல்வரிடம் வேண்டுகோள்



மட்டக்களப்பு, ஜூன் 14
மட்டக்களப்பிலிருந்து பொத்துவில் வரையான ரயில் பாதை திட்டத்தை நடைமுறைப்படுத்த அரசை கிழக்கு மாகாணசபை வலியுறுத்த வேண்டும். இவ்வாறு கிழக்கு மாகாண புத்திஜீவிகள் மற்றும் வர்த்தகப் பிரமுகர்கள் கிழக்கு மாகாண முதலமைச்சரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.
கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஏ.எம்.ஜெமீலினால் மூவின மக்களுக்கும் நன்மை தரும் இந்தத் திட்டம் கிழக்கு மாகாண சபையில் முன்வைக்கப்பட்டது.
தற்போது அது நடைமுறைப் படுத்தப்படாதிருப்பது வேதனையளிக்கிறது என்று அவர்கள் சுட்டிக்காட்டினர்.
இந்தத் திட்டத்தை கிழக்கு மாகாண சபை நேரடியாக கையாள அரசின் அனுமதியை பெற நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவர்கள் கூறினர்.

> ரயில் பாதைத் திட்டத்தை நடைமுறைப் படுத்த கிழக்கு முதல்வர் வலியுறுத்த வேண்டும்.

கிழக்கு மாகாண முதல்வர் தனது அதிகாரத்தைக் கொண்டு மட்டக்களப்பு முதல் பொத்துவில் வரையான ரயில் பாதை திட்டத்தை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவர்கள் கோரிக்கை விடுத்தனர். (ச-ரி)

## ஆஸி. செல்வதற்கு முயற்சித்த 10 பேர் காத்தான்குடியில் கைது



மட்டக்களப்பு,ஜூன் 14
மட்டக்களப்பு - காத்தான்குடி பிரதேச கடற்பகுதி ஊடாக சட்ட விரோதமாக ஆஸ்திரேலியா செல்ல முயற்சித்த 10 இளைஞர்களும், அவர்களுக்கு உதவிய ஒருவரும் காத்தான்குடி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.
காத்தான்குடி கடற்கரை வீதியில் உள்ள மெத்தைப் பள்ளிவாசலுக்கு அருகில் வைத்து அவர்கள் கைது செய்யப் பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
கைது செய்யப்பட்டவர்கள் அனைவரும் யாழ்ப்பாணம், வவுனியா, முருங்கன், கரவெட்டி ஆகிய பகுதிகளை சேர்ந்தவர்கள் என்று பொலிஸார் தெரிவித்தனர். கைது செய்யப்பட்டவர்களை ஏற்றிவந்ததாக தெரிவிக்கப்படும் வாகனம் தப்பிச்சென்றுள்ளனர் என்று காத்தான்குடி பொலிஸார் குறிப்பிட்டனர். (ச)

## திருமண ஏற்பாடுகளைத் தடுத்து நிறுத்தி மாணவியை பாடசாலை அனுப்பி வைத்த சம்பவம்

மட்டக்களப்பு,ஜூன் 14
திருமணத்துக்கான ஏற்பாடுகளை தடுத்து நிறுத்திய பட்டதாரியொருவர் திருமணம் செய்து கொள்வதற்கு தயாராகவிருந்த மாணவியை மீண்டும் பாடசாலைக்கு அனுப்பிவைத்த சம்பவம் மட்டக்களப்பு, வெருகல் பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.
பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கள உத்தியோகத்தரான பட்டதாரி உத்தியோகத்தர் ஒருவரே இவ்வாறு திருமணத்துக்கான ஏற்பாடுகளைத் தடுத்துநிறுத்தியுள்ளார்.
இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:
[illegible] பாடசாலையொன்றில் 10 ஆம் தரத்தில் கல்வி கற்கும் மாணவியான 15 வயது சிறுமிக்கும் 18 வயதான இளைஞனுக்கும் திருமணம் செய்து வைப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.
இந்தத் திருமண ஏற்பாடுகள் தொடர்பில் அந்தப் பிரதேச சிறுவர் பாதுகாப்புக் குழுவுக்குத் தகவல் கொடுக்கப்பட்டது. அதனையடுத்து பிரதேச செயலக திட்டமிடல் கிளையின் பட்டதாரி உத்தியோகத்தர் ஒருவர் உடனடியாக சிறுமியின் வீட்டுக்கும், இளைஞனின் வீட்டுக்கும் சென்று அவ்விருவரின் பெற்றோர்களையும் சந்தித்து கலந்துரையாடினார்.
சிறுமிக்கும் குறித்த இளைஞனுக்கும் சிறுவயதில் திருமணம் செய்வதனால் ஏற்படும் பாதிப்புகள் மற்றும் சமூக உணர்வுகள் தொடர்பில் அவர் விழிப்புணர்வை ஏற்படுத்தியுள்ளார்.
அதனையடுத்து பெற்றோரும் சம்பந்தப்பட்ட இளைஞனும் தங்கள் மீதான சமூகப் பொறுப்புக்களை உணர்ந்து கொண்டதுடன், சிறுமிக்கு மீண்டும் கல்வியை தொடர்வதற்கான ஏற்பாடுகளை செய்து கொடுப்பதற்கு உறுதியளித்தனர்.
அதனடிப்படையில் சிறுமிக்கு மீண்டும் தனது கல்வியைத் தொடர்வதற்காக பாடசாலைக்குச் செல்வதுடன், குறித்த இளைஞன் மத்திய கிழக்குக்கு தொழில் வாய்ப்புப் பெற்றுச் செல்ல உத்தேசித்துள்ளார்.
இந்த விடயத்தில் அதீத அக்கறை எடுத்த பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் பட்டதாரி கள உத்தியோகத்தரை சிறுவர் பாதுகாப்புக்குழு உறுப்பினர்கள் பாராட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் இல்லங்களில் இனிமேல் தொழிற்பயிற்சி

## சிறுவர் அபிவிருத்தி அமைச்சு நடவடிக்கை

கொழும்பு,ஜூன்14

சிறுவர் இல்லங்களில் தங்கி வாழும் 16 வயது பூர்த்தியடைந்துள்ள பிள்ளைகளுக்கு தொழிற்பயிற்சி வழங்க சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகார அமைச்சு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

சிறார்களுக்கு 16 வயது கடந்ததன் பின்னர் சிறுவர் இல்லங்களில் வைத்துக் கொள்வதற்கு சட்டரீதியான அனுமதி வழங்கப்படுவதில்லை. அதனால் அவர்கள் சிறுவர் இல்லங்களில் இருந்து வெளியேறிச் செல்வதற்கு முன்னர் அவர்களுக்கு தொழில் வாய்ப்பை தேடிக் கொள்வதற்காக தொழில் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளது என்று சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகார அமைச்சர் திஸ்ஸ கரலியத்த தெரிவித்தார்.

இந்தப் பயிற்சி சிறுவர் இல்லங்களில் உள்ள 14 வயதுக்கு மேற்பட்ட பாடசாலைகளுக்குச் செல்லாத பிள்ளைகளுக்கும் வழங்கப்படும் என்று அமைச்சர் தெரிவித்தார்.




உடை தயாரித்தல், அழகுக் கலை, கணினி, தச்சுத் தொழில், மேசன் தொழில், மோட்டார் தொழில்நுட்பம், மின்சாரத் தொழில், சமையற் கலை, கைவினை, முடி திருத்துதல், ஹோட்டல் பயிற்சி ஆகிய பிரிவுகளின் கீழ் தொழிற்பயிற்சி கற்கை நெறிகள் நடத்தப்படவுள்ளன. இந்தச் செயற்றிட்டம் முதலில் கம்பஹா மாவட்டத்தில் ஆரம்பிக்கப்படும் என்று அமைச்சர் மேலும் கூறினார். (ச-22)

**சிறார்களுக்கு 16 வயது கடந்ததன் பின்னர் சிறுவர் இல்லங்களில் வைத்துக் கொள்வதற்கு சட்ட ரீதியான அனுமதி வழங்கப் படுவதில்லை.**

# உயிரிழந்த மீனவர்களுக்காக சர்வமத வழிபாட்டு நிகழ்வு

## இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரே நாளில் நடத்த ஏற்பாடு



கொழும்பு,ஜூன் 14

சீரற்ற காலநிலையால் உயிரிழந்த இலங்கை, தமிழக மீனவர்களின் ஆத்மசாந்திக்காகவும், பாதிக்கப்பட்ட மீனவர்களின் வாழ்க்கை விரைவில் இயல்பு நிலைக்கு திரும்புவதற்காகவும் இறைஆசி வேண்டி இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரே நாளில் சர்வமத வழிபாடுகள் நடைபெறவுள்ளன.

இதற்கான ஏற்பாடுகளை தமிழக மீனவர் சங்க ஆலோசகர் என். தேவதாஸும், இலங்கை இந்திய மீனவ அமைப்பின் இணைப்பாளரும் இலங்கை கடற்றொழில் அமைச்சின் ஆலோசகருமான எஸ்.பி. அந்தோனிமுத்துவும் மேற்கொண்டுவருகின்றனர்.

இந்த விடயம் குறித்து மீன்பிடி மற்றும் கடற்றொழில் பிரதி அமைச்சர் சரத் குமார குணரத்னவுடன் அந்தோனிமுத்து பேச்சு நடத்தவுள்ளார்.

இதன்போது, குறித்த நிகழ்வை நடத்துவதற்கான திகதி உட்பட சில விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்படவுள்ளன.

சீரற்ற காலநிலையால் உயிரிழந்த மீனவர்களின் சடலங்களைத் தேடிக் கண்டுபிடிப்பதற்கான நடவடிக்கையில் இரு நாட்டு மீனவ சங்கங்களும் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

# கப்பம் திரட்டிய நால்வர் மாட்டினர்

கொழும்பு, ஜூன் 14

கப்பம் பெற்ற நால்வர் மிரிஹானை விசேட பொலிஸ் அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டுள் ளனர்.

அவர்கள் கங்வெல்ல - ஜல்தர பிரதேசத்தில் செவ்வாய்க்கிழமை இரவு ஏழு மணிக்கு கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர்களிடமிருந்து உள்நாட்டு தயாரிப்பு துப்பாக்கியும், வாக னம் ஒன்றும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன. (ச)



இலங்கை வந்துள்ள இந்திய கரையோரப் பாதுகாப்புப் படையின் பணிப்பாளர் வைஸ் அட்மிரல் அநுராக் ஜீ தப்லியால், பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் செயலர் கோத்தபாய ராஜபக்ஷவை சந்தித்து நினைவுச் சின்னம் வழங்கினார். (ச)

# ஊடக ஒழுக்கக் கோவையை மாற்ற அரசுக்கு அதிகாரமில்லை

## ஐ.தே.கட்சி உறுப்பினர் கூறுகிறார்

கொழும்பு, ஜூன் 14

ஊடக ஒழுக்கக் கோவையை மாற்றி அமைக்க அரசுக்கு எந்த வித அதிகாரமும் இல்லை. இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் மேல் மாகாணசபை உறுப்பினர் ஹர்ஷ ராஜகருணா தெரிவித்தார்.

இராஜகிரியவில் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஊடகவியலாளருக்கான ஒழுக்கக் கோவையை அரசு உருவாக்கத் திட்டமிட்டுள்ளது. அது நியாயமற்றது.

ஊடகவியலாளர்கள் தமக்கான ஒழுக்கக் கோவையைத் தாமே உருவாக்க வேண்டும். அதில் முடிவெடுக்க அரசுக்கு அதிகாரம் இல்லை.

ஊடக சுதந்திரத்தைப் பேணுவது மட்டுமே அரசின் செயற்பாடு. இந்த அரச ஆட்சியில் தான் லசந்த விக்கிரமதுங்க உட்பட பல ஊடகவியலாளர்கள் படுகொலை செய்யப்பட்டனர்- என்றார். (ச-ரி)

**ஊடகவியலாளர்கள் தமக்கான ஒழுக்கக் கோவையைத் தாமே உருவாக்க வேண்டும்.**

# '13' ஐ மாற்றிய பின் தேர்தலை நடத்துங்கள்

## பைசர் முஸ்தபா கோரிக்கை

கொழும்பு, ஜூன் 14

13 ஆவது திருத்த சட்ட வரைவில் மாற்றங்கள் மேற்கொண்ட பின்னரே வடக்கில் தேர்தல் நடத்த வேண்டும். இவ்வாறு முதலீட்டு ஊக்குவிப்பு பிரதி அமைச்சர் பைசர் முஸ்தபா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கொழும்பு உலக வர்த்தக மையக் கட்டடத் தொகுதியில் திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-




13 ஆவது சட்ட வரைவில் திருத்தம் செய்யாது வடக்கில் தேர்தல் நடத்தினால் அது நாட்டின் இறைமையைப் பாதிக்கும்.

இன்றைய காலப்பகுதியில் இன பேதமின்றி இலங்கையர் என இணைய வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. அதற்கு அனைத்துக் கட்சிகளும் முன்வரவேண்டும்.

வடக்கில் இடம் பெயர்ந்தோருக்காக குரல் கொடுக்கும் தமிழ் தேசிய கூட்டமைப்பினர் வெளியேற்றப்பட்ட முஸ்லிம்களுக்காக குரல் கொடுப்பதில்லை. இனப்பிரச்சினைக்கு தீர்வு காணவேண்டுமெனின் அவர்கள் நாடாளுமன்ற தெரிவுக்குழுவுக்கு வந்து பேச்சு நடத்துவதே தீர்வாகும்-என்றார். (ச-ரி)

# தனியார் பஸ்களுக்கு முற்கொடுப்பனவு அட்டை

## '138' வழித்தடத்தில் முதற்கட்டம் ஆரம்பம்



கொழும்பு,ஜூன் 14

தனியார் பஸ்களில் டிக்கட்டுக்ளுக்குப் பதிலாக முற்கொடுப்பனவு அட்டையை அறிமுகப்படுத்தும் முதற்கட்ட நடவடிக்கை திங்கட்கிழமை ஆரம்பிக்கப்பட்டது.

இந்தச் சேவை கொட்டாவை - கொழும்பு, மத்தேகொட- கொழும்பு ஆகிய பஸ் மார்க்கங்களின் ஊடாகப் பயணிக்கும் பஸ்களில் முதலில் ஆரம்பிக்கப்பட்டது என்று தனியார் பஸ் உரிமையாளர் சங்கத் தலைவர் கெமுனு விஜேரத்ன கூறினார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

விரைவில் ஏனைய பஸ் மார்க்கங்களிலும் முற்கொடுப்பனவு அட்டைகள் அறிமுகப்படுத்தப்படும்.

புதிய முற்கொடுப்பனவு அட்டையை மக்களுக்கு அறிமுகப்படுத்துவதற்காக திங்கட்கிழமை 138 பஸ் மார்க்கத்தினூடாக பயணிக்கும் பயணிகளுக்கு இலவசமாக முற்கொடுப்பனவு அட்டைகள் வழங்கப்பட்டன.

200 ரூபாவை வைப்புச் செய்து முற்கொடுப்பனவு அட்டையை பெற முடியும். அதன்பின் தேவையான தொகையை அதில் இட்டு பஸ்களில் பயணிக்க முடியும்.

இந்த அட்டைகளை பஸ் தரிப்பிடங்கள், மக்கள் வங்கிக் கிளைகள் மற்றும் தொலைபேசி முற்கொடுப்பனவு அட்டை விற்கும் இடங்கள் என்பவற்றினூடாக விநியோகிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

முற்கொடுப்பனவு அட்டையில் பணம் முடிந்தால் மீண்டும் பணத்தை இட்டு அதனைப் பயன்படுத்த முடியும்.-என்றார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-5678844, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## திகிலாக மாறும் நிலைநோக்கி உத்தேச மாகாணசபைத் தேர்தல்...!

தமிழ் மக்களுக்கு இன்னமும் அரசியல் தீர்வு கிடைக்கவில்லை. அதனால், இங்கு வாழும் தமிழ் இளைஞர்கள் தாம் தொடர்ந்தும் துன்புறுத்தல்கள், விசாரணைகள், வேண்டாத பிரச்சினைகள் என்பவற்றுக்கு முகம்கொடுக்க நேரிடும் என்று அஞ்சுகிறார்கள். அதனாலேயே ஆபத்து நிறைந்த ஆஸ்திரேலியப் பயணத்தை மேற்கொள்கின்றனர்.

நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்திருந்த ஆஸ்திரேலிய உயர் அதிகாரியான மைக் ஹில்மனிடம் மேற்கண்டவாறு தெரிவித்திருந்தார் யாழ்.ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம்.

ஆஸ்திரேலிய அரசின் தேசிய மதிப்பீட்டுப் பிரிவின் தென்னாசிய வட்டகைக்கான ஆலோசகராகப் பணிபுரியும் மைக் ஹில்மன், குடாநாட்டுக்கான தமது விஜயத்தின்போது யாழ்.ஆயரையும் சந்தித்து இங்குள்ள நிலைமைகள் குறித்துக் கேட்டறிந்தார்.

குடாநாட்டு இளைஞர்களுக்கு தொழில் வாய்ப்புகள் மிக மிகக் குறைவு. தமிழ் மக்களுக்குரிய அரசியல் தீர்வு இன்னமும் முன்வைக்கப்படவில்லை. அதனால் இங்குள்ள இளைஞர்கள் தாம் தொடர்ந்து துன்புறுத்தப்படலாம் என்று அஞ்சுகிறார்கள். அதனாலேயே அவர்கள் ஆஸ்திரேலியாவுக்குத் தப்பிச் செல்கின்றனர்–

இப் பிரதேசத்தின் கரையோரப் பகுதிகளில் வாழ்பவர்களில் அனேகமானோர், அபாயகரமான கடற் பயணங்களை மேற்கொண்டு ஆஸ்திரேலியாவுக்கு புலம்பெயர்ந்து செல்கின்றனர்–

வடக்கில் வாழ்கின்ற மக்களுக்கு, மிகக் குறிப்பாக இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புக் கிடையாததால், குறைந்தளவு வருமானத்தையே பெறமுடிகிறது. இங்கு வாழும் இளைஞர்கள் எப்போதும் பயப்பீதியுடனேயே வாழ்கிறார்கள்– என்றும் ஆஸ்திரேலிய உயர் அதிகாரியிடம் எடுத்தியம்பி உள்ளார் யாழ்.ஆயர்.

அத்தோடு, உத்தேச வடக்கு மாகாண சபைத் தேர்தல் குறித்து ஆஸ்திரேலிய உயர் அதிகாரியிடம் கருத்து வெளியிட்ட யாழ். ஆயர், அரசமைப்புச் சட்டத்துக்கான பதின்மூன்றாவது திருத்தம் அத்தியாவசியமானது என்பதனையும் அழுத்திக் கூறினார்.

ஆஸ்திரேலியாவில் புகலிடம் கோருவதற்காக வடபகுதி மக்கள் ஆபத்தான படகுப் பயணம் மேற்கொள்வது குறித்து அந்நாட்டு உயர் அதிகாரி கவலை தெரிவித்தார்.

படகுப் பயணம் மேற்கொள்வோர் பெருந்தொகைப் பணத்தைச் செலுத்தி தமது நாட்டுக்கு வந்தாலும் அதற்குத் தகுதியான காரணங்கள் அவர்களிடம் இல்லை என்றும் அந்த அதிகாரி சுட்டிக்காட்டினார்.

இங்குள்ள சூழ்நிலையில் தாம் எந்த வேளையிலும் கைது செய்யப்படலாம் என்ற அச்சத்துடனேயே மக்கள் வாழ்வதாகவும், இனப் பிரச்சினைக்கான நிரந்தரத் தீர்வு காணப்படாத காரணத்தினாலேயே அவர்கள் இந்த நாட்டை விட்டு வேறு நாடுகளுக்குப் புகலிடம் நாடிச் செல்கிறார்கள் என்பதனையும் யாழ்.ஆயர் ஆஸ்திரேலிய உயர் அதிகாரிக்கு விசாலமாகவும் தெளிவாகவும் விளக்கினார்.

யாழ்.ஆயர் விவரித்த, விளக்கிய உண்மை நிலையை, ஆஸ்திரேலிய அரசின் உயர் அதிகாரி உள்வாங்கி இருப்பார் என்று எதிர்பார்க்கலாம்.

ஆயினும், அவராலோ அல்லது அவரது நாட்டு அரசாங்கத்தாலோ அரசமைப்புக்கான பதின்மூன்றாவது திருத்தத்தை இல்லாது ஒழிக்க வேண்டாம் என்று இலங்கை அரசுக்கும் அதன் உயர்மட்டங்களுக்கும்–

மிகக் குறிப்பாக பதின்மூன்றாவது திருத்தத்தை முற்றாக முழுங்கி விட வேண்டும் என்று முனைப்புடன் செயற்படும் சக்திகளுக்கும், அது தொடர்பில் ''மூச்சுக் காட்ட'' இயலாது!

அரசமைப்புக்கான பதின்மூன்றாவது திருத்தத்தின் தாயாரான ஆனானப்பட்ட இந்தியாவினாலேயே எதுவும் செய்யமுடியாத இயலாமை வெளிப்பட்டிருக்கும் வேளையில், பாவம் தூர தேச அரசுகளால் என்னதான் செய்ய இயலும்...?

தமிழீழ விடுதலைப் புலிகளின் வேண்டுதலுக்கும், ஆலோசனைக்கும் இணங்கவே பதின்மூன்றாவது திருத்தத்தை எமது நாட்டின் மீது இந்தியா திணித்தது என்று அமைச்சர் டலஸ் அழகப்பெருமா இப்போது (திடீரெனச்) சுட்டிக்காட்டி உள்ளார்.

பதின்மூன்றாவது திருத்தம் அல்லது பதினைந்தாவது, இருபதாவது அல்லது அதற்கும் அப்பால் என்ற அவற்றில் எந்த நிலை நின்று இதனை ஆராய வேண்டும் என்றும் அவர் கிண்டலாகக் கேள்வி எழுப்பி உள்ளார்.

ஆயினும், இனங்களுக்கு இடையே ஒற்றுமையை, ஐக்கியத்தை உண்டாக்கும் வகையிலேயே எமது நடவடிக்கைகள் அமைய வேண்டும் என்றும் இளைஞர் விவகார அமைச்சர் (பெருமனதோடு) சுட்டிக்காட்டி உள்ளார்.

வடக்கு மாகாண சபைத் தேர்தலும், அதற்கு முன்னர் அரசமைப்புக்கான பதின்மூன்றாவது திருத்தத்தை அகற்றி விடுதலும் என்ற அமர்க்களம் (சமர்க்களம்) ஆரம்பமாகிவிட்ட இந்தக் கட்டத்தின் பின்னால், கொழும்பு அரசியல் திரையில் எந்த விம்பம் தோன்றும்....? ஆழ்ந்து நோக்கின் ஒரு வகையில், வடக்கு மாகாண சபைக்கான உத்தேச தேர்தல் குறிப்பிட்ட காலத்தில் நடைபெறுமா என்று எவரும் கணிக்க முடியாத பெரும் திகிலாக மாறுமோ என்ற வினா தானாகவே எழுகிறது...!

# தேர்தலும் தமிழர்களும்

மன்னார் சிந்தா

வடமாகாண சபை ஆட்சி முறைமை, கடந்த 25 ஆண்டுகளுக்கு மேலாக அரசமைப்புக்கான 13 ஆவது திருத்தச் சட்டவரைவு இலங்கையின் அரசமைப்பில் உள்வாங்கப்பட்டுள்ள ஓர் அடிப்படையான சட்டமாக இருந்து வருகின்றது. அத்துடன், அதனடிப்படையில் இலங்கையின் பெரும்பான்மை சிங்கள மக்களின் 7 மாகாணங்களில் 25 வருடங்களாகத் தொடர்ச்சியாகவும், கிழக்கு மாகாணத்தில் அந்த மாகாணம் அரசபடைகளால் கைப்பற்றப்பட்ட பின்னரான கடந்த 6 வருடங்களும் நடைமுறையில் இருந்துவரும் ஓர் அதிகாரப் பரவலின் அடிப்படையிலான ஆட்சி முறையாகும். எனினும், வடக்கு, கிழக்கு ஒன்றிணைந்த மாகாண சபை, அதிகாரத்தில் அற்ப ஆயுளுடன் 1990 முடிவடைந்த பின்னர் வடமாகாணத்தில் இறுதிப் போர் முடிவடைந்த பின்னரான கடந்த 4 ஆண்டுகள் கால இடைவெளியிலும், ஏனைய மாகாணங்களில் தொடரும் இந்த ஆட்சி முறை வடமாகாணத்தில் இன்னமும் நடைமுறைக்கு வரவில்லை. அரசு பல நொண்டிச் சாட்டுகளை முன்வைத்து வடக்கு மாகாண சபைக்கான தேர்தலை நடத்தாது இழுத்தடித்து வருகின்றது.

இந்நிலையில், போரின் பின்னரான 4 ஆண்டுகள் காலத்தில் அரசின் மீது சர்வதேசத்திற்கு ஏற்பட்ட அவநம்பிக்கையின் காரணமாக, இலங்கையை ஓர் அனைத்துலக நெறிமுறைக்குக் கொண்டுவருவதற்காக மென் அழுத்தம் ஒன்றைக் கொடுக்கும் முயற்சியில் 2012, 2013 ஆகிய தொடர்ச்சியான இரு ஆண்டுகளிலும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இரண்டு தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டு அதன் உள்ளடக்கத்தில் ஒன்றான வடமாகாணசபைத் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்ற அழுத்தம் இலங்கை மீது பிரயோகிக்கப்பட்டு வருகின்றது.

இந்த நிலையில் வடமாகாணத்தின் தேர்தலை நடத்தக்கூடாது என்றும், அப்படி நடத்துவதாயின் பொலிஸ், காணி அதிகாரங்களை அகற்றிவிட்டே தேர்தலை நடத்தவேண்டும் என்றும், இவற்றிற்கெல்லாம் மேலாக மாகாண அரசு முறையை ஏற்படுத்திய இந்தியாவின் திணிப்பான 13ஆம் திருத்தச்சட்டத்தையே அரசமைப்பிலிருந்து நீக்கவேண்டும் என்ற மிக அதிகளவில் உக்கிரமடைந்துள்ள பேரினவாதிகளின் எதிர்ப்பு காணப்படுகின்றது.

மேலும் இதற்கெதிரான கையெழுத்து வேட்டை என்று, நாடளாவிய ரீதியில் அறிமுகப்படுத்தப்பட்டு கையெழுத்துகள் பெறப்பட்டும் வருகின்றன. இந்த எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கெல்லாம் உந்துசக்தியாகவும், வலுச்சேர்ப்பதாகவும் நாட்டின் அதியுயர் அதிகார வல்லமையும், கேள்விக்குட்படுத்தப்படமுடியாத செல்வாக்கும் நிறைந்தவரான ஜனாதிபதியின் இளைய சகோதரரும், பாதுகாப்புச் செயலாளருமான கோத்தபாய ராஜபக்ஷவின் ஆதரவும், உதவியுமே அமைந்துள்ளது. இவற்றிற்கெல்லாம் மேலாக இந்த எதிர்ப்பு நடவடிக்கைகளின் பின்னணியில் செயற்படுவது ஜனாதிபதியே எனவும் வலுவான கருத்தும் உள்ளது.

ஆயினும், இவற்றையெல்லாம் தாண்டி

> 13ஆம் திருத்தச் சட்டத்தையே அரசமைப்பில் இருந்து நீக்கவேண்டும் என்ற மிக அதிகளவில் உக்கிரமடைந்துள்ள பேரினவாதிகளின் எதிர்ப்பு காணப் படுகின்றது.

தேர்தலை அறிவிக்கவேண்டிய கட்டாயம் ஜனாதிபதிக்கு அதிகரித்துவருவதாகவும் தெரிகிறது. காரணம், ஐ.நா. மனித உரிமை ஆணையாளரின் ஓகஸ்ட் மாத வருகையும், நவம்பரில் நடைபெறவுள்ள பொதுநலவாய மாநாடுமே எனத் தெரிகிறது. இதற்கும் மேலாக பொதுநலவாய மாநாட்டை திட்டமிட்டபடி நடத்தவேண்டிய கட்டாயம் ஜனாதிபதிக்கு ஏற்பட்டுள்ளது. ஏனெனில், மாநாடு நடைபெறும் நாட்டின் அரசுத் தலைவரே மாநாடு நடந்த பின்னரான அடுத்துவரும் ஈராண்டுகளுக்கு அவ்வமைப்பின் தலைவராக பதவியேற்கும் சம்பிரதாயம் நடைமுறையில் உள்ளது.

எனவே, இந்த மாநாட்டை இலங்கையில் நடத்துவதன் மூலம் அடுத்த ஈராண்டுக்கான புகழ்பெற்ற பொதுநலவாய அமைப்பின் தலைமைப் பதவியைஏற்கும் கௌரவம் இலங்கைக்குக் கிடைக்கவுள்ளது. இது இலங்கையின் செல்வாக்கையும், புகழையும் மாத்திரமல்ல, ஜனாதிபதி ராஜபக்ஷவின் தனிப்பட்ட கௌரவத்தையும், கீர்த்தியையும், உலகளாவிய ரீதியில் உயர்த்தும் ஓர் உன்னத பதவியுமாகும். இப்பதவியை வகிக்கும் ஒரு நாட்டுக்கெதிராகவோ அல்லது அத்தலைவருக்கெதிராகவோ சர்வதேச மட்டத்தில் குற்றச்சாட்டுகளை முன்வைக்கக்கூடிய சாத்தியக்கூறுகள் மிகவும் அரிதானவை. இம்முறை தவறவிட்டால் இவ்வுயர் பதவியும், அதனோடு இணைந்த புகழும், கௌரவமும் இனியொரு முறை இலங்கையாலும் ஜனாதிபதி ராஜபக்ஷவாலும் எதிர்காலத்தில் நினைத்துக்கூட பார்க்கமுடியாது. ஆகவே, என்ன விலைகொடுத்தும் இப்புகழைத் தக்கவைப்பதற்காக ஜனாதிபதி செயற்பட்டேயாகவேண்டும். வடமாகாண சபைக்கெதிராக முன்வைக்கப்படும் அத்தனை எதிர்ப்புகளையும், தடைகளையும் தாண்டி அநேகமாக இம்மாத இறுதிக்குள் வடமாகாண சபைத் தேர்தல் நடைபெறுவதற்கான சட்டபூர்வ அறிவித்தலை ஜனாதிபதி பிரகடனப்படுத்துவார் என நம்பலாம்.

ஆனால் இத்தேர்தல் நடைபெறும்போது மேற்கூறப்பட்ட பேரினவாத அத்துமீறல்களும், அடாவடித்தனங்களும், மனித உரிமை மீறல்களும், தேர்தல் வன்முறைகளும் நடைபெறவே போகின்றன. இவற்றையெல்லாம் மீறி தமிழர் தரப்பு வெற்றிபெற்றாலும் அவர்களுக்குக் கிடைக்கப்போகின்ற அனுகூலமோ, நிவாரணமோ ஏதுமில்லை என்பதும் தெளிவாகின்றது. ஏனெனில், அரசின் அதிகார பலமும், சட்டத்தை மதியாத தான்தோன்றிப்போக்கும் நாடாளுமன்ற எண்ணிக்கைப் பலமும், நீதி நிர்வாகத்தின் மூலம் தமிழரால் நிவாரணம் பெறமுடியாத சட்ட ஆட்சியற்ற தன்மையும், தமிழ் மக்கள் சார்பில் வழங்கப்படும் நீதிமன்றத்தின் தீர்ப்புகள் நடைமுறைப்படுத்தப்படாத நிலையும், அரசுக்கு எதிரான தீர்ப்புகள் மீறப்பட்டு அரசுக்குச் சார்பாக நடைமுறைச் செயற்பாடுகள் தொடரும் நிலையும், இந்த நாட்டில் தமிழ் மக்கள் தமக்கிழைக்கப்படும் அநீதிகளுக்கெதிரான எவ்வித நிவாரணத்தையும், பெற்றுக்கொள்ள முடியாதென்பதை உறுதிப்படுத்துவதுடன் அது எமது பட்டறிவின் பெறுபேறாகவும் கருதத்தக்கது.

இத்தேர்தல் நடைபெறுமாயின், அதன் பெறுபேறுகள் என்னவாக இருப்பினும் அனுகூலங்கள் யாவும் அரசையே சென்றடையும். ஜனாதிபதி கூறுவார் இத்தனை எதிர்ப்புகளுக்கு மத்தியிலும் அவற்றையெல்லாம் புறந்தள்ளி சர்வதேச நியதிகளுக்கும், ஜனநாயக கொள்கைகளுக்கும், நெறிமுறைகளுக்கும், மதிப்புக்கொடுத்து தேர்தலை நடத்தியுள்ளேன் என்று. இது சர்வதேசத்தின் குரலை அடக்கி இலங்கை மீதான அழுத்தங்களைக் குறைப்பதுடன், மனித உரிமை மீறல், போர்க்குற்றச்சாட்டு என்ற குற்றங்களிலிருந்தும் இலங்கை மீள அல்லது அவற்றின் தாக்கத்தைக் குறைத்துக் கொள்ள இலங்கைக்கு பெருமளவில் உதவியாக அமையும். மேலும் பொதுநலவாய மாநாடு இலங்கையில் நடைபெறுவதற்கு எதிரான குற்றச்சாட்டுகளின் தாக்கங்களைத் தணிக்க உதவியாக இருக்கும்.

சில காலம் நீடிக்கக்கூடிய சர்வதேச அழுத்தத்தின் இத்தொய்வு நிலை அவகாசம், மேலும் அதிகமான தமிழ் நிலங்களைப் பறிக்கவும், குடியேற்றங்களை மேற்கொள்ளவும், இன்னும் பல இன அழிப்பு நடவடிக்கைகளைத் தொடரவும் அரசுக்குக் கால அவகாசத்தையும், வசதியும் பெற்றுக்கொடுப்பதாக அமையும்.

மாறாக இத்தேர்தல் நடைபெற தடை ஏற்படுமானால், அது சர்வதேசத்தின் கவனத்தை ஈர்ப்பதாகவும், இலங்கை மீது மேலும் அழுத்தத்தை அதிகரிப்பதாகவும் அமையும். இலங்கை அரசு இலங்கைத் தமிழர்களுக்கு எந்தச் சலுகையையும் வழங்கத் தயாராகவில்லை என்பது மேலும் உறுதிசெய்யப்பட்டு ஏதாவது ஒரு மாற்றுவழியைத் தேடுவதற்கு சர்வதேசத்திற்கு ஓர் உந்துதலைக் கொடுக்கக்கூடும். எமது போராட்டத்தின் தேவையும், நியாயமும் சர்வதேசத்தால் முழுமையாக ஏற்கப்படக்கூடியதாகவும் அமையக் கூடும்.

எனினும், வடமாகாணசபைத் தேர்தல் நடைபெறுமாயின் எக்காரணம் கொண்டும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதனை புறந்தள்ள முடியாது.

எந்தவொரு தமிழ்க் கட்சியும் தேர்தலைப் புறக்கணிக்கவோ, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு எதிராகப் போட்டியிடவோ கூடாது. இப்படியான ஒற்றுமையை வெளிக்காட்டி அதிகூடிய ஆசனங்களைப் பெறுவதன் மூலம் எமது போராட்டத்தின் நியாயத்தையும், தேவைகளையும் இலங்கை அரசின் அநியாய இன ஒழிப்பு ஆட்சியையும், சர்வதேசத்திற்கு வெளிப்படுத்த வேண்டும். இத்தேர்தலில் தமிழர் தரப்பு பெறுகின்ற அதியுச்ச வெற்றியானது அதிகாரங்களைப் பெற்று ஆட்சி செலுத்துவதற்காக அல்ல. ஆனால், எமது ஜனநாயக உரிமைகளையும், இனத்தின் பாதுகாப்பையும் சர்வதேசம் உணர்ந்து – ஏற்று எமது சார்பில் செயற்படத் தூண்டுவதற்காகவே என்பதை ஒவ்வொரு தமிழ் மகனும், மகளும் உணர்ந்து செயற்படவேண்டும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தானங்களில் சிறந்தது...

ராஜராஜன்

கொடையில் சிறந்தது குருதிக்கொடை' என்று கூறுமளவுக்கு இன்று குருதியின் தேவை அதிகரித்துக் காணப்படுகின்றது.

பல்வேறு நோய்களால் பாதிக்கப்பட்டவர்கள், விபத்துக்களில் சிக்கித் கொள்வதால் குருதி இழப்பை எதிர்கொண்டவர்கள் ஆகியோருக்கு குருதியை வழங்க வேண்டிய தேவை ஏற்படுகின்றது.

உரிய வேளையில் இவர்களுக்குத் தேவையான குருதியை வழங்காது விடில் அவர்கள் மரணத்தை எதிர்கொள்ள வேண்டிய அவல நிலையும் ஏற்பட்டு விடுகின்றது. ஆகவே தான் குருதி ஒரு உயிரைவிட மேலானதாக இங்கு மதிக்கப்படுகின்றது.


ஆனால் எம்மில் பலர் குருதிக்கொடை தொடர்பான பூரண அறிவைப் பெற்றிருக்காத காரணத்தால் தமது குருதியைத் தானமாக வழங்குவதற்கு முன்வருவதில்லை- தாம் வழங்கும் குருதியின் மூலமாகப் பல உயிர்களின் இழப்புக்களைத் தவிர்த்துக் கொள்ள முடியுமென்ற விழிப்புணர்வு இவர்களின் மனங்களில் எழுமாயின் குருதிக்கொடைக்கு இவர்கள் ஒரு போதுமே பின்நிற்க மாட்டார்கள்.

ஆரோக்கியமான மனிதன் ஒருவனின் உடலில் ஐந்தில் இருந்து ஆறு லீற்றர் வரையில் குருதி காணப்படுகின்றது. இதில் 200 தொடக்கம் 300 மில்லிலீற்றர் வரையான குருதியை ஒரு தடவையில் வழங்க முடியும். இதனால் எத்தகைய பக்க விளைவுகளும் ஏற்படுவதில்லை. மேலும் வழங்கப்பட்ட குருதியானது இரண்டே வாரங்களில் நாம் உண்ணும் உணவுகளின் வாயிலாக மீண்டும் உற்பத்தியாகிவிடும். அத்துடன் மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை குருதிக் கொடையில் ஈடுபட முடியும்.

சாதாரணமாக 17 வயதிலிருந்து 55 வயது வரையான, எயிட்ஸ், மலேரியா, காமாலை ஆகிய நோய்கள் இல்லாத, 45 கிலோவுக்குக் குறையாத நிறையுடையவர்கள் குருதிக்கொடையில் ஈடுபட முடியும். குருதிக் கொடைக்கு முன்பதாக கொடையாளியின் இரத்த அழுத்தம் பரிசோதிக்கப்படல் வேண்டும். குருதிக் கொடையாளி ஒருவர் குருதியை வழங்கிய பின்னர் தமது அன்றாடக் கடமைகளை வழக்கம்போல மேற்கொள்ள முடியும்.

மேலும் குருதிக் கொடையின் பின்னர் இரத்த அழுத்தம் குறைவடைவதால் மாரடைப்பு வராமல் தடுக்கப்படுகின்றது. குருதி என்பது எமது உயிரைக் காக்கும் திரவமாகவே பயன்படுகின்றது. எமது உடல் எடையில் ஏழு சதவீதம் குருதியாகவே காணப்படுகின்றது. இதிலுள்ள வெள்ளை அணுக்கள் நோய்களைப் பரப்பும் கிருமிகளுடன் போராடி அவற்றை அழிக்கின்றன. இதனால் எமது உடல் ஆரோக்கியம் பாதுகாக்கப்படுகின்றது. குருதியை எம்மால் செயற்கை முறையில் உருவாக்க முடியாது என்பதால் அதனை நாம் எமது உடலில் இருந்தே வழங்க வேண்டிய கட்டாயமான நிலை உருவாகியுள்ளது.

இன்று எமது நாட்டை எடுத்துக்கொண்டால் தினமும் ஏராளமான வாகன விபத்துக்கள் ஏற்படுகின்றன. இவற்றில் சிக்கிக் கொள்பவர்களில் பலர் குருதி இழப்பினால் தமது உயிர்களை இழக்கும் நிலை ஏற்படுகிறது. இவர்களுக்குத் தேவையான குருதியை உடனடியாக வழங்குவதன் மூலமாக இத்தகைய உயிரிழப்புக்களைத் தவிர்த்துக் கொள்ள முடியும். இதற்கு குருதிக் கொடையாளர்களின் பங்களிப்பு மிகவும் இன்றியமையாததாகக் காணப்படுகின்றது.



உலக குருதிக் கொடை தினம் இன்று

இழக்கப்படப்போகும் ஒருவரின் உயிரைக் காப்பதில் உள்ள மகிழ்ச்சியை வேறொரு செயல் மூலமாக நாம் ஒரு போதுமே அனுபவிக்க முடியாது. மேலும் எமது உடல் ஆரோக்கியமும் இந்த உன்னதமான செயற்பாடு காரணமாக மேம்படுகின்றது.

ஆகவே தகுதியுள்ள ஒவ்வொருவரும் குருதிக் கொடைக்கு முன்வர வேண்டும். சிறந்த மனித நேயத்தை நாம் இதன் மூலமாகக் கட்டியெழுப்ப முடியும் என்பதில் சந்தேகமே இல்லை.

# தரமான மாம்பழங்களை பெறுவது எப்படி...?

கலாநிதி: சி.ஜே. அரசகேசரி
(பிரதிப் பணிப்பாளர் ஆராய்ச்சி)
ஆ. இளமாறன் (ஆராய்ச்சி
உதவியாளர்) வட பிராந்திய
விவசாய ஆராய்ச்சி
அபிவிருத்தி நிலையம்



### இரசாயனம் விசிறி பழுக்கவைக்கப்பட்ட பழங்களைக் கண்டறிவது எப்படி?

பழங்களைக் கையிலே எடுத்துப் பார்க்கும்போது, மாம்பழங்கள் பழுத்து உருவாக்கும் தோற்றத்தில் வித்தியாசம் உண்டு. பொதுவாகவே மாங்காய்கள் பழுப்பதற்கு எதிலீன் (Ethylene) என்னும் இரசாயனமே காரணமாகும். இயற்கையில் பழுக்கும் போது மாங்காய் தொங்கியிருக்கும் காம்பில் அப்சிசின் அமிலம் (Abscisic Acid) என்னும் இரசாயனம் தோற்றுவிக்கப்படுவதனால் அங்கு ஒரு பிரிவு ஏற்படுகின்றது. இந்தப் பிரிவின் மூலமாக எதிலீனின் உற்பத்தி தூண்டப்படுவதனால் காய்கள் பழுக்க ஆரம்பிக்கின்றன. இந்த எதிலீன் என்னும் ஓமோன் சீராக பரவுவதனால் மாம்பழங்கள் அடியிலிருந்து நுனியை நோக்கி நிற மாற்றத்துடன் பழுக்கின்றன. மாறாக இரசாயனங்கள் மூலம் பிஞ்சுக் காய்கள் பழுக்க வைக்கப்படும் போது நிறமாற்றம் சீரானதாக இருக்காது. இரசாயனம் நேரடியாகவே தோலில் படுவதனால் மாம்பழம் முழுவதும் ஒரேயடியாக பழுத்தது போன்று தோற்றத்தைக் காண்பிக்கும். இந்தத் தோற்றத்தை பாவனையாளர் அறிந்து கொள்ள வேண்டும்.

இரண்டாவதாக தோல் முழுவதும் இரசாயனங்கள் படுவதால் பழத்தை அழுத்திப் பார்க்கும்போது இலகுவாக கைவிரல்கள் உட்பதிவதை அவதானிக்க முடியும். மாறாக இயற்கையாகப் பழுக்கும் பழங்களில் பழத்தை நசித்துப்பார்க்கும்போது அவ்வாறு இருக்காது. இரசாயனம் பாவித்த பழங்களின் மேற்றோல் இலகுவாக உரிந்து வரும். இயற்கையாக முற்றிப்பழுத்த பழங்கள் சற்று சதையுடன் கூடியே உரிந்துவரும். இவ்வாறான வேற்றுமைகளை நுகர்வோர் அறிந்து கொள்வதன் மூலம் தரமான பழங்களை மட்டும் சந்தையில் பெற்றுக் கொள்ள முடியும்.

### முற்றிய காய்களை கண்டறிவது எப்படி?

மாம்பழ வியாபாரிகளுக்கு உள்ள பிரச்சினை என்னவென்றால் முற்றிய காய்களை தோலில் சாம்பல் பூத்திருப்பதோ, நிறம் மாறியிருப்பதோ காட்டிக் கொடுக்கும். ஆனால் இவற்றைத் தனித்தனியாக மரத்திலிருந்து பிடுங்கி பழுக்க வைப்பது என்பது வியாபார ரீதியில் இலாபம் அளிக்காது. அதனாலேயே ஒரே தடவையில் பிடுங்கி முற்றியதானாலும் சரி, பிஞ்சானாலும் சரி இரசாயனங்களை விசிறி பழுக்க வைத்து சந்தைக்கு விடுகிறார்கள். பழுக்கும்போது பழங்களின் அடர்த்தி கூடுகின்றது. பிஞ்சாக இருக்கும் போது மாங்கொட்டையில் காற்று அடைபட்டு இருப்பதும், காபோவைதரேற் (Carbohydrate) ஆனது பிறக்டோஸ் (Fructose) ஆக மாற்றமடையாமையும் பிஞ்சு மாங்காய்களின் அடர்த்தி குறைவுக்கு காரணமாகும்.

### முற்றிய பழங்களை பழுக்க வைப்பது எப்படி?

மேற்கூறியவாறு அடர்த்தியைப் பயன்படுத்தி முற்றிய காய்களை வேறுபடுத்தும்போது மாங்காய்கள் சற்று ஈரமாக இருக்கும். அவற்றை ஒரு துணியினால் துடைத்து நேரடியாக வெயில் படாத இடத்தில் சீராக அடுக்கி வைத்து உலர்த்தி எடுக்க வேண்டும். பொதுவாகவே எம்மவர்கள் வைக்கோலிலோ, வேப்பமிலைகளிலோ அல்லது அரிசியிலோ அமிழ்த்தி மாங்காய்களை பழுக்க வைத்து எடுப்பது வழக்கமாகும். இவ்வாறு பழுக்க வைக்கும்போது அடர்த்தியின் மூலம் முற்றியதாக அறியப்பட்ட காய்கள் 1-3 நாள்களில் பழுத்து விடும். மேற்போன்ற வைக்கோல், வேப்பமிலை, அரிசி போன்றவைகளில் வைக்காது விடின் 3-5 நாள்களில் பழுத்து விடும்.

ஏற்கனவே கூறப்பட்டதற்கு அமைவாக எதிலீனின் உற்பத்தியை எவ்வழிகளில் அதிகரிக்கின்றோமோ அதற்கமைவாக பழங்கள் விரைவாக பழுத்து விடுகின்றன. வைக்கோல், வேப்பமிலை, அசிரி போன்றவற்றில் காணப்படும் கூரிய பகுதிகள் மாம்பழங்களின் கண்ணுக்குத் தெரியாத நுண் காயங்களை ஏற்படுத்துகின்றன. இதனாலேயே மேற்போன்ற பதார்த்தங்களில் வைக்கும் முற்றிய காய்கள் விரைவாக பழுக்கின்றன. எனவே இவ்வாறு பிரித்து முற்றலாக எண்ணப்படும் பழங்களை வியாபாரிகளும் சரி, விவசாயிகளும் சரி இரசாயனம் விசிறாமலேயே பழுக்க வைக்க முடியும். இதனால் பழங்களின் தரம் பேணப்படுவதுடன் மதிப்பாகவும் விற்க முடியும்.

### முற்றாத பழங்களை என்ன செய்வது?

விவசாயிகளும் சரி வியாபாரிகளும் சரி முற்றாத காய்களை இரசாயனம் விசிறி பழுக்க வைத்து அவற்றைச் சந்தைக்கு விடாது வற்றலாக்கியோ, ஊறுகாயாக பதப்படுத்தியோ விற்பனை செய்ய முடியும்.

இரசாயனங்கள் விசிறி பழுக்க வைக்கப்பட்ட மாம்பழங்களை வேறுபடுத்தி அறியும் வழி முறைகளும் உண்டு. முற்றிய மாங்காய்களை நீர் வாளியொன்றில் இட்டு அடர்த்தி மூலம் வேறு பிரித்து இரசாயனங்களை இல்லாம லேயே இயற்கையான முறையில் எதிலீன் என்னும் ஓமோனின் செறிவை அதிகரித்து தரமான மாம்பழங்களை உற்பத்தி செய்வது வியாபாரிகளுக்கும், நுகர்வோர்க் கும் பயனளிக்கும்.

### இரசாயனம் விசிறாமலேயே எதிலீனை அதிகரிப்பது எப்படி?

முற்றிய காய்களை வேறாக்கி நீண்ட தூரங்களுக்கு அனுப்புகையில் அவ்வப் பிரதேசங்களை அடையும் போது பழமாக சேரவைப்பது வியாபாரிகளுக்கும் பயனளிக்கும். ஆனால் வேப்பமிலை, அரிசி, வைக்கோல் போன்றவற்றில் பழங்களை அமிழ்த்தி அனுப்புவது சாத்தியமற்றதொன்றாகும். ஆகையால் இதற்கு ஒரு மாற்று வழி ஆராயப்பட்டது.

காற்றுப் புகாதவாறு இறுக்கத்தில் மாம்பழங்கள் அடுக்கக் கூடியவாறு பெட்டி ஒன்று தயாரானது. மாம்பழங்களை அடுக்க முன்பு இயற்கையாக பழுத்த பழங்களில் மேற்றோல் உரிகள் பெட்டியின் நான்கு மூலைகளிலும், நடுவிலும் தோலின் மேற்புறம் மேலே இருக்கத்தக்கவாறு வைக்கப்பட்ட பின்பு முற்றிய காய்கள் அடுக்கப்பட்டு பெட்டி மூடப்பட்டது. இதே போன்று முற்றிய காய்களில் இன்னுமொரு மாதிரி மேற்றோல் உரி வைக்கப்படாது மூடப்பட்டது. இவ்விரண்டு தொகுதிகளும் பழுக்கும் காலத்தில் வேறுபாட்டைக் காட்டின. எதிலீன் என்பது ஆவியாகும் தன்மையுள்ள ஒரு ஓமோன் ஆகும்.

பெட்டியினுள் வைக்கப்பட்ட மேற்றோலில் இருந்து வெளியாகும் எதிலீனின் செறிவு பெட்டியினுள் வைக்கப்பட்ட மாங்காய்களை விரைவாக பழுக்க வைத்தது. எனவே இரசாயனம் பிரயோகிக்காமலேயே எதிலீனை இயற்கையாக அதிகரிக்க முடியும்.


### மாங்காய்களை மரத்திலேயே மூடிப் பாதுகாக்கும் முறை

தாய்லாந்து, பிலிப்பைன்ஸ் போன்ற பழ உற்பத்தி நிறைந்த நாடுகளில் மா, கொய்யா போன்றவை கடதாசி மற்றும் நிற பொலீத்தீன்களினால் மூடப்படுவது வழக்கம். அந்த வகையில் இந்த ஆராய்ச்சியின் போது பழங்கள் கடதாசியினால் மூடப்பட்டு பாதுகாக்கப்பட்டது. இந்த வகையில் எடுக்கப்பட்ட பழங்கள் சாதாரணமாக மூடப்படாது எடுக்கப்பட்ட பழங்களை விட மொத்த கரையக்கூடிய திண்மத்தின் (Total soluable solid) பெறுமதி இரண்டு புள்ளிகளுக்கு அதிகமாகவே வித்தியாசத்தை காட்டியது. இந்த வித்தியாசம் அந்தப் பழங்கள் கூடிய சுவையுடையது என்பதை நிரூபிப்பன. அதுமட்டுல்லாது நன்கு அழகான தோற்றத்தினையும் நிறத்தினையும் மதிப்பாக விற்கக்கூடிய தன்மையையும் காட்டி நின்றன. மேலும் அணில் மற்றும் பறவைகளின் தாக்கத்திலிருந்தும் இவை தப்பி விட்டன. எனவே பழங்களை ஓரளவு பிஞ்சுப்பராயத்திலிருந்து இவ்வாறு மூடிப்பாதுகாப்பது நன்மை பயக்கும். ஓரளவு பதிவாக காய்க்கும் மாமரங்களிலேயே இது செயன்முறை ரீதியாக சாத்தியமாகும். முற்றிய பழங்களை நீரற்ற பெட்டியிலிட்டு பிரித்து வைத்தலும், நுண் காயங்களை ஏற்படுத்தும் பாதிப்பில்லாத பொருள்களில் அமிழ்த்தி வைத்தலும், காற்றுப் போகாத இறுக்கமான பெட்டியில் காய்களை அடுக்கி பழுக்க வைத்தலும், மற்றும் பிஞ்சிலிருந்தே உறைகளில் மூடி பழுக்க வைத்தலும் நல்ல தரமான மாம்பழங்களை இலாபகரத்துடன் பெற்றுக் கொள்ள வழிவகுக்கும். அத்துடன் இரசாயனங்களை பயன்படுத்தி பழுக்க வைக்கப்பட்ட பழங்களை நுகர்வோர் கண்டறிதலும் முக்கியமான விடயங்களாகும். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிமுகமாகியது பறக்கும் உணவுப் பரிமாற்றம்







தொழில்நுட்ப வளர்ச்சி மனிதர்களின் வாழ்வில் பல மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது. குறிப்பாக மனிதர்களின் வேலைகளை இலகுபடுத்தியுள்ளது. இதற்குச் சிறந்த உதாரணமாக லண்டனில் உள்ள உணவகமொன்றில் பறந்து பறந்து உணவுகளை வாடிக்கையாளர்களுக்கு வழங்கும் உபகரணத்தைக் குறிப்பிடலாம்.

லண்டனில் உள்ள யோகுசி உணவகமே ஹெலிகொப்டர் போன்ற உபகரணத்தை வாடிக்கையாளர்களுக்கு உணவு பரிமாறும் பொருட்டு அறிமுகப்படுத்தியுள்ளது. இதற்கு ஐடிரே எனப் பெயரிட்டுள்ளது குறித்த உணவகம். குறித்த உபகரணம் மணிக்கு 25 மைல் வேகத்தில் பறந்துசெல்லக் கூடியது. இது பாரம் குறைந்த காபன்பைபர்பிரேம்மூலம் உருவாக்கப்பட்டுள்ளது. உணவக ஊழியர்கள் இதன்மூலம் மேசைக்கு உணவை அனுப்புகின்றனர். அவர்கள் உணவைப் பெற்றதும் ஐடிரே அவ்விடத்திலிருந்து திரும்பி விடுகின்றது. இதனை ஊழியர்கள் பேட்டின் மூலம் கட்டுப்படுத்தப்படுகின்றனர். தற்போது குறித்த உணவகம் தனது இரண்டு கிளைகளில் மட்டுமே இதனை அறிமுகப்படுத்தியுள்ளது. இதற்கு நல்ல வரவேற்புக் கிடைக்கும் பட்சத்தில் இதனைத் தனது 64 கிளைகளிலும் அறிமுகப்படுத்தவுள்ளது. குறித்த நிறுவனம் இதற்கு முன்னரும் பல புரட்சிகர அறிமுகங்களை தனது உணவகங்களில் மேற்கொண்டிருந்தது.

உணவைத் த்னாகச் சென்று வழங்கக்கூடிய 'கொன்வேயர் பெல்ட்' மற்றும் பேசும் ரொபோட்ரோலிஸ் என்பவை அவையாகும்.

இதனால் ஊழியர்களின் நேரம் மீதமாவதுடன், துரிதமாக உணவு பரிமாறப்படுகின்றமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

# பேஸ்புக்கில் தமிழில் எழுத எளிய வழி




பேஸ்புக்கில் எப்படி தமிழில் எழுதுவது என்பது எல்லோரிடமும் இருக்கும் ஒரு கேள்வி? இலகுவாக தமிழில் எழுத ஒரு வழி இருக்கிறது. எமது சிந்தனைகளை, எண்ணங்களை, இணையத்தில் தமிழ் மொழியிலே எழுதலாம் வாருங்கள். இணையத்தில் என்னதான் ஆங்கில மொழியில் நாம் எழுதினாலும். அதையே எம் எண்ணங்களை சொந்த மொழி தமிழில் எழுதும் போது ஏற்படும் உணர்வே தனிதான். எனவே எங்கும் தமிழ், எதிலும் த்மிழ், என்று சகல இடத்திலும் இணையத்திலும் வந்து விட்டது தமிழ் மொழி. நாம் தான் அதைத் தேடிப் பயன்படுத்துவது இல்லை. எனவே நாம் தமிழர்கள், இணையத்தில் தமிழைப் பயன்படுத்துவோம் வாருங்கள். வாழ்க தமிழ், வளர்க தமிழ். இதை கிளிக் செய்யுங்கள் http://www.google.com/transliterate/tamil இதில் நீங்கள் தமிழை எழுதி இதிலிருந்து பிரதி செய்துதான் வேறு ஒரு இடத்தில் பதிவு செய்ய வேண்டும் இதற்கு நெட் வேண்டும்.


ஆனால் நீங்கள் நேரடியாகவே உங்கள் கீபோர்டில் தமிழில் எழுத வேண்டும் என்றால் http://www.-google.com/transliterate/tamil இதன் மேல் பகுதியில் தரவிறக்கம் என்று இருக்கும்.

இதை தரவிறக்கம் செய்து இன்ஸ்டால் பண்ணி கொண்டால் உங்க கணனியின் கீபோர்டில் நேரடியாவே தமிழில் எழுதலாம். அதற்கு நெட் தேவை இல்லை.

ஆனால் உங்கள் கணினியில் நீங்கள் Internet Explorer பாவிக்கின்றவர்களாக இருந்தால், அதில் இந்த தமிழ் எழுத்து வராது. அதில் எழுத முடியாது. நீங்கள் Google Chrome இன்ஸ்டோல் செய்து கொள்ளுங்கள்.

http://www.google.com/inputtools/windows/index.html/ இதிலும் ஒபேராவிலும் மட்டும்தான் தமிழை எழுத முடியும்.

# உலகின் மிகவும் மெலிதான வன் தட்டுக்கள்



அன்றாட வாழ்க்கையில் அத்தியாவசியமாகி விட்ட கணினிகள் தொழில்நுட்பத்தின் வளர்ச்சியில் அதன் கருவிகளின் அளவுகள் சிறிதாகிக்கொண்டே செல்கின்றன.

இவற்றின் அடிப்படையில் கணினிக்கான துணைச் சாதனங்களும் சிறிய அளவில் அறிமுகப்படுத்தப்பட்டு வருகின்றன. அந்த வரிசையில் தற்போது உலகிலே உள்ள வன் தட்டுக்களில் மிகவும் மெலிதான வன் தட்டினை பிரபல சேமிப்பு சாதன உற்பத்தி நிறுவனமான Seagate அறிமுகப்படுத்துகின்றது.

விசேடமாக மடிக்கணினிகள், ரேப்லட்கள் போன்றவற்றுக்காக தயாரிக்கப்பட்ட இவ் வன்தட்டுக்கள் வெறும் 5 மில்லி மீற்றர் தடிப்பைக் கொண்டவையாகக் காணப்படுவதுடன், 320 GB மற்றும் 500 GB ஆகிய இரு அளவுகளில் உருவாக்கப்பட்டுள்ளன. இதில் 500 GB வன் தட்டின் விலையானது 80 அமெரிக்க டொலர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.


# Wikipad அறிமுகமாகிறது புதிய ஹேமிங் சாதனம்



கணினி விளையாட்டுப் பிரியர்களுக்காக அன்ரோயிட் இயங்குதளத்தைக் கொண்ட புதிய Wikipad ஹேமிங் சாதனம் அறிமுகமாயுள்ளது

7 அங்குல அளவு, 1280 x 800 Resolution உடைய தொடுதிரையைக் கொண்ட இச்சாதனம் கூகுளின் Android 4.1 Jelly Bean இயங்குதளத்தைக் கொண்டுள்ளதுடன் சுமார் 50 வரையான விளையாட்டுகளையும் தன்னகத்தே கொண்டு காணப்படுகின் றது. தவிர 2 மெகாபிக்சல் உடைய கமராவையும் கொண்டுள்ள இச்சாதனத்தின் சேமிப்பு நினைவகமானது 16GB ஆக அமைந்துள்ளதுடன் நேரடியாக Google Play Store தளத்திலுள்ள விளையாட்டுகளை தரவிறக்கும் வசதியும் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஆல் இன் வன் ரோபட் கமரா அறிமுகம்



கமராக்களின் வளர்ச்சி எவ்வளவு உயரத்தை எட்டியிருந்தாலும், ஒவ்வொரு தொழில்நுட்பத்துக்கும் தனித் தனி கமராதான் பயன்படுத்தப்படுகிறது.

ஒவ்வொரு கமராவும் ஒவ்வொரு வகையானவை என்பதால் இறுதியில் அனைத்தையும் ஒருங்கிணைக்கும் போது முடிவுகள் வேறுபடும். இவற்றை எல்லாம் கருத்தில் கொண்டு என் ஹெச்கே என்னும் ஜப்பான் நிறுவனம் 8 கமராவை ஒரு கண்ட்ரோலில் இயங்க வைக்கும் ரோபாட்டிக் கமராவைக் கண்டுபிடித்திருக்கிறது.

இதன்மூலம் ஒரு தடவை ஷொட் செய்யும் போது அனைத்து கோணங்களும் ஒவ் வொரு கமரா மூலம் தனித் தனியாய் பதிவாகும் - 3டி கிடைக்கும் அது, போக் ஸ்லோமோஷனும் 360 டிகிரியில் சிறப்பு பிரதிபலிப்பும் இல்லாமல் கிடைக்கப்பெறலாம். இதன் மூலம் ஷொட் செய்வது மட்டுமில்லாமல் பேன் லெஃப்ட் / பேன் ரைட் / டில்ட் அப் / டில்ட் டவுன் கூடச் செய்யலாம்.

இந்த இரண்டு சூப்பர் மோட்டார்கள் மூலம் எல்லா கமராவும் ஒரே நேரத்தில் செயற்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீட்டை சல்லடைபோட்ட திருடர்களுக்கு ஏமாற்றம்

மாங்குளம், ஜூன் 14

வவுனியா கனகராயன்குளம் மகாவித்தியாலயத்துக்கு முன்பாக உள்ள வீடொன்று கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு திருடர்களால் உடைக்கப்பட்டுள்ளது. வீட்டில் எந்தப் பொருள்களும் இல்லாததால் திருடர்களுக்கு ஏமாற்றமே மிஞ்சியது.

இந்தச் சம்பவம் குறித்து தெரிய வருவதாவது:-

கனகராயன்குளம் மகாவித்தியாலயத்தில் கல்வி கற்பிக்கும் ஆசிரியைகள் நால்வர் குறித்த வீட்டை வாடகைக்கு பெற்று அதில் தங்கியிருந்து கற்பித்தலில் ஈடுபட்டுள்ளனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை விடுமுறை என்பதால் அவர்கள் தமது வீடுகளுக்குச் சென்ற நிலையில் அந்த வீட்டுக்குச் சென்ற திருடர்கள் கதவை உடைத்து உள் நுழைந்து வீட்டைச் சல்லடைபோட்டுள்ளனர்.



வீட்டில் திருடருக்கு ஏற்றதாக எந்தப் பொருளையும் ஆசிரியைகள் வைக்காததால் திருடர்களுக்கு ஏமாற்றமே மிஞ்சியது.

ஆனாலும் மறுநாள் குறித்த பிரதேசத்தில் வேறு ஒரு வீட்டுக்குச் சென்ற திருடர்கள் அங்கு 75 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்களைக் களவாடிச் சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவங்கள் தொடர்பில் கனகராயன்குளம் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ஐ-422)

# வரிப்பணத்தை வாங்கினால் போதுமா? பிரதேச சபை மீது வர்த்தகர்கள் சீற்றம்

### விரைவில் வசதிகள் செய்யப்படும் என்கிறார் தலைவர்

கிளிநொச்சி, ஜூன் 14

கிளிநொச்சி பரந்தன் பொதுச் சந்தை ஊடாக மாதாந்தம் எழுபத்தி மூவாயிரம் ரூபாவுக்கும் மேற்பட்ட தொகையை கரைச்சி பிரதேச சபை வரியாக அறவிடுகின்றபோதும் சந்தை அடிப்படை வசதிகள் எவையும் இன்றி சுகாதாரச் சீர்கேட்டுடன் உள்ளது, இதனால் தாம் பல்வேறு நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர் என்று வர்த்தகர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச சபையின் கீழ் உள்ள பரந்தன் பொதுச் சந்தையில், சுமார் எண்பது வரையான வர்த்தகர்கள் தொழில் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். இதேபோல் தினமும் மூவாயிரத்துக்கும் அதிகமான வாடிக்கையாளர்கள் பரந்தன் சந்தையில் சேவைகளைப் பெற்று வருகின்றனர.

இந்த நிலையில் குறித்த சந்தையில் குடிதண்ணீர் வசதி, கழிப்பறை வசதிகள் என்பன சீராக இல்லாததுடன் மீன் மற்றும் இறைச்சிக் கடைகளில் இருந்து தினமும் வெளியேறும் கழிவு நீர் வர்த்தக நிலையங்களுக்கு முன்பாக தேங்கிக் காணப் படுகின்றது.

இந்தப் பிரச்சினைகள் தொடர்பாக பல தடவைகள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்தியும் இதுவரை எந்த முன்னேற்றமும் இல்லை என வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர். கழிவு நீர் தொட்டி அமைக்க நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு கடந்த ஆண்டு குழி வெட்டப்பட்டு அப்படியே கைவிடப்பட்ட நிலையில் காணப்படுகின்றது.

அத்துடன் பொதுச் சந்தையுடன் இணைந்து காணப்படும் பரந்தன் பஸ் நிலையத்துக்கு தனியார் ஒருவரால் கட்டடம் அமைத்துக் கொடுக்கப்பட்டபோதும் அதில் பஸ்கள் தரித்துச் செல்லக் கூடிய வசதிகள் எவற்றையும் பிரதேச சபை இதுவரை ஏற்படுத்திக் கொடுக்கவில்லை எனவும் குற்றஞ்சாட்டப்படுகிறது.

''எமது வர்த்தக நடவடிக்கைகள் மூலம் பிரதேச சபை மாதாந்தம் சுமார் எழுபத்தி மூவாயிரம் ரூபா முதல் எழுபத்தாறாயிரம் ரூபா வரையான நிதியை வரியாகப் பெற்றுக் கொள்கிறது. ஆனால் சந்தைக்கு அடிப்படை வசதிகள் எதனையும் ஏற்படுத்தித்தரவில்லை'' என வர்த்தகர்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

இதேவேளை, பிரதேச சபையின் குறித்த செயற்பாடுகளைக் கண்டித்து கடையடைப்பு நடத்தப்போவதாகவும் தமது கோரிக்கை அடங்கிய மனு ஒன்றை மாவட்ட அரச அதிபர், அதிகாரிகளுக்கு வழங்கப் போவதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த விடயம் தொடர்பாக கரைச்சிப் பிரதேச சபையின் தலைவர் வை.குகராஜாவிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது;

''பரந்தன் சந்தையை புனரமைக்கும் பணிகள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றன. கழிவு நீர்த்தொட்டி அமைக்கும் ஒப்பந்தகாரர் பணிகளை சரியாகச் செய்யாததால் இடைநிறுத்தப்பட்டு வேறு ஒருவருக்கு ஒப்பந்தம் மாற்றப்பட்டுள்ளது.

அந்தப் பணியும் விரைவில் நடைபெறும். ஏனைய குடிதண்ணீர் வசதி, பஸ்தரிப்பிடவசதி, மின்கம்பங்களை அகற்றும் வேலைகள் மிக விரைவில் செய்யப்படும்'' என்றார். (ஐ-6)

## கசிப்பு உற்பத்தி, விற்பனை

### கிளிநொச்சி நீதிமன்றில் தண்டம்

கிளிநொச்சி, ஜூன் 14

கிளிநொச்சியின் பல்வேறு பகுதிகளிலும் சட்டவிரோத மதுபான விற்பனை, உற்பத்தி நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த பலர் கைதுசெய்யப்பட்டு கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றில் தண்டப்பணம் விதிக்கப்பட்டது.

கிளிநொச்சி பன்னங்கண்டி பகுதியில் கடந்த செவ்வாய்க்கிழமை 500 மில்லிலீற்றர் கசிப்பை தம்முடன் வைத்திருந்த ஒருவரை கிளிநொச்சிப் பொலிஸார் கைது செய்து கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றில் நீதிவான் எம்.ஐ. வகாப்தீன் முன்னிலையில் முற்படுத்தியபோது இவர்தனது குற்றத்தை ஒப்புக்கொண்டதை அடுத்து 15ஆயிரம்ரூபா தண்டப் பணம் விதிக்கப்பட்டது.

இதேவேளை, முழங்காவில் பகுதியில் கசிப்பை தம்முடன் மையில் வைத்திருந்த இருவரை கைது செய்த பொலிஸார் அவரை கடந்த 10 ஆம் திகதி கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றில் பதில் நீதிவான் சி.சிவபாலசுப்பிரமணியம் முன்னிலையில் முற்படுத்தினர். சந்தேகநபர் தனது குற்றத்தை ஒப்புக்கொண்டதை அடுத்து 15 ஆயிரம் ரூபா தண்டப் பணம் விதிக்கப்பட்டது.

இதேதினத்தில் விசுவமடுப் பகுதியில் ஒன்றரை லீற்றர் கசிப்பை வைத்திருந்த இருவருக்கும் தலா 30 ஆயிரம் ரூபா தண்டப் பணம் விதிக்கப்பட்டது. (ஐ-6)



வவுனியா இறம்பைக்குளம் அந்தோனியார் ஆலய 125 ஆவது ஆண்டு திருச்சொரூப பவனி நேற்று வவுனியா நகரவீதிவலம் வருகை தந்தபோது பக்தர்கள் அணிவகுத்து செல் வதையும், திருச்சொரூப இரதத்தின் தோற்றத்தையும் படங்களில் காணலாம். (ஓ-402)

### கமநலசேவைக்கு புதிய கட்டடம்

கிளிநொச்சி, ஜூன் 14

கிளிநொச்சி அக்கராயன் குளம் கமநல சேவை நிலையத்தை புதிதாக நிர்மாணிப்பதற்குரிய நிதி உடனடியாக ஒதுக்கீடு செய்யப்படும் என பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் பிரதியமைச்சர் எஸ்.எம்.சந்திரசேன உறுதியளித்துள்ளார்.

கடந்த சனிக்கிழமை கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களுக்கு வந்திருந்த பிரதியமைச்சரிடம் விடுக்கப்பட்ட வேண்டுகோளை அடுத்தே அவர் இந்த உறுதியை வழங்கியுள்ளார். (ஐ-6)

## விசுவமடுவில் காட்டு யானைகள் தொல்லை

முல்லைத்தீவு, ஜூன் 14

முல்லைத்தீவு, விசுவமடு, தொட்டியடிப் பகுதியில் காட்டு யானைகள் தினமும் பெறுமதியான பயன்தரு மரங்களை அழித்து அட்டகாசத்தில் ஈடுபடுவதாகப் பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் விசுவமடு தொட்டியடிப் பகுதியில் கடந்த சில தினங்களாக இரவுவேளைகளில் குடிமனைகளுக்குள் புகும் காட்டு யானைகள் இந்தப் பகுதியில் பெருமளவான விவசாய நிலங்களை அழித்தும் அட்டகாசம் புரிவதாகவும், தென்னை, வாழை, பலா, மா போன்ற பயன்தரு மரங்களையும் அழித்து தொல்லை கொடுப்பதாகவும் பிரதேச வாசிகள் தெரிவிக்கின்றனர்.

கடந்த காலங்களில் இவ்வாறு யானைகளால் தமக்கு எந்த அழிவுகளும் ஏற்படவில்லை என்றும் இப்போது தென்னிலங்கையில் இருந்து கொண்டுவரப்பட்டு விடப்பட்ட யானைகளே இவ்வாறு அட்டகாசம் புரிவதாகவும் இந்தப் பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

போரின் பின்னர் தற்போது மீள்குடியேறிய தாம் வாழ்வாதாரத்துக்காக மேற்கொண்ட பயிர்ச் செய்கைகள் இவ்வாறு அழிக்கப்படுவதனால் தாம் பெரும் நட்டத்தை எதிர்கொள்வதாகவும், இவ்விடயத்தில் உரிய அதிகாரிகள் கவனம் செலுத்த வேண்டும் என்றும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஐ-6)

## பஸ் சேவை நிறுத்தப்பட்டதால் போக்குவரத்தில் அவலப்படும் மக்கள்

அக்கராயன், ஜூன் 14

யாழ்ப்பாணத்திலிருந்து பூநகரி வழியாக அக்கராயன் வரை நடைபெற்று வந்த அரச பஸ் சேவை கடந்த 10 நாள்களாக நிறுத்தப்பட்டுள்ளதால் பயணிகள் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர். குறிப்பாக முக்கொம்பன், அக்கராயன் பகுதிப் பாடசாலைகளுக்கு வருகை தரும் ஆசிரியர்கள் போக்குவரத்து நெருக்கடியை எதிர்கொண்டுள்ளனர். மேலும் முக்கொம்பன் சின்னபல்லவராயன் பகுதிகளைச் சேர்ந்த மக்கள், பூநகரி மருத்துவமனை, பிரதேச செயலகம் ஆகியவற்றுக்குச் சென்று வருவதிலும் கடுமையான இன்னல்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

முக்கொம்பன் கிராம மக்கள் சுமார் 15 கிலோ மீற்றர் வரையான தூரத்தை நடந்து செல்ல வேண்டிய அவல நிலைமை உருவாகியுள்ளது.

முக்கொம்பன் கிராமத்துக்கும் பூநகரி 10 ஆவது கட்டை சந்திக்கும் இடையிலான வீதி புனரமைக்கப்படுவதன் காரணமாகவே இந்தப் போக்குவரத்துச் சேவை தடைப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-18)



## அர்ச்சனைப் பணம் திடீரென மாயம்

### புதூர் நாகதம்பிரான் பொங்கல் உற்சவத்தில்

புதூர், ஜூன் 14

புதூர் நாகதம்பிரான் ஆலய வருடாந்த உற்சவத்தின்போது ஒருதொகை கோயில் பணம் மர்மமான முறையில் காணாமற்போயுள்ளதாக நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர்.

புதூர் நாகதம்பிரான் ஆலய வருடாந்தப் பொங்கல் உற்சவம் கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது. இதன்போது அடியவர்களால் வழங்கப்பட்ட அர்ச்சனைப் பணமே இவ்வாறு காணாமற்போயுள்ளது.

சம்பவம் குறித்து தெரியவருவதாவது:-

பொங்கல் தினத்தன்று பூசைப் பொருள்களை விற்பனை செய்யும் பணியை நெடுங்கேணிப் பிரதேச செயலக நிர்வாகத்தினர் மேற்கொண்டிருந்தனர்.

பூசைப் பொருள்கள் மூலம் சேரும் பணம் ஆலய நிர்வாகத்தினரால் பொறுப்பேற்கப்பட்டு வங்கிக் கணக்குக்கு மாற்றப்படும் வரை பிரதேச செயலகத்திடமே இருக்கும்.

குறிக்கப்பட்ட நேர இடைவெளிக்குள் சேர்ந்த ஒரு தொகைப் பணம் கோயில் நிர்வாகத்தினரிடம் ஒப்படைப்பதற்கு முன்னர் காணாமற்போய் விட்டது.

இதனை அடுத்து கோயில் நிர்வாகத்தினருக்கும் பிரதேச செயலக நிர்வாகத்துக்கும் இடையில் முறுகல் நிலை தோன்றியுள்ளது. [illegible] பணம் எவ்வாறு காணாமற்போனது. அது திருடப்பட்டதா என்பது குறித்து இது வரை தெரியவில்லை.



சம்பவம் குறித்து ஆலய நிர்வாக சபைத் தலைவர் கு.நாகநாதனைத் தொடர்பு கொண்டு கேட்டபோது;

'பூசைப் பொருள் விற்பனையை பிரதேச செயலகம் மேற்கொண்டது. நாம் ஒவ்வொரு மணி நேர இடைவெளியில் சேரும் பணத்தை வங்கிக்கு மாற்றிக் கொண்டிருந்தோம். குறித்த ஒரு மணித்தியாலயத்தில் ஆலய நிர்வாகத்தினர் பணம் பொறுப்பேற்கச் சென்ற போது சற்றுமுன்னர்தான் ஒருவர் பெற்றுச் சென்றதாகத் தெரிவிக்கப்பட்டது. எங்களில் யாரும் அப்படிப் பணம் பெறவில்லை. இதன் காரணமாகவே இரு தரப்புக் களுக்கும் இடையில் முரண்பாடுதோன்றியது. தற்போது விசாரணைகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன. இதன் பின்னரே சட்ட நடவடிக்கை குறித்து ஆராய வேண்டும் – என்றார். (ஐ-422)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

## இன்றைய நாள்

### உங்களுக்கு எப்படி?

**மேஷர்:** சொன்ன சொல்லைக் காப்பாற்ற பரபரப்புடன் செயற் படுவீர்கள். மனதுக்குப்பிடித்தவர்களுக்காக அதிகம் செலவு செய்வீர்கள். உத்தியோகத்தில் மதிக்கப்படுவீர்கள். முன்கோபத்தைத் தவிர்ப்பீர்கள்.

**இடபர்:** நட்பு வட்டாரம் விரிவடையும். பணவரவு திருப்தி தரும். வியாபாரத்தில் மறைமுக எதிர்ப்புகளை சமாளிப்பீர்கள். பிரபலங்களைச் சந்திப்பீர்கள். உத்தியோகத்தில் மகிழ்ச்சியுண்டு.

**மிதுனர்:** சில தினங்களாக தடைப்பட்டுவந்த காரியங்களெல்லாம் இன்று சுமுகமாக முடியும்.உறவுகளுக்கு மத்தியில் மதிக்கப்படுவீர்கள். உத்தியோகத்தில் உங்களின் திறமைகள் வெளிப்படும்.

**கடகர்:** சாதாரணமாகப் பேசப் போய் சண்டையில் முடியும். சிலரின் தவறான செயல்களை எண்ணி வருந்துவீர்கள். யாரும் உங்களை புரிந்து கொள்ளவில்லை என ஆதங்கப்படுவீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகள் குறை கூறுவார்கள்.

**சிங்கர்:** உறவினர், நண்பர்களில் சிலர் பணம் கேட்டு நச்சரிப்பார்கள். வியாபாரத்தில் புதிய முதலீடு செய்யலாம். உத்தியோகத்தில் சக ஊழியர்களுடன் விவாதம் வந்து நீங்கும்.

**கன்னி:** வீண்செலவுகளைத் தவிர்ப்பீர்கள். பேச்சில் தன்னம்பிக்கை பிறக்கும். உத்தியோகத்தில் மேலதிகாரியின் ஆதரவைப் பெறுவீர்கள். முன் கோபம் குறையும். வெளியூர் பயணங்கள் மகிழ்ச்சி தரும்.

**நாளை**

ஆனி-01 சனிக்கிழமை 15.06.2013

திதி: ஷஷ்டி கா.06.39 வரை

நட்சத்திரம்: மகம் மு.ப. 09.13 வரை

சுபநேரம்: 02.53 - 04.23 வரை

இராகுகாலம்: 08.53 - 10.23 வரை

**துலார்:** திட்டமிட்ட காரியங்களைச் சிறப்பாகச் செய்து முடிப்பீர்கள். சகோதரவகையில் மகிழ்ச்சி தங்கும். நண்பர்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும்.

**விருச்சிகர்:** எதிர்பார்த்த இடத்திலிருந்து பணம் வரும். புதிய சிந்தனைகள் மனதில் தோன்றும். வெளிவட்டாரத்தில் மதிக் கப்படுவீர்கள். ஆன்மிகத்தில் நாட்டம் அதிகரிக்கும்.

**தனுசு:** சிக்கலான, சவாலான காரியங்களையெல்லாம் கையில் எடுத்துக் கொண்டிருக்காதீர்கள். வாக்குறுதியை நிறைவேற்றப் போராட வேண்டிவரும். சந்தேகப் புத்தியால் நல்லவர்களை இழக்க வேண்டி வரும். உத்தியோகத்தில் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது.

**மகரர்:** திறமையுடன் செயற்பட்டு சில காரியங்களை முடிப்பீர்கள். மனக் குழப்பங்கள் நீங்கும். உத்தியோகத்தில் மேலதிகாரியின் பாராட்டைப் பெறுவீர்கள். முன் கோபம், வீண் அலைச்சல் விலகும். நண்பர்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும்.

**கும்பர்:** சவால்கள், ஏமாற்றங்களைத் தாண்டி வெற்றிஅடைவீர்கள். வெளி வட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். வீண் டென்ஷன், அலைச்சல் நீங்கும்.அரசியல் வாதிகளின் சந்திப்பு நிகழும். வெளியூர் பயணங்களால் ஆதாயம் பெறுவீர்கள்.

**மீனர்:** வெளியூரிலிருந்து நல்ல செய்தி வந்து சேரும். உத்தியோகத்தில் வேலை சுமை குறையும். வாழ்க்கைத்துணையின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். ஆடம்பரச் செலவுகளை தவிருங்கள். நட்பு வட்டாரம் விரிவடையும்.

## சுடோக்கு

### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | | | | 5 | | 2 | 4 | |
| | | 7 | 4 | 1 | | 3 | 6 | |
| | | | 6 | 2 | | 8 | | 7 |
| | 2 | | | | 9 | 1 | | |
| | 4 | | | 6 | | | 7 | |
| | | 8 | 1 | | | | 9 | |
| 9 | | 4 | | 8 | 1 | | | |
| | 8 | 2 | | 7 | 4 | 9 | | |
| | 1 | 3 | | 9 | | | | 8 |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 3 | 4 | 1 | 5 | 9 | 6 | 2 | 7 |
| 5 | 1 | 2 | 7 | 8 | 6 | 9 | 3 | 4 |
| 9 | 7 | 6 | 3 | 4 | 2 | 1 | 8 | 5 |
| 6 | 2 | 1 | 8 | 7 | 5 | 4 | 9 | 3 |
| 7 | 5 | 3 | 9 | 6 | 4 | 2 | 1 | 8 |
| 4 | 8 | 9 | 2 | 1 | 3 | 7 | 5 | 6 |
| 3 | 6 | 5 | 4 | 2 | 1 | 8 | 7 | 9 |
| 1 | 9 | 7 | 6 | 3 | 8 | 5 | 4 | 2 |
| 2 | 4 | 8 | 5 | 9 | 7 | 3 | 6 | 1 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல்தான் இதன் அடிப்படை. 1 - 9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1 - 9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1 - 9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

# 45 ஆம் நாள் நினைவஞ்சலி

## அமரர் சாந்தலிங்கம் கருணாதேவி

**மலர்வு : 19.04.1948**

**உதிர்வு : 01.05.2013**



வண்ணச் சிவப்பழகு
வாகான நடையழகு
கண்ணில் கவின் அழகு
கண்டோர் நயப்பழகு
சின்னச் சிறுமியைப் போல்
சிங்காரப் பேச்சழகு
எண்ண இதமளிக்கும்
எம்மவளே எங்குற்றாய்!



கோயில் வழிபாடு
கோணாத உபசரிப்பு
வாடும் தமர் கண்டால்
வரையாத கொடையுடைமை
தேடும் தலைப் பொறுப்பு
தீர்க்கும் குறை, பாசம்
தேக்கும் தலைவியரே
சேர்ந்திரோ சிவன் கழலே!

அன்னையாய் தயவு காட்டி
அடிமையாய் பணிகள் செய்து
பொன்னதாய் அழகுகாட்டி
புவியதாய் பொறையும் கூட்டி
வண்ண மென் மயிலாய் ஆடி
வலிய மந்திரியுமாகி
பெண்ணதாய் வாழ்ந்த தாயின்
பெருமையாம் பேசுவோமே!

என்றும் உங்கள்
நினைவுகளுடன் வாழும்
**குடும்பத்தினர்.**

"சாந்தநிகேதன்", வட்டப்பாதி, புலோலி மேற்கு, பருத்தித்துறை.

(38227) (2.6.3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாயிநாதன் திருமணசேவை

கொழும்பு மாநகரில் பல திருமணங்களை நிறைவேற்றி முன்னணியில் திகழும் சாயிநாதன் திருமண சேவையினர்

**இம்மாதம் 15,16ஆம் திகதிகளில்**
**இல.403, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.**
(பெருமாள் கோயிலுக்கு அருகில்,சன்மார்க்க பாடசாலைக்கு முன்) பதிவுகளை மேற்கொண்டு சேவையை வழங்கவுள்ளார்கள்.

**பதிவுக் கட்டணம் இல்லை.**

**இந்து, கிறிஸ்தவ, சைவ, வெளிநாடு, உள்நாட்டு குறிப்புகள் எம்மிடம் உண்டு.**

பதிவு நேரம்: காலை 9 மணி - மாலை 5 மணி
தொ.பே.: 077 735 5428, 011 344 3929(யாழ்.)
011 236 4146 (கொழும்பு)
Fax: 011 236 3436
Email :saainathan.lk@gmail.com
(38302)(5.6.7)

## Vacancies

யாழ். நகரில் உள்ள தனியார் உல்லாசப் பயணிகள் விடுதிக்கு கணினி அறிவுடைய Cashier, அறை பராமரிப்பாளர் (Room Boy) தேவை.

**Tilko Jaffna City Hotels**
(Pvt) Ltd,
No.70/6, KKS Road,
Jaffna

தொடர்புகளுக்கு உடன் அழையுங்கள்
T.P- 0777696443,
0770780393
E.mail-
tthilagaraj@yahoo.co.uk

## பணம் வசூலிப்பாளர் தேவை

சிங்களத்தில் பேசக்கூடிய
35 வயதுக்கு மேற்பட்டவர்கள்
தொடர்புகொள்ளவும்.
(சி/0701)(45.6.3)
தொடர்பு: 021 227 0586


### பருத்தித்துறையில் நான்கு இணைப்பு வீதிகள் புனரமைக்க நடவடிக்கை

வடமராட்சி, ஜூன் 14
பருத்தித்துறை நகரில் உள்ள நான்கு இணைப்பு வீதிகளை சபை நிதி மூலம் புனரமைப்புச் செய்ய நகர சபை தீர்மானித் துள்ளது.

இதற்கமைய சல்லி சீமா ஒழுங்கை, வளலாய் ஒழுங்கை, நான்காம் குறுக்குத் தெரு இணைப்பு வீதி, தட்டா தெரு ஒழுங்கை ஆகிய வீதிகளே திருத்திப் புனரமைக்கப்படவுள்ளன. (வ-8)

### கைதடிப் பாலத்தில் விபத்து

தென்மராட்சி, ஜூன் 14
வேகமாக வந்த மட்டக்களப்பு- யாழ்ப்பாணம் பஸ் கைதடிப் பாலத்துக்கு அருகில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வாகனத்துடன் மோதியுள்ளது.

இந்தச் சம்பவம் புதன் கிழமை கைதடி பாலத்துக்கு அருகில் இடம்பெற்றது. சாவகச்சேரி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். விபத்தில் காயமடைந்தவர்கள் யாழ். போதனா வைத்திய சாலைக்கு கொண்டு செல்லப்பட்டனர். (வ-9)


## DiCA Diploma In Computerized Accounting

இலங்கை அரசால் அங்கீகரிக்கப்பட்ட
வேலை வாய்ப்பை உறுதிப்படுத்தும்
**பெறுமதிமிக்க கற்கைநெறி**
**முற்றிலும் இலவசமாக!**

Course Contents
*MYOB *Quick Books *ACCPAC
*SAGE *Peachtree *Tally

**புதிய பிரிவுகள்**
**17.06.2013 மற்றும் 21.06.2013**
ஒரு பிரிவில் 25 மாணவர்கள் மட்டுமே...!

**DiE Diploma in English**
Duration : 4 months Free Text Books
இலவசக் கற்கைநெறியைப் பயின்று DiE யை குறைந்த கட்டணத்தில் பெற்றுக்கொள்ளுங்கள்...!

100% DISCOUNT
ESOFT (Pvt) Ltd
**கற்கைநெறி முடிவில் வேலைவாய்ப்பு**

ESOFT Shaping Lives, Creating Futures.
**ESOFT METRO CAMPUS -JAFFNA**
No.137, K.K.S Road, Jaffna | Tel : 021 750 1120
**CALL : 077 309 9308**



## குரும்பசிட்டி அருள்மிகு முத்துமாரி அம்பாள் தேவஸ்தான பரிபாலன சபை வருடாந்தப் பொதுக்கூட்டம்

மேற்படி பொதுக்கூட்டம் 21.07.2013 ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11.00 மணிக்கு ஆலயமண்டபத்தில் நடைபெறவுள்ளது. சகல அடியார்களையும் கூட்டத்திற்கு சமுகமளிக்குமாறு அன்போடு கேட்டுக்கொள்கின்றோம்.

பிரேரணைகள் சமர்ப்பிக்க விரும்புவோர் 28.06.2013 வெள்ளிக் கிழமைக்கு முன்னராக செயலாளரிடம் நேரடியாகவோ அல்லது அம்பாள் தேவஸ்தான பரிபாலன சபை,குரும்பசிட்டி,தெல்லிப்பழை என்ற முகவரிக்கு அஞ்சல் மூலமாகவோ சேர்ப்பிக்குமாறு தயவோடு கேட்டுக் கொள்கிறோம்.

குறிப்பு:- ஆலய வரலாறும் கும்பாபிஷேக நிகழ்வுகளும் குணரத்தினம் ரவிநந்தாவினால் இறுவட்டு செய்யப்பட்டுள்ளது. இது பொதுக் கூட்டத்தில் வெளியிடப்படும். CD ஒன்றின் விலை 500/= ரூபா.

(38304)(5-6-7)
பரிபாலன சபையினர்.

## காணி விற்பனை

கலாசாலை வீதி, திருநெல்வேலியில் அமைந்துள்ள 2 பரப்பு 16குளி வெற்றுக்காணி விற்பனைக்குண்டு.
மேலதிக விவரங்களுக்கு
(சி/9816)
**0777551431**

## St.Antony's

LAP TOP மலிவு விற்பனை
DELL D/CORE NOTE BOOK
29750/- மட்டுமே.
ஒரு வருட உத்தரவாதம்.
JAFFNA TOWN
0212224865/ 0750698608
இவ்விலை 3 நாள்கள் மட்டுமே.

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம், லக்கினத்தில் செவ்வாயும், 22½ கிரகபாவமும் உடைய கனடாவில் சுயமாக தொழில் நிலையம் நடாத்தும் 36 வயதுடைய மணமகனுக்கு அழகான, குணமுடைய மணமகள் தேவை. தரகர்கள் தேவையில்லை.
(38314)(16.14.7.9)
தொடர்பு- 0772263560

## யாழ். - கிளிநொச்சி Staff சேவிஸ்

A/C Bus வரும் திங்கள் முதல் பரமேஸ்வரா சந்தி அருகில் இருந்து யாழ். பஸ் தரிப்பு ஊடாக கிளிநொச்சிக்கு தினமும் காலை 6.30 சென்று மீண்டும் மாலை 5.30 வரும். உடன் ஆசன பதிவிற்கு.
(38312) 0777750308

## வீடு விற்பனைக்கு

யாழ். ஸ்ரான்லி வீதி அத்தியடியில் 1¾ பரப்பு காணியுடன் சகல வசதிகளுடனும் வீடு விற்பனைக்குண்டு
தொடர்பு: 077 985 6359
(பி/8944)(3.6.11)

## தவறிவிட்டது

இல. 07, கைலாசபிள்ளையார் கோவிலடி, நல்லூர் எனும் முகவரியைச் சேர்ந்த கதிரவேலு பஞ்சலிங்கம் என்பவரின் தே.அ.அட்டை (451401327V) கைலாசபிள்ளையார் கோவிலுக்கும் நல்லூருக்குமிடையில் போகும்போது தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்வரும் தொ.பே இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.
(38278)(3.6.11)
தொடர்பு:077 691 6940

## வீடு வாடகைக்கு

யாழ். மாநகர சபைக்குட்பட்ட பகுதியில் (மனோகரா தியேட்டர் சந்தி அருகில்) 4 அறைகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு.
(38315)(16.14.7.9)
தொடர்பு- 0779356349

## விற்பனைக்கு

நல்ல இன பொமனேரியன் நாய்க்குட்டிகள் (45 நாள்) விற்பனைக்குண்டு.
தொடர்பு: 021 222 2374
(38293)(3.6.11)

சித்தன்கேணி
### அருள்மிகு ஸ்ரீ நாககன்னியம்மன் ஆலய வருடாந்த உற்சவம் - 2013

ஸ்ரீ நாககன்னி மெய்யடியார்களே!
நிகழும் மங்களகரமான விஜயவருடம் வைகாசி மாதம் 31ஆம் நாள் 14.06.2013 வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு கும்ப பூசைகளுடன் அபிஷேக ஆராதனைகள் நடைபெற்று வசந்தமண்டப பூசையுடன் அம்பாள் திருவீதியுலா வந்து அருள்பாலித்தலை மெய்யடியார்கள் கண்டு பேரானந்த பெருவாழ்வு வாழ்க.
*14.06.2013 வெள்ளிக்கிழமை திருவிழா ஆரம்பமாகி தொடர்ந்து பத்து நாள்கள் நடைபெறும்.
*23.06.2013 அன்று விசேட தீ மிதிப்பு வைபவமும் நடைபெறும்.
*30.06.2013 வைரவர் மடையும்
*19.07.2013 அஷ்டோத்திர 108 சங்காபிஷேகம் நிகழும்.
குறிப்பு:- பத்து நாள்களும் விசேட சொற்பொழிவுகள் நடைபெறுவதுடன் அன்னதானமும் நடைபெறும்.
கிரியை சிறப்புற நிகழ்த்துபவர்
**சிந்துஞானகுரு இந்திரன் ஐயா**
மங்கள வாத்தியம்:- K.N.இராமநாதன் குழுவினர்.(வட்டுக்கோட்டை)
சுபம்
அம்பிகையை சரணடைந்தால் அதிக வரம் பெறலாம்.
ஆலய ஞானகுருவும் தொண்டர்களும்.

## பணிப் பெண் தேவை

பணிப்பெண் தேவை
(35067)(45.6.3) தொடர்பு: 078 930 3724

## நாய்க்குட்டி விற்பனைக்கு

டோமன் அல்சேசன், பொமேரியன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு.
(3.6.11)
தொடர்பு: 077 023 7334, 077 485 2324

## வீடு வளவு விற்பனைக்கு

மாகியப்பிட்டி,சண்டிலிப்பாயில் 5 பரப்பில் கிணற்றுடன் கூடிய வீடு,வளவு உடன் விற்பனைக்குண்டு. (சகல வசதிகளுடன் கூடிய வீடு)
(38236)(3.5.6)
தொடர்பு:075 8372838, 077 477 1483

## காணி விற்பனைக்கு

தொழிற்சாலைகள் மற்றும் பண்ணைகள் அமைப்பதற்கு ஏற்றவகையில் வடிவமைக்கப்பட்ட சுற்றுமதிலுடன் யாழ்.காரைநகர் வீதி, [illegible] 20 பரப்புக் காணியுடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு:075 731 6139

## பணிநிலை வெற்றிடம்

* வரவேற்பாளர் (Receptionist)
* **கணினி வடிவமைப்பாளர்**
(Typing ,Photoshop CoralDRAW) (அனுபவம் உள்ளவர்கள்)
* ஒப்புநோக்குநர் (Proof Reader)
* சிற்றூழியர்

**நேர்முகத்தேர்வு :**
15.06.2013 சனிக்கிழமை
(சி/9687)(3.6.6)
மு.ப 09.00 மணி - பி.ப 02.00 மணி வரை

ANDRA Digital Image
379/167, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
0776622981, 021 222 8929


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் விளம்பர தொடர்புகளுக்கு:
021 5671111
advt@uthayan.com

## பதின்மூன்றாம் ஆண்டு நினைவில்.....



மெழுகாக உருகி
எம்மைக் காத்தீர்........
உம் நினைவில் என்றும்
வாழ்கின்றோம்........

திதி: 14.06.2013



சின்னத்துரை
கனகசபை
(ஓய்வுநிலை இராணுவ அதிகாரி)

சிதம்பரப்பிள்ளை
விசாலாட்சி


மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,பேரர்.

ஈஸ்வரி இல்லம்
மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.

கல்வயல்,
சாவகச்சேரி.

(38265)(3.5.6)

## 9 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் ஆறுமுகம் கனகம்மா
(இளைப்பாறிய ஆசிரியர்)
14.06.2013

மண்ணில்
30.01.1931

விண்ணில்
25.05.2004

உவகையொடு மடி மீது எம் எழுவரையும் நீ சுமந்து உலகை இது என்றறியும் அறிவுதனை எமக்குத் தந்து எவ்வளவு இடர்வரினும் அவ்வளவும் எதிர்வுகொள்ளும் எவரிடமும் சளைத்திடாத மதிப்புப் பெறும் துணிவு தந்து பதமோடு எமக்கு உகந்ததெல்லாம் பார்த்து பார்த்து செய்துதந்து பக்குவமாய் எமை வளர்க்கப் பத்தியங்கள் நீ இருந்தே அத்தனையும் நாம் பெற்று பாரினிலே பக்குவமாய் எம்மை வாழவைத்து விட்டு சத்த மின்றி எமை விட்டு பிரிந்து ஆண்டு ஒன்பது ஆனதம்மா கத்தி என்ன கதறி என்ன உன் உடன் பிறந்த தங்கையையும் துணையாக நீ கூட்டிச் சென்றுவிட்டாய் அம்மா அம்மா அம்மா!

"ஜெயபதி"
தாமோதரம் வீதி. சாவகச்சேரி.

ஜெயபதி - குடும்பம்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில்
31
*
08
*
1973

விண்ணில்
26
*
05
*
2012



### அமரர் பிறேமினி யோகலிங்கம்


*ஓராண்டு சென்றதம்மா உங்கள் நினைவுகள் அழியவில்லை*
*மீண்டும் உங்கள் முகம் காணத் துடிக்கின்றோம்*
*துயர வடுக்களையும் இதயத்தில் சுமக்கின்றோம்*
*நிலையில்லா வாழ்வென்று அறிந்திருந்தும்*
*நித்தியமாய் எம்மோடு வாழ்வீரென்று*
*மகிழ்வாக நாமிருந்தோம் - இன்று மனம் கலங்கி நிற்கின்றோம்.*
*அம்மா நீ எங்கு சென்றாய்? மகளே நீ எங்கு சென்றாய்?*
*உறவே நீ எங்கு சென்றாய்? உயிரே நீ எங்கு சென்றாய்?*
*உலக நியதியை உணர்ந்து உண்மை உணர்வு பெற்று*
*உங்கள் ஆத்ம சாந்திக்காக உளமாறப் பிரார்த்திக்கின்றோம்.*
*ஓம் சாந்தி! ஓம் சாந்தி!*

திதி
14
-
06
-
2013

(37459)(3.5.6)

*உங்கள் நினைவுகளுடன்* **குடும்பத்தினர்.**

# 10 ஆவது ஆண்டு நினைவு தினம்



**தோழர் றொபேட்**
**(தம்பிராசா சுபத்திரன்)**
**நுணாவில் மேற்கு, சாவகச்சேரி.**

24.12.1957 - 14.06.2003

தோழர் றொபேட் ஈ.பி.ஆர்.எல்.எவ் இன் உருவாக்கத்திலும் அதனை நிலை நிறுத்தியதிலும் பெரும் பங்கை வகித்தவர்.

அவர் தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளை வென்றெடுப்பதற்காகவும், ஜனநாயக உரிமைகளை மீட்டெடுப்பதற்காகவும், சமூக அடக்கு முறைகள், பிற்போக்குத் தனங்களுக்கு எதிராகவும் கால் நூற்றாண்டு காலம் துணிச்சலாகக் குரல்கொடுத்தவர், உறுதியாகப் போராடியவர்.

யாழ்.மாநகர சபை உறுப்பினராக எதிர்க் கட்சிகள் வரிசையில் இருந்த அவர் யாழ். மாநகர சபையின் செயற்பாடுகளுக்கு ஆக்க பூர்வமான பங்களிப்பை வழங்கியவர்.


அவரது இழப்பு கட்சிக்கும், தமிழ் மக்களுக்கும் பேரிழப்பாகும். அவரது உடம்போடு அவர் கொண்டிருந்த இலட்சியங்கள் அழிந்து விடாது அவை, இன்றும் என்றும் மனித குலத்தின் நேசிப்புக்குரியவை. சகமனிதனை நேசிப்பவர்கள் உயர்த்திப்பிடிப்பவையாகும். அவரது உன்னத பணிகளை நினைவு கூர்ந்து அவருக்கு அஞ்சலி செலுத்துவோம்.

தியாகிகள் தின அஞ்சலி நிகழ்வுகள் எதிர்வரும் 19ஆம் திகதி இல.294 கண்டிவீதி, புங்கங்குளம் சந்தி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள எமது கட்சி அலுவலகத்தில் இடம்பெறும் உயிர் நீத்த தோழர்களின் பெற்றோர்கள், குடும்பத்தவர்கள், தோழர்கள், ஆதரவாளர்கள் அனைவரையும் இந்த அஞ்சலி நிகழ்வுகளில் கலந்துகொள்ளுமாறு அன்போடு அழைக்கின்றோம்.

(38284) (10.6.3)

பத்மநாபா ஈ.பி.ஆர்.எல்.எவ்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பெரும்பாலும் மேகக் கூட்டத்துடனான காலநிலை நிலவும்.

# வடக்குத் தேர்தலுக்கு முன் சந்திரசிறியை பதவி நீக்குக

## அரசிடம் கோருகிறார் மனோ

கொழும்பு, ஜூன் 14

வடக்குமாகாண ஆளுநராகப் பணியாற்றும் முன்னாள் இராணுவ அதிகாரி ஜி.ஏ. சந்திரசிறியை வடமாகாண சபைத் தேர்தலுக்கு முன்னர் பதவியிலிருந்து அகற்ற வேண் டும் என்று ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோகணேசன் கோரியுள்ளார்.

அதிகாரத்தைப் பகிர்ந்து ஐக்கியப் படுத்தும் இயக்கம் கொழும்பில் நேற்றுமுன்தினம் நடத்திய ஊடக வியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

இந்த நாட்டில் சுயாதீன பொலிஸ் ஆணைக்குழுவை இல்லாமல் செய்தவர்கள் விமல் வீரவன்ஸவும் சம்பிக்கவும் தான். சுயாதீன பொலிஸ் ஆணைக்குழு இருந்திருந்தால் மாகாணத்தில் என்ன மத்திய அரசிலும் பொலிஸ் அதிகாரங்களைப் பற்றி கவலைப் பட்டிருக்க மாட்டோம்.

சுயாதீனமாக பொலிஸ் துறை செயற்படுமாக இருந்தால் வட மாகாணப் பொலிஸ் சம்பந்தனின் பொலிஸாகவோ, மத்திய அரசின் பொலிஸ் மஹிந்தவின் பொலிஸாகவோ இருக்காது. ஆனால் இன்று பொலிஸின் நிலை சந்தி சிரிக்கும் நிலையில் இருக்கின்றது.

பொலிஸ் அதிகாரிகள் ஆளும் கட்சி அரசியல் வாதிகளிடம் அடி, உதை வாங்கி காயப்படுகின்றனர். பொலிஸ் நிலையங்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகள் உயிரிழக்கின்றனர். உயர் பொலிஸ் அதிகாரி பாதாளக் கோஷ்டியுடன் இணைந்து கொலை செய்கின்றார்.

இத்தகைய சீரழிவான பொலிஸை வைத்துக்கொண்டு விமலும் சம்பிக்கவும் பேசுகின்றனர்.

சுயாதீன பொலிஸ் ஆணைக் குழுவைக் கொண்டுவந்து விட்டு மாகாண சபைகளுக்கு பொலிஸ் அதிகாரங்களைக் கொடுக்க வேண்டாம் என்று இவர்கள் பேசட்டும். மாகாண சபையில் இருந்து பறிக்கப்படும் பொலிஸ் அதிகாரங்களை மத்திய அரசிடம் வழங்கினால் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி பொலிஸாக வடமாகாண சபைக்கு எதிராக செயற்படும். நாங்கள் மஹிந்தவின் பொலிஸை எதிர்க்கின்றோம். நாளை வடக்கில் அது சம்பந்தனின் பொலிஸாக மாறுமானால் அதையும் கண்டிப்பாக எதிர்ப்போம் - என்றார். (த-5)



தீவக வலயத்தினால் எழுவைதீவு றோ.க.த. வித்தியாலயத்தில் நடத்தப்பட்ட இடர் முகாமைத்துவ அணியைத் தெரிவு செய்வதற்கான கூட்டத்தில் யாழ். செயலக இடர் முகாமைத்துவ பணிப்பாளர் எஸ்.ரவி உரையாற்றுவதையும் அதிபர் எஸ்.விஜயகுமார், ஆசிரிய ஆலோசகர்கள் எஸ். கிருபாகரன், சி.கமலநாதன் ஆகியோரையும் காணலாம். (ந-7)

## அதிபர் பதவிக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், ஜூன் 14

தீவக வலயத்தில் வகை 1 C ஐச் சேர்ந்த அனலைதீவு சதாசிவ மகாவித்தியாலயத்தில் அதிபர் வெற்றிடத்துக்கு அதிபர், ஆசிரியர்களிடமிருந்து விண்ணப்பம் கோரப்பட்டுள்ளன.

ஆயிரம் பாடசாலைகள் அபிவிருத்தித் திட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட இந்தப் பாடசாலை அபிவிருத்தி செய்யப்பட்டு வருகிறது. அதற்கு இலங்கை அதிபர் சேவை வகுப்பு I 2-1 ஐச் சேர்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன. இவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கிடைக்காத பட் சத்தில் தீவக வலயத்துக்குட்பட்ட இலங்கை ஆசிரியர் சேவை வகுப்பு I, 2-I 2-II சேர்ந்த பயிற்றப்பட்ட பட்டதாரிகளின் விண்ணப்பங்கள் கவனத்தில் கொள்ளப்படும். இவர்களும் தவறின் அடுத்த தரத்திலுள்ள ஆசிரியர்களின் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படும். தீவகக் கல்வி வலயத்தில் விண்ணப்பப்படிவங்களைப் பெற்று எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் தி.ஜோன் குயின்ரஸ்கேட்டுள்ளார். (ந-4)

## உற்சவ காலத்தில் விசேட படகுச் சேவை

நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலய பெருந்திரு விழாவுக்கு செல்லும் பக்தர்களின் நன்மைகருதி ஊர்காவற்றுறை கண்ணகை அம்மன் இறங்குதுறையில் இருந்து விசேட படகுச் சேவைகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாக யாழ். அரச செயலகம் அறிவித்துள்ளது.

ஊர்காவற்றுறைப் பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் இந்தச் சேவை எதிர்வரும் 20 ஆம் திகதி வரை நடத்தப்படவுள்ளது. விசேட தினங்களில் பக்தர்களின் எண்ணிக்கையை கருத்தில் கொண்டு பிற்பகல் 2 மணியிலிருந்தும் சேவை இடம்பெறவுள்ளது. (ஐ)



பாஷையூர் 'ஜிம்பிறவுண்' கழகத்தினால் இறங்குதுறைப் பகுதியில் அமைக்கப்பட்ட இளைப்பாற்று மண்டபம் கடந்த செவ்வாய்க்கிழமை திறந்து வைக்கப்பட்டது. யாழ். மாநகர சபை உறுப்பினர் து.இளங்கோ இதனைத் திறந்து வைத்தார். (ந-135)

# 11 ஆயிரம் அபராதம் மூன்று குற்றங்களுக்கு

தென்மராட்சி, ஜூன் 14

ஆவணங்களின்றி வாகனம் செலுத்திய யாழ்ப்பாணம் குருநகர் வாசிக்கு சாவகச்சேரி நீதிமன்றில் செவ்வாய்க்கிழமை 11 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

சாவகச்சேரி பொலிஸ் நிலைய போக்குவரத்து கண்காணிப்பு பிரிவினர் நடத்திய பரிசோதனையில் சாரதிய அனுமதிப் பத்திரம், வாகனவரி, காப்புறுதி ஆகியவை இன்றி வாகனம் செலுத்திய நபர் மாட்டிக் கொண்டார். அவருக்கு எதிராக சாவகச்சேரி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. செவ்வாய்க்கிழமை வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது எதிரி குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து மூன்று குற்றங்களுக்காகவும் 11 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. (ந-9)

## கணித பாட ஆசிரியருக்கான செயலமர்வு

தென்மராட்சி, ஜூன் 14

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் ஐந்தாம் தர வகுப்புகளில் கணித பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான கணித பாட செயலமர்வு இன்று வெள்ளிக்கிழமையும், நான்காம் தர வகுப் பில் கணித பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான கணித பாட செயலமர்வு நாளை சனிக் கிழமையும் வரணி ஆசிரிய மத்திய நிலையத்தில் நடைபெறுமென வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ண குமார் அறிவித்துள் ளார்.

இதேவேளை நாளை ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான மூன்றாவது பயிற்சிப் பரீட்சைக் குரிய வினாத் தாள்கள் வழங்கப் படவுள்ளதால் ஐந்தாம் வகுப்புக்களில் கணித பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களை சமுகமளிக்குமாறும் அறிவித்துள்ளார். (வ-9)

## வெளியிணைப்பு இயந்திரப் பயிற்சி நெறி

யாழ்ப்பாணம், ஜூன் 14

வேலணை துறையூரில் எதிர்வரும் ஜூலை மாதம் வெளியிணைப்பு இயந்திரம் தொடர்பான பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப்பட வுள்ளன. தொழிற்பயிற்சி அதிகார சபையினால் மேற்கொள்ளப் படவுள்ள இந்தப் பயிற்சி நெறிக்கென இருபது பயனாளிகள் தெரிவு செய்யப்படுவார்கள் என வேலணை பிரதேச செயலர் திருமதி மஞ்சுளாதேவி சதீசன் தெரிவித்தார். (ந-7)



நல்லூர் றோட்டரிக் கழகத்தின் அங்குரார்ப்பண நிகழ்வு கிரீன் கிறாஸ் ஹோட்டலில் அண்மையில் நடைபெற்றது. அந்த நிகழ்வில் நல்லூர் ரோட்டரிக் கழக உறுப்பினர்களுக்கு சின்னம் சூட்டும்போது... (ந)

# சாவகச்சேரி பிரதேச செயலகத்தினால் நடத்தப்பட்ட இலக்கிய போட்டி முடிவுகள்

தென்மராட்சி, ஜூன் 14

கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் தென்மராட்சி பிரதேச செயலக கலாசாரப் பிரிவினால் நடத்தப்பட்ட இந்த வருடத்துக்கான தேசிய கலை இலக்கியப் போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

**தமிழ்மொழி**

**கனிஷ்ட பிரிவு**

**கவிதை பாடும் போட்டி**

சியானி சிவசுந்தரம்- கைதடி விக்னேஸ்வரா வித்தி, சங்கீதா தர்மராசா- கைதடி விக்னேஸ்வரா வித்தி, தனோயா சகாதேவன்- கைதடி விக்னேஸ்வரா வித்தி,

**கையெழுத்துப்போட்டி**

இரத்தினேஸ்வரன் டிலக்ஸன்- சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை, சிறீபாலகிருஷ் [illegible] இந்து ஆரம்ப பாடசாலை, ந.சரண்ஜா-சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை,

**சிரேஷ்ட பிரிவு**

**கட்டுரைப்போட்டி**

பரமானந்தசோதி டிலக்ஸனா- எழுதுமட்டுவாழ் ஸ்ரீகணேசா, புஷ்பராசா யதுர்சனா-எழுதுமட்டுவாழ் ஸ்ரீகணேசா,

**கவிதைப்போட்டி**

ந.சுலக்ஸனா- மட்டுவில் சந்திரபுரஸ்கந்தவரோதய ம.வி.

**திறந்த பிரிவு**

**கவிதை**

நவரத்தினம் ரஞ்சனா-நுணாவில் மேற்கு, சரவணமுத்து அகிலன்-கல்வயல், அம்பிகபாலகரன் சிவசாந்தினி- மட்டுவில் கிழக்கு,

**சிறுகதை**

இராமலிங்கம் இராசாமலர்- கொடிகாமம், நவரத்தினம் ரஞ்சனா-நுணாவில் மேற்கு, [illegible]-குட [illegible]

**சிறுகதை (ஆங்கிலம்)**

சண்முகநாதன் உருத்திராதேவி-சாவகச்சேரி

**சிறுகதையாக்கல் போட்டி**

பாலசுப்பிரமணியம் கிரிசா- மீசாலை கிழக்கு, நடராசா லோஜனவனிதை- சாவகச்சேரி, நல்லதம்பி துஷ்யந்தா- கரம்பகம்

**பாடலாக்கம்**

நவரத்தினம் ரஞ்சனா-நுணாவில் மேற்கு, சு.சந்திராதேவி- வெள்ளாம்போக்கட்டி, இராசதுரை சிவகாமசுந்தரி- மீசாலை வடக்கு

**பாடலாக்கம் (ஆங்கிலம்)**

கேதீஸ் ஜெயரோஸ்மன்-சாவகச்சேரி

**நாட்டார் கலை கற்றல்**

பாலசுப்பிரமணியம் கிரிசா - மீசாலை கிழக்கு

**இலக்கிய விபரணம்**

நடராசா லோஜனவனிதை - சாவகச்சேரி, நி.கரன்-கைதடி தெற்கு. (ந-9)

## முகாமைத்துவ உதவியாளர் பரீட்சை

வடக்கு மாகாண முகாமைத்துவ உதவியாளர் சேவையின் III ஆம் வகுப்பிற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை நாளைமறுதினம் 16 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை யாழ்ப்பாணம், நெல்லியடி, சாவகச்சேரி, கிளி நொச்சி, வவுனியா மற்றும் மன்னார் ஆகிய நகரங்களில் நடத்தப்படவுள்ளதாக வட மாகாண பொதுச் சேவை ஆணைக் குழுவின் செயலாளர் க.தெய்வேந்திரம் தெரிவித்துள்ளார்.

பரீட்சார்த்திகளுக்குரிய அனுமதி அட்டைகள் யாவும் தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் அனுமதி அட்டைகள் கிடைக்கப் பெறாதவர்கள் 021-221 9981, 021-221 8880 என்ற தொலைபேசி இலக்கங்களின் ஊடாகத் தொடர்பு கொள்ளுமாறும் கேட்கப்பட்டுள்ளது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடந்த ஆண்டில் மட்டும் ரூ.200 பில்லியன் நட்டம்

## நிதி அமைச்சரின் அறிக்கையில் தகவல்

கொழும்பு,ஜூன் 14
2012 ஆம் ஆண்டில், இலங்கையின் 55 அரசுத்துறை நிறுவனங்களுக்கு 200 பில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளது. இந்த நிறுவனங்கள் எட்டு ஆண்டுகளுக்கு முன்னர் 32 பில்லியன் ரூபாவை இலாபமாகப் பெற்றவையாகும்.
இந்த விடயம் இலங்கை நிதி அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரியவந்துள்ளது.
இலங்கை அரசின் மோசமான நிர்வாகத்தினால், 2005 ஆம் ஆண்டில் இலாபத்தில் இயங்கி வந்த அரசுத்துறை நிறுவனங்கள் கடந்த ஆண்டில் இழப்பைச் சந்தித்துள்ளன.
2005 ஆம் ஆண்டில் 9.8 பில்லியன் ரூபாவை இலாபமாகப் பெற்ற பெற்றோலியக் கூட்டுத்தாபனம், கடந்த ஆண்டில் 89.6 பில்லியன் ரூபா நட்டம் அடைந்துள்ளது.
2005 ஆம் ஆண்டில் 6.8 பில்லியன் ரூபாவாக இருந்த மின்சாரசபையின் நட்டம், 2012 ஆம் ஆண்டில் 61.1 பில்லியன் ரூபாவாக அதிகரித்துள்ளது.
ஸ்ரீலங்கன் எயர்லைன்ஸ் நிறுவனம் 2005 ஆம் ஆண்டில் 834 மில்லியன் ரூபாவை இலாப மீட்டிய போதும், கடந்த ஆண்டில் 25.9 பில்லியன் ரூபா நட்டத்தை சந்தித்துள்ளது.
மிகின் லங்கா விமான நிறுவனம் 2.8 பில்லியன் நட்டத்தை சந்தித்துள்ளது. இலங்கை போக்குவரத்துச் சபையின் நட்டம் 4.6 பில்லியன் ரூபாவாக அதிகரித்துள்ளது.
இலங்கையை ஆசியாவின் அதிசயமாக்கப் போவதாக கூறிய மஹிந்த ராஜபக்ஷ அரசு, கடந்த ஆண்டில் நாட்டை பொருளாதார ரீதியாக அதள பாதாளத்தில் தள்ளிவிட்டுள்ளது என்று அதிகாரபூர்வ தகவல்களில் இருந்து தெரியவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

## ஒரு கோடி சிறார்கள் கொத்தடிமைகளாக



கொழும்பு,ஜூன் 14
உலகில் ஒரு கோடிக்கும் அதிகமான சிறுவர்கள் வீட்டு வேலையாள்களாகப் பணிபுரிகின்றனர். அவர்களது பணியிட நிலைமைகள் பெரும்பாலும் ஆபத்தானவையாகவும், சில வேளைகளில் அவர்களை கொத்தடிமை நிலைமைக்கு அவை இட்டுச் செல்வதாகவும் சர்வதேச தொழிலாளர் நிறுவனம் கூறியுள்ளது.
சிறாரை தொழிலாளர்களாக பயன்படுத்துவதற்கு எதிரான தினத்தை முன்னிட்டு வெளியிடப்பட்ட அறிக்கை ஒன்றில், சிறார் துஷ்பிரயோகம் செய்யப்படுவதை ஒழிப்பதற்கான ஒழுங்குவிதிகள் தேவை என்று அந்த அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.
ஒரு கோடி 5 லட்சம் சிறார்கள் வீட்டு வேலையாள்களாக செயற்படுகின்றனர். அவர்கள் துப்பரவு செய்தல், சமைத்தல், குழந்தைகளை மற்றும் முதியவர்களைப் பராமரித்தல் ஆகியவற்றில் ஈடுபடுத்தப்படுகின்றனர் என்று அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.
அவர்களில் 65 லட்சம் சிறார்கள் 14 வயதுக்குக் குறைவானவர்களாவர். 71 வீதத்தினர் சிறுமிகள் என்றுஉலக தொழிலாளர் நிறுவனம் தெரிவித்துள்ளது. (ச)

## சீரற்ற காலநிலை நீடிக்கும் அபாயம்

கொழும்பு,ஜூன் 14
நாட்டில் தற்போது நிலவும் கடும் காற்றுடன்கூடிய சீரற்ற காலநிலை இன்னும் சில நாள்களுக்கு நீடிக்கும் அபாயமிருக்கின்றது என்று வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.
சீரற்ற காலநிலையால் இதுவரையில் 3 ஆயிரத்து 567 குடும்பங்களைச் சேர்ந்த 13 ஆயிரத்து 595 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 295 பேர் இடம் பெயர்ந்துள்ளதுடன், 153 வீடுகள் முழுமையாகவும் 3 ஆயிரத்து 385 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன.
மேற்கு, சப்ரகமுவ,மத்திய மாகாணங்களிலும், புத்தளம், சிலாபம் மாவட்டங்களிலும் அதிக மழை பெய்யும் சாத்தியக்கூறுகள் தென்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களத்தின் வானிலை அதிகாரி கே.சூரியகுமார் தெரிவித்தார்.
தென்மேற்கு பருவப் பெயர்ச்சி காற்று, நாட்டிலும், நாட்டைச் சூழவுள்ள சில பகுதிகளிலும் மற்றும் மத்திய மலைப் பிரதேசங்களிலும் வீசுவதால் இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடிய சாத்தியக் கூறுகள் காணப்படுகின்றன என்று அவர் கூறினார்.
கடலோரப் பகுதிகளில் கடற் கொந்தளிப்பு ஏற்படலாம். எனவே கடலோரப் பகுதிகளில் உள்ள மீனவர்கள் மீன்பிடி நடவடிக்கைகளுக்குச் செல்வதைத் தவிர்த்துக் கொள்ளுமாறு அவர் கேட்டுள்ளார்.
இதேவேளை, சீரற்ற காலநிலை காரணமாக உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 56 ஆக உயர்வடைந்துள்ளது.(ச)





★13, 595 பேர் பாதிப்பு
★3,500 வீடுகள் சேதம்
★வான்கதவுகள் திறப்பு
★மலையகத்தில் மண்சரிவு
★கடல் கொந்தளிப்பு

NEW
YARL HOSPITAL
315, Palaly Road, Parameswara Junction, Thirunelvely, Jaffna.
நியு யாழ் வைத்தியசாலை
சிறிய கால இடைவெளிக்குப் பின் புதிய யாழ் வைத்தியசாலையின் காது, மூக்கு, தொண்டை, சத்திரசிகிச்சை நிபுணரின் வைத்திய ஆலோசனையும், சத்திர சிகிச்சைகளும் மீண்டும் ஆரம்பித்துள்ளோம்.





ஏனைய சேவைகள்
★ பெண் நோயியல் நிபுணரின் லப்ரஸ் கொப்பி சத்திர சிகிச்சையும், திறந்த சந்திர சிகிச்சையும்.
★ லப்ரஸ் கொப்பி சத்திர சிகிச்சை கேணியா, அற்பென் டிசைட், பித்தப்பை கல் அகற்றல்
★ லப்ரஸ் கொப்பியின் நோயைக் கண்டறியும் பரிசோதனை
★ வைத்திய நிபுணர்களின் வைத்திய ஆலோசனையும் 24 மணிநேர வெளிநோயாளர் பிரிவுச் சேவையும்
★ வீடியோ முறையிலான என்டஸ்கொபி பரிசோதனையும்
புதிய யாழ் வைத்தியசாலை
315, பலாலி றோட், பரமேஸ்வராச் சந்தி,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
T.P- 0212223533, 0777781005, 0212221011

மெதடிஸ்த திருச்சபையின்

## 49 ஆவது கூட்டம் இன்று ஆரம்பம்

வடமராட்சி, ஜூன் 14
இலங்கை மெதடிஸ்த திருச்சபையின் வடக்கு, கிழக்கு திருமறை மாவட்ட சபையின் 49 ஆவது திருச் சபைக் கூட்டம் இன்று வெள்ளிக்கிழமை தொடக்கம் ஞாயிற்றுக்கிழமை வரை மூன்று நாள்கள் நடைபெறவுள்ளன.
வடக்கு, கிழக்கு திருமறை மாவட்ட சபையின் தலைவர் அருட்திரு. எஸ்.டீ.தயாசீலன் தலைமையில் இடம்பெறும்.
இந்தக் கூட்டத்தில் பொத்துவில் தொடக்கம் பருத்தித்துறை வரையுள்ள மெதடிஸ்த குருமார்கள், இறைமக்கள் உள்ளிட்ட பலரும் கலந்துகொள்வார்கள்.
இந்தத் திருச் சபைக் கூட்டத்தில் இலங்கை மெதடிஸ்த திருப் பேரவைத் தலைவர் அருட்திரு. அறிவர் ஏ. டபிள்யூ ஜெபநேசன் பிரதம அதிதியாகவும், மத்திய மாகாண திருப்பேரவைத் தலைவர் அருட்திரு. ஆசிறி பெரேரா, தென் மாகாண திருப் பேரவைத் தலைவர் அருட்திரு. சுமித் வீரமுண்ட ஆகியோர் சிறப்பு அதிதிகளாகக் கலந்து கொள்வார்கள்.
திருச் சபைக் கூட்டத்தின் முதல் நாளான இன்று வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு குருமார் சபையும், பிற்பகல் 2.30 மணிக்கு பொதுச் சபையும், சனிக்கிழமை காலை 7.30 மணி தொடக்கம் பிற்பகல் 4.30 மணிவரை பொதுச் சபையும் இடம்பெறவுள்ளன.
பொது சபையின் போது வடக்கு, கிழக்கு திருமறை மாவட்ட சபையின் முன்னாள் தலைவர் அருட்திரு. வே.விவேகநாதன் திருப்பலி உரையாடல் என்னும் தலைப்பில்சிறப்புரையாற்றுவார்.
ஞாயிற்றுக்கிழமை திருமறை மாவட்ட சபையின் ஞாயிறாக அனுஷ்டிக்கப்படவுள்ளது. அன்றைய தினம் மாலை 4 மணிக்கு நன்றித்திரு வழிபாட்டுடன்திருசபைக் கூட்டம் நிறைவுபெறும். (ந-8)

## கொழும்பு மாவட்டத்தில் டெங்கு நோய் உச்சத்தில்

கொழும்பு,ஜூன் 14
இந்த ஆண்டு பதிவாகியுள்ள டெங்கு நோயாளர் எண்ணிக்கையில் நூற்றுக்கு 42 வீதமும் கொழும்பு மாவட்டத்திலேயே பதிவாகியுள்ளது என்று சுகாதார சேவைகள் தொழிற்சங்க சம்மேளனத்தின் தலைவரான சமன் ரத்னபிரிய தெரிவித்தார்.
கொழும்பு மாநகர சபையில் டெங்கு நோயைக் கட்டுப்படுத்த குடம்பிகள் விஞ்ஞான ஆய்வு உதவியாளர் ஒருவர் இல்லை என்று அவர் தெரிவித்தார்.
டெங்கு உயிர்கொல்லி நோய் என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.
எனினும் டெங்கு நோயைத் தடுக்க ஒருங்கிணைந்த செயற்றிட்டம் நடைமுறைப்படுத்தவில்லை என்று அவர் கூறினார். (ச-22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## தேர்தலை வடக்கில் ஒத்தி வைக்க சூழ்ச்சி

சுமந்திரன் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

இடம்பெயர்ந்தவர்களை வாக்காளர்களாகப் பதிவு செய்வதற்கு அவசர சட்ட வரைவொன்று அரசால் கொண்டு வரப்பட்டது. இந்தச் சட்டவரைவு நாடாளுமன்றுக்கு கொண்டு வரப்பட்ட அன்று காலையில்தான் அமைச்சரவைக் கூட்டத்தில் 13 ஆவது அரசமைப்புத் திருத்தத்தை மாற்றி அமைக்க ஜனாதிபதி எடுத்த முயற்சி கைகூடவில்லை.

இதனையடுத்து அவசரமாகக் கொண்டுவரப்பட்ட வாக்காளர் திருத்தச் சட்ட மூலம் அவசரமற்றதானது. இவ்வாறு மாறியதற்கு காரணமும் உண்டு. 13 ஆவ்து அரசியலமைப்பை மாற்றி, எந்தவிதமான அதிகாரமுமில்லாதாக மாற்றியமைத்து விட்டு தேர்தலை நடத்த அரசு யோசித்தது. இது கை கூடுமா? கூடாதா? என்ற சந்தேகமும் எழுந்தவுடனேயே வாக்காளர் பதிவு தொடர்பிலான சட்ட வரைவை இடை நிறுத்தியிருக்கின்றது.

இப்போதிருக்கின்ற அரசமைப்பை சட்டத்தின் கீழே தேர்தலை நடத்த வேண்டியேற்பட்டால் தேர்தலை அறிவித்துவிட்டு அரச சார்பான ஒருவரை நீதிமன்றத்துக்கு அனுப்பி, நான் இடம்பெயர்ந்த ஒருவன். என்னுடைய பெயர் வாக்காளர் பெயர்ப் பட்டியலில் இல்லை. ஆகையால் என்னுடைய பெயர் வாக்காளர் பெயர்ப் பட்டியலில் இடம்பெறும் வரை தேர்தலை நடத்தக்கூடாது எனத் தெரிவித்து, நீதிமன்றத்தினூடாக வடமாகாண சபைத் தேர்தலை நடத்தாமல் செய்வதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

இதுதான் அரசின் சூழ்ச்சி. இதனை மக்கள் விளங்கிக் கொள்ள வேண்டும்.-என்றார். (த-5)

## வடக்குத் தேர்தல் நீதியாக நடவாது

வடக்கில் சுதந்திரமான, நீதியான தேர்தல் நடைபெறும் என்ற நம்பிக்கை குறைவடைந்துள்ளது.

வடமாகாண சபைத் தேர்தலுக்கு முன்பதாக, 18 ஆம் திருத்தத்தை இரத்துச் செய்து 17 ஆவது திருத்தத்தை செயற்படுத்த வேண்டும்.

17 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்தும் திருத்தத்தில் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைப்படி பொலிஸ் சேவை மற்றும் அனைத்துப் பொலிஸாரும் சுதந்திரமாகச் செயற்பட உயர் தொழில் தரத்தை நிலைநாட்ட பொலிஸ் ஆணைக்குழுவை வலுப்படுத்த வேண்டும்.

வடமாகாண ஆளுநராக சிவில் ஆளுநர் உடனடியாக நியமிக்கப்பட வேண்டும்.

வேட்பு மனுத் தாக்கல் தொடக்கம் முடிவு அறிவிக்கப்பட்டு ஒரு வார காலத்துக்கு அனைத்துத் தேர்தல் நடவடிக்கைகளையும் கண்காணிக்க பொதுநலவாயச் சபை கண்காணிப்புக் குழுவை அழைக்க வேண்டும்.இவை குறித்து கலந்துரையாட எனது தலைமையில் விசேட குழுவுக்கு வாய்ப்பளித்தால் சிறந்தது என்றுள்ளது. (த-5)

## இலங்கையில் சிறார்கள் படைகளில் இல்லை

ஆயுதப் போராட்டத்தில் சிறுவர்கள் என்ற தலைப்பில் வெளியிடப்பட்ட ஐ.நா. செயலாளர் நாயகத்தின் வருடாந்த அறிக்கையிலிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

தற்போது இலங்கையில் எந்தவொரு தரப்பும் சிறுவர்களை ஆயுதப் போராட்டத்தில் ஈடுபடுத்தாமையால் இலங்கை, சிறுவர்கள் ஆயுதப் போராட்டத்தில் ஈடுபடும் நாடுகளின் பட்டியலிருந்து நீக்கப்பட்டுள்ளது.

நேபாளம், இலங்கை ஆகிய நாடுகளில் 2012 ஆம் ஆண்டு எந்தவொரு தரப்பும் சிறுவர்களை ஆயுதப் போராட்டத்தில் ஈடுபடுத்தவில்லை. இதன் அடிப்படையிலேயே இலங்கை நீக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (5)

## அரசு சாரா அமைப்புகளுக்கு இலங்கை அரசு கடிவாளம்

அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

பதிவு செய்யாமல் நாட்டுக்குச் சேவையாற்றும் தோரணையில் அரசைக் கவிழ்க்க, அரசுக்கு எதிரான சூழ்ச்சிகளை மேற்கொள்ள, மோசடிகளில் ஈடுபட, அரசியல் செயற்பாடுகளில் ஈடுபட அரச சார்பற்ற நிறுவனங்கள் இரகசியமாக மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு தொடர்ந்தும் இடமளிக்கப்படமாட்டாது என்று தேசிய பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையத்தின் பணிப்பாளர் லக்ஷ்மன் ஹுலுகல்ல தெரிவித்துள்ளார்.

நாட்டினுள் இயங்கும் சகல அரச சார்பற்ற நிறுவனங்களும், அரச சார்பற்ற நிறுவனங்களைப் பதிவு செய்யும் அலுவலகத்தில் பதிவு செய்வது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

உரிய முறையில் பதிவு செய்யப்படாவிடின் அவற்றுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் நாட்டில் இயங்குவதும் தடை செய்யப்படும்.

பாதுகாப்பு அமைச்சின் கீழ் இயங்கும் அரச சார்பற்ற நிறுவனங்களைப் பதிவு செய்யும் வேலைத் திட்டம் அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவின் நேரடிக் கண்காணிப்பிலேயே செயற்படுத்தப்பட்டு வருகின்றது.

நாட்டில் இயங்கும் பெரும்பாலான அரச சார்பற்ற நிறுவனங்கள், நாட்டுக்கு எதிராகவும், அரசுக்கு எதிராகவும் சதிகளை மேற்கொள்கின்றன. இந்த நிறுவனங்கள் தொடர்பாக இரகசியப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்- என்றார் ஹுலுகல்ல.

இதேவேளை ஐ.நா மனித உரிமைகள் சபையின் 23 ஆவது அமர்வில் இலங்கையில் ஒன்றுபடுவதற்கான சுதந்திரம், கருத்துச் சுதந்திரம் இல்லை என்ற குற்றச்சாட்டை அரச சார்பற்ற நிறுவனமொன்றே முன் வைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (த-5)

## இந்து ஆலயங்களின் மீதான தாக்குதலை கண்டித்து பேரணி

வுள்ளது. இன்று காலை 9 மணிக்கு நல்லூர் முன்றலில் இருந்து ஆரம்பமாகும் இந்தக் கண்டனப் பேரணி யாழ். மாவட்டச் செயலகத்தில் நிறைவடையும். இறுதியில் யாழ். மாவட்ட அரச அதிபரிடம் மனுவும் கையளிக்கப்படவுள்ளது.

இந்தப் பேரணியில் யாழ். மாவட்டத்திலுள்ள இந்து ஆலய நிர்வாகிகள் இந்து மன்றங்கள், இந்து குருமார்கள் ஒன்றியம் மற்றும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் யாழ். பல்கலைக்கழகம் கல்வியியல் கல்லூரி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை ஆகியவற்றைச் சேர்ந்தவர்கள் உட்பட அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு விஸ்வ இந்து பரிஷத் அமைப்பின் இணைப்பாளர் கேட்டுள்ளார். (த-400)

## மாகாணங்கள் இணைவை தடுப்பதற்கு அரசு தீர்மானம்

அனுமதியைப் பெறவேண்டும் என்ற சரத்தை நீக்கி, பெரும்பான்மை மாகாணசபைகளின் அனுமதியைப் பெற்றால் போதுமானதாகும் என்ற திருத்தம் குறித்து ஆராய நாடாளுமன்றத் தெரிவுக்குழு நியமிக்கப்படுள்ளது. இந்தப் புதிய தெரிவுக்குழுவை நாடாளுமன்ற சபாநாயகர் எதிர்வரும் செவ்வாய்கிழமை நியமிப்பதுடன், அதன் நடவடிக்கைகள் அனைத்தும் அடுத்தநாள் புதன்கிழமை முதல் ஆரம்பிக்கப்படும்.

இந்தத் தெரிவுக்குழுவுக்குழு பிரதிநிதிகளை சபாநாயகர் நியமிப்பதுடன், இதனூடாக 13ஆவது திருத்தச் சட்டத்தில் மேற்கொள்ளப்படும் அனைத்து திருத்தங்களும் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் நடத்தப்படவிருக்கும் வடக்குத் தேர்தலுக்கு முன்னர் மேற்கொள்ளப்படும். அத்துடன், தெரிவுக் குழுவின் காலவரையறையையும் சபாநாயகர் நியமிப்பதுடன், மிகக்குறுகிய காலத்தில் இந்நத் தெரிவுக்குழு தமது நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

13ஆவது திருத்தச் சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்வது குறித்து இன்றைய (நேற்றைய) அமைச்சரவைக் கூட்டத்தில் மிக விரிவாகவும் - ஆழமாகவும் ஆராயப்பட்டது. இதன் போது 13ஐ ஆதரிப்போரும் - எதிர்ப்போரும் தத்தமது கருத்துக்களை முன்வைத்தனர். இதனடிப்படையில் அமைச்சரவையில் இடம் பெற்ற நீண்டநேர - விரிவான கலந்துரையாடலுக்கமையவே மேற்படித் தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இரண்டுக்கு மேற்பட்ட மாகாணசபைகள் ஒன்றாக இணைவது தவிர்ந்த, 13ஆவது திருத்தச் சட்டத்தில் மேற்கொள்ளப்படும் அனைத்து திருத்தங்களும் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவினூடாகவே மேற்கொள்ளப்படும் - என்றார் அமைச்சர் கெஹலிய. (த-சி)


### விழிநீர் சொரியும் அருவிகள் 12ஆம் ஆண்டு நினைவு நாள்



தோற்றம் 16 02 1977 — மறைவு 27 05 2001

அமரர் பஞ்சரத்தினம் ஜனார்த்தனன்

திதி (ஷஷ்டி): 14.06.2013

அன்புச் செல்வனே
எவ்வளவு ஆண்டுகள் ஆனபோதும் உன்பிரிவை தாங்க இயலவில்லை. உன்னை எண்ணி கலங்கும் உறவுகள்.

3/3, பத்திரகாளி கோயிலடி,
யாழ்ப்பாணம். (சி/9821)

தகவல்: குடும்பத்தினர்

### 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



அமரர் திருமதி
இராசரத்தினம் பேரின்பநாயகி

மண்ணில் 21.11.1951 — விண்ணில் 17.05.2013

கடந்த 17.05.2013 சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி அமரர் திருமதி இராசரத்தினம் பேரின்பநாயகி அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (14.06.2013) வெள்ளிக் கிழமை கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும், வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் (16.06.2013) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெற உள்ளதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அனைவரையும் அழைக்கின்றோம்.

மேலும் அன்னாரின் மறைவுச் செய்திகேட்டு நேரடியாகவும், உள்நாடு வெளிநாட்டிலிருந்து தொலைபேசி மூலம் ஆறுதல் தெரிவித்தவர்களுக்கும், பணஉதவி செய்த உறவுகள் , நண்பர்கள் மற்றும் பல வழிகளில் உதவி செய்த அனைத்து உள்ளங்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

நிரந்தர முகவரி: நாச்சிமார் வீதி, நவாலி வடக்கு, மானிப்பாய்.
தற்காலிக முகவரி: பலாலி வீதி, வடக்கு, கோண்டாவில் மேற்கு.

பிள்ளைகள், மருமகன், பேரப்பிள்ளைகள்.
(38303)(16.14.7.9) 0776286689, 0776184655.

### கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரியின் இரசாயனவியல் ஆசிரியர்
வி.நவரத்தினராசா அவர்களின்
அன்புத் தந்தை
கந்தையா விஸ்வலிங்கம்

09.06.2013 அன்று காலமானதையிட்டு அவர்தம் குடும்பத்தினரது துயரில் நாமும் பங்கு கொள்வதுடன், அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யாழ்ப்பாணம்.
(38305)(3.6.7.11)

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், கல்வி சாரா ஊழியர்கள்
யா/ வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை

### FOR HIRE/வாடகைக்கு விடப்படும்



JCB(Backhoe), Dozer(D4E & mini), Exavator with Braker (heavy&Light), Tractor with Trailer or Carrier, Lorry with full body, Half body, With out body, Water bowser, Concrete mixture.Contract for Land Cleaning, Land Scaping, Fencing and Planting.

எம்மால் கனரக இயந்திரங்கள் மூலம் நிலம் சுத்தமாக்கல், வடிவமைத்தல், வேலியிடல், மரநடுகை என்பனவும் செய்து கொடுக்கப்படும்.
(38301) (3.6.7)

தொடர்பு:0722263778,0714167878

### 31ஆம் நாள் நினைவஞ்சலி



திருமதி
சுப்பிரமணியம் சரஸ்வதி

தோற்றம் 04.05.1940 — மறைவு 15.05.2013

அன்பால் அரவணைத்த
அன்னையே!
எம்மைத் தவிக்கவிட்டு பூவுலகம் போனீரோ
காலங்கள் கடந்தாலும் உமது நினைவு எமது மனதில்
என்றும் உமை நினைந்து பிரார்த்தனை செய்கின்றோம்

அன்னாரின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (14.06.2013) வெள்ளிக்கிழமை மு.ப 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும்.

கைதடி மேற்கு, கைதடி.
(ஜீன் எலிக்ரிக்கல் அன் காட்வெயர்)
(கைதடி சந்தி)
(38311)(16.14.7.9)

குடும்பத்தினர்.

### துயர் பகிர்கின்றோம்



எமது பாடசாலையின் சக ஆசிரியரான ஐ.பாஸ்கரன்
அவர்களின் அன்பு சகோதரியான
திருமதி பானுமதி சிவசோதிநாதன்

அவர்களின் மறைவையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினரின் துயரில் பங்குபற்றுவதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சக ஆசிரிய நண்பர்கள்
யாழ்ப்பாணம். (38316) (16.14.9.7)
யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை.

### கண்ணீர் அஞ்சலி

எமது பிரதேச செயலகத்தில் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தராகக் கடமையாற்றும் திருமதி கிரிமோகன் சிவாஜினி அவர்களின் அன்புத் தந்தை
முத்தையா பாலசிங்கம்

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தவர் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதோடு அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச செயலரும் உத்தியோகத்தர்களும்.
நலன்புரி சங்கம், பிரதேச செயலகம், உடுவில்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடமாகாண ரீதியான கடற்கரை கரப்பந்தாட்டம்

# யாழ்.மாவட்ட ஆடவர், மகளிர் சம்பியனாகத் தெரிவாகினர்

முள்ளியவளை, ஜுன் 14
வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தால் வட மாகாண ரீதியில் நடத்தப்பட்ட கடற்கரை கரப்பந்தாட்டத்தில் (பீச் வொலி போல்) ஆண், பெண் ஆகிய இரு பிரிவிலும் யாழ். மாவட்ட அணி சம்பியன்களாகத் தெரிவாகியன.



இந்தப் போட்டியின் இறுதியாட்டங்கள் நேற்றுமுன்தினம் முல்லைத்தீவு மாவட்டத்தில் இடம்பெற்றது.
ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் யாழ். மாவட்ட அணியை எதிர்த்து மன்னார் மாவட்ட அணி மோதியது. 3 செற்களைக் கொண்ட இந்தச் சுற்றுப்போட்டியில் முதலாவது செற்றை 21:16 என்ற புள்ளிகள் அடிப்படையில் மன்னார் மாவட்ட அணி பெற்றுக்கொண்டது.
இரண்டாது செற்றில் சுதாகரித்துக்கொண்ட யாழ். மாவட்ட அணி புது உத்வேகத்துடன் விளையாடியது. இரு அணிகளும் ஒன்றுக்கொன்று சளைக்காமல் மாறிமாறி புள்ளிகளைப் பெற்ற வண்ணம் இருந்தன. இறுதியில் மன்னார் மாவட்ட அணியின் பலத்த எதிர்ப் பின் மத்தியில் 27:25 என்ற புள்ளிகள் அடிப்படையில் போராடி வென்றது யாழ். மாவட்ட அணி.
வெற்றியாளர்களைத் தீர்மானிப்பதற்காக நடத்தப்பட்ட 3 ஆவது செற்றில் 15:12 என்ற புள்ளிகள் அடிப்படையில் வென்ற யாழ். மாவட்ட அணி 2: 1 என்ற அடிப்படையில் வென்று சம்பியனாகிது.
அடுத்து இடம்பெற்ற பெண்களுக்கான இறுதியாட்டத்தில் முல்லைத்தீவு மாவட்ட அணியும் யாழ். மாவட்ட அணியும் மோதின. அதில் முல்லைத்தீவு மாவட்ட அணி 21:18 என்ற அடிப்படையில் முதலாவது செற்றை வெற்றி கொண்டது.
எனினும் உத்வேகம் பெற்ற யாழ். அணி இரண்டாம் செற்றை 21:19 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றி பெற்றது.
வெற்றியாளரைத் தீர்மானிப்பதற்காக இடம்பெற்ற 3 ஆவது செற்றை 15:12 என்ற புள்ளிகள் கணக்கில் கைப்பற்றி 2:1 என்ற அடிப்படையில் வென்று மாகாணச் சம்பியன் ஆனது யாழ். மாவட்ட மகளிர் அணி.
(ற-400-433)

பாடசாலைகளுக்கிடையேயான ஹொக்கி

## தெல்லிப்பழை யூனியன் மாவட்ட சம்பியனாகியது


வலி.வடக்கு, ஜுன் 14
இலங்கைப் பாடசாலைகள் ஹொக்கிச் சங்கத்தின் ஆதரவுடன் யாழ்.மாவட்டப் பாடசாலைகள் ஹொக்கிச் சங்கம் நடத்திய ஹொக்கித் தொடரில் 17 வயது ஆண்கள் பிரிவில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மாவட்ட சம்பியனாகத் தெரிவாகியது.
வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இறுதியாட்டத்தில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியும், வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியும் மோதிக்கொண்டன.
ஆட்டநேர முடிவு வரை இரு அணிகளும் கோல் எதனையும் பெறாத நிலையில் வெற்றி, தோல்வியை நிர்ணயிப்பதற்காக 5 சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன.
அதில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று மாவட்ட சம்பியனாகத் தெரிவாகியது.
இந்த வெற்றியை அடுத்து தெல்லிப்பழை யூனியன் கல்லூரி தேசிய மட்டப் போட்டிகளில் விளையாடத் தகுதி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ற-86)



## இன்றைய ஆட்டங்கள்



யாழ்ப்பாணம், ஜுன் 14
வதிரி டைமன்ஸ் விளையாட்டுக் கழகத்தின் 100ஆவது ஆண்டுநிறைவை முன்னிட்டு நடத்தப்படும் உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரில் இன்று டைமன்ஸ் விளையாட்டுக் கழகமைதானத்தில் இடம் பெறவுள்ள ஆட்டங்களில் பங்குகொள்ளும் அணிகளின் விவரம்:
பி.ப. 3.30
வல்வை வி.க. எதிர் உடுப்பிட்டி வி.க. 'பி'
பி.ப. 4.30
சென்.மேரிஸ்(வெள்ளை) எதிர் கருணாகரன் வி.க.(ற-23)



வவுனியா,புதுக்குளம் சித்திவிநாயகர் விளையாட்டுக் கழகம் அண்மையில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள விளையாட்டுக் கழகங்களை இணைத்து விளையாட்டுப் போட்டியை நடத்தியது. விளையாட்டு போட்டிகளில் இடம்பெற்ற கரப்பந்தாட்டப் போட்டிகளில் ஒரு காட்சி. (ற-421)

## உதைபந்து தொடருக்கு விண்ணப்பிக்கலாம்



திருகோணமலை, ஜுன் 14
ஒரியன்ட் விளையாட்டுக் கழகம் நடத்தும் 'ஜுவல் லங்கா' உதைபந்தாட்ட சுற்றுத் தொடர் எதிர்வரும் 26 ஆம் திகதி திருகோணமலை ஏகாம்பரம் விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.
அணிக்கு 7 பேர் கொண்டதாக அமையும் சுற்றுத் தொடரில் பங்குபற்ற விரும்பும் அணிகள் எதிர்வரும் 23 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கலாம் என்று கழகத்தினர் தெரிவித்துள்ளனர். (ற-40)

## கிரிக்கெட் சுற்றுப் போட்டிக்கு விண்ணப்பிக்கலாம்




வடமராட்சி, ஜுன் 14
புலோலி குரும்பைக்காடு உதயசூரியன் விளையாட்டுக் கழகம் நாளை 15ஆம் திகதி சனிக்கிழமையும், நாளை மறுதினம் 16 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த அணிகளுக்கிடையேயான கிரிக் கெட் சுற்றுத் தொடர் ஒன்றை நடத்தவுள்ளது.
சுற்றுப்போட்டியில் பங்குபற்ற விரும்பும் அணிகள் கழகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ற-8)

வதிரி டைமன்ஸ் உதைபந்தாட்ட தொடர்

## இதுவரை இடம்பெற்ற ஆட்டங்களின் முடிவுகள்

யாழ்ப்பாணம், ஜுன் 14
வதிரி டைமன்ஸ் விளையாட்டுக் கழகத்தின் 100 ஆவது ஆண்டுநிறைவை முன்னிட்டு வட மாகாண ரீதியாக நடந்தும் 7 பேர் பங்கு கொள்ளும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இதுவரையில் இடம்பெற்ற ஆட்டங்களில் வெற்றி பெற்ற அணிகளின் விவரங்கள் வருமாறு:-
திங்கட்கிழமை இடம் பெற்ற ஆட்டத்தில் அல்வாய் பாரதி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து இமையாணன் இளைஞர் விளையாட்டுக் கழக அணி மோதிக்கொண்டது.
ஆட்டநேர முடிவில் இரு அணியினரும் தலா ஓர் கோல்களை பெற்றதால், வெற்றி தோல்வியைத் தீர்மானிப்பதற்காக 5 சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டது
அதில் அல்வாய் பாரதி விளையாட்டுக் கழகம் 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.
செவ்வாய்க்கிழமை இடம் பெற்ற ஆட்டத்தில் நவஜீவன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து அல்வாய் பாரதி விளையாட்டுக்கழக அணி மோதியது. இதில் நவஜீவன்ஸ் விளையாட்டுக்கழக அணி 4:1 என்றகோல் கணக்கில் வெற்றிபெற்றது.
புதன்கிழமை இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில் பூமகள் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழக அணி மோதியது. இதில் பூமகள் விளையாட்டுக் கழக அணி 5:3 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.
தொடர்ந்து இடம்பெற்ற இரண்டாவது ஆட்டத்தில் சிறிஅம்பாள் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து நக்கீரன் விளையாட்டுக் கழக அணி மோதியது. ஆட்ட நேரம் முடியும்வரை இரு அணிகளும் கோல் எதனையும் பெறாத நிலையில், வெற்றி, தோல்வி காண்ப தற்காக 5 சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன. அதில் சிறி அம்பாள் விளையாட்டுக் கழக அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.
(ற-23)



## வென்றது டைமன்ஸ்

யாழ்ப்பாணம், ஜுன் 14
கொலின்ஸ் விளையாட்டுக் கழகம் நடந்தும் 'கிங் ஒவ் ஜப்னா' உதைபந்தாட்டச் சுற்றுத்தொடரில்நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் டைமன்ஸ் விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றது.
கொலின்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெற்ற இந்த ஆட்டத்தில் டைமன்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஞானமுருகன் விளையாட்டுக் கழக அணி மோதியது.
இரு அணியினரும் ஆட்ட நேரமுடிவில் எதுவித கோல்களையும் பெறாததால் ஆட்டம், வெற்றி தோல்வியை நிர்ணயிப்பதற்காக 5 சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன.
அதில் டைமன்ஸ் விளையாட்டுக்கழக அணி 5:4 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ற-23)

## மெய்வன்மை போட்டி இன்று

யாழ்ப்பாணம், ஜுன் 14
நெடுங்கேணி பிரதேச செயலக பிரிவிற்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்க இடையிலான மெய்வன்மை போட்டி இன்று வியாழக் கிழமை பி.ப. 2 மணிக்கு நடைபெற்றது.
காலை 6.30 மணிக்கு ஆண், பெண் இருபாலருக்குமான மரதன் ஓட்டப் போட்டியும், பி.ப. 2மணிக்கு பாடசாலை மாணவர்களுக்கான குறுந்தூர ஓட்டப் போட்டியும் நடைபெற்றன.
அதில் பிரதம விருந்தினராக வவுனியா மாவட்ட அரச அதிபர் எம்.கே. பந்துல ஹரிசந்திர கலந்துகொள்ள வுள்ளார். கௌரவ விருந்தினர்களாக வடமாகாண விளையாட்டுத் திணைக்களப் பணிப்பளர் எஸ்.எம்.ராஜாரணசிங்க, 561ஆவது படைப் பிரிவு பிரிகேடியர் ஜி.சி.ரணவக்க ஆகியோர் கலந்துகொண்டர்
(ற-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாயைத் தாக்கிய வீரருக்கு சிவப்பு அட்டை



மைதானத்துக்குள் நுழைந்த நாயைத் தூக்கி எறிந்த மைக்காக உதைபந்தாட்ட வீரர் ஒருவர் சிவப்பு அட்டை காண்பிக்கப்பட்டு வெளியேற்றப்பட்டார்.
ஆர்ஜென்டினாவில் நடைபெற்ற உதைபந்துப் போட்டியின்போது மைதானத்திற்குள் நாய் ஒன்று உள்ளே நுழைந்ததால் பதற்ற நிலை ஏற்பட்டது.
அப்போது உதைபந்தாட்ட வீரர் ஒருவர் நாயை தூக்கி மைதானத்திற்கு வெளியில் எறிந்துள்ளார்.
இச்செயலை எதிரணியினர் எதிர்த்ததுடன் குறித்த வீரரை தாக்குவதற்கும் முற்பட்டனர்.
அதனையடுத்து போட்டி நடுவர்களால் குறித்த வீரருக்கு சிவப்பு அட்டை காண்பிக்கப்பட்டு ஆட்டத்தில் இருந்து வெளியேற்றப்பட்டார். (ற)

## மெஸ்சி மீது வழக்கு




ஆர்ஜென்டினா தேசிய உதைபந்தாட்ட அணி மற்றும் ஸ்பெயினின் பார்சிலோனா அணியின் நட்சத்திர வீரர் லயோனல் மெஸ்சி மற்றும் அவரது தந்தை ஆகியோர் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.
வரி ஏய்ப்புக் குற்றசாட்டின் பேரிலேயே இவர்கள் இருவர் மீதும் ஸ்பெயின், காவா பகுதியில் அமைந்துள்ள நீதிமன்றமொன்றில் 3 பிரிவுகளின் கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.
மெஸ்சி போலியான வருவாய் விவரங்களைக் காட்டி சுமார் 3.4 மில்லியன் பவுண்ட்ஸ்களை மோசடி செய்துள்ளார் என்று அந்நாட்டு வருமானத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.
2007, 2008 மற்றும் 2009 ஆண்டுகளில் மெஸ்சியும், அவரது தந்தை ஜோர்ஜ் ஹொராசியோ ஆகிய இருவருமே வரி ஏய்ப்பு செய்துள்ளனர் என்று சுட்டிக்காட்டப்படுகின்றது. எனினும் இந்தக் குற்றச்சாட்டுகளை உதைபந்தாட்ட வீரர் மெஸ்சி மறுத்துள்ளார் . (ற)

## ஆஷஸ் வரை வோர்னருக்குத் தடை

ஆஸ்திரேலிய அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் டேவிட் வோர்னர் - ஆஷஷ் தொடரின் முதலாவது டெஸ்ட் ஆட்டம் வரை ஆஸ்திரேலியக் கிரிக்கெட் சபையால் தடைசெய்யப்பட்டுள்ளார். அத்தோடு அவருக்கு அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது.
இங்கிலாந்து அணியின் வீரர் ஜோ றூட்டினை மதுபானசாலையில் வைத்துத் தாக்கினார் என்ற குற்றஞ்சாட்டப்பட்ட டேவிட் வோர்னர் மீது ஆஸ்திரேலியக் கிரிக்கெட் சபை விசாரணை நடத்தியது.
இதனடிப்படையில் சம்பியன்ஸ் கிண்ண ஆட்டங்களில் எஞ்சியுள்ள போட்டிகளிலும், ஆஷஷ் தொடருக்கு முன்னதான இரண்டு பயிற்சிப் போட்டிகளில் பங்குபற்ற டேவிட் வோர்னருக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.
அத்தோடு, 11,500 ஆஸ்திரேலிய டொலர்கள் அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது.
டேவிட் வோர்னருக்கு வழங்கப்பட்டுள்ள போட்டித்தடை காரணமாக, ஆஷஷ் தொடரின் முதலாவது டெஸ்ட் ஆட்டத்துக்கு அவர் தெரிவு செய்யப்பட்டால், நீண்ட காலமாகப் போட்டியில் பங்குபற்றாத நிலையில் டேவிட் வோர்னர் முதலாவது போட்டியில் பங்குபற்ற வேண்டி ஏற்படும்.
இந்த மாதத்தில் டேவிட் வோர்னருக்கு ஆஸ்திரேலியக் கிரிக்கெட் சபை அபராதம் விதிக்கும் இரண்டாவது சந்தர்ப்பம் இதுவாகும்.
இம்மாதத்தில் ஏற்கனவே ஊடகவியலாளர் ஒருவருடன் டுவீற்றர் த்ளத்தில் பகிரங்க வாக்குவாதத்திலும், தவறான வார்த்தைப் பிரயோக த்திலும் ஈடுபட்டமைக்காக டேவிட் வோணருக்கு அபராதம் விதிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.
(ற)

## ஆபத்தானவர் மலிங்க




இலங்கை அணியின் சார்பாக அதிக அபாயத்தை வழங்குபவராக லசித் மலிங்க காணப்படுகின்றார் என்று இங்கிலாந்து அணியின் அணித்தலைவர் அலஸ்டயர் குக் தெரிவித்துள்ளார்.
அவருக்கு எதிராக சிறப்பாகத் துடுப்பெடுத்தாட வேண்டிய தேவையுள்ளது என்றும் குக் தெரிவித்துள்ளார்.
சம்பியன்ஸ் கிண்ணத் தொடரில் நேற்றைய ஆட்டத்துக்கு முன்னதாகக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் கூறும்போது,
லசித் மலிங்க மிகச் சிறப்பான பந்துவீச்சாளர். வித்தியாசமான பந்துவீச்சு முறையைக் கொண்டவர் என்பதில் மலிங்க முக்கியமானவர். லசித் மலிங்காவை எதிர்த்தாடுவது கடினமானது'' எனக் குறிப்பிட்டார்.
காயம் காரணமாக இதற்கு முன்னைய போட்டியில் பங்குபற்றாத இங்கிலாந்தின் சுழற்பந்து வீச்சாளர் கிறேம் ஸ்வான் முழுமையான உடற்தகுதியை அடைந்துள்ளார் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.
(ற)

## நாடு திரும்பினார் பிளட்சர்

இந்திய கிரிக்கெட் அணியின் பயிற்சியாளர் டங்கன் பிளட்சரின் தாய் கடந்த 9 ஆம் திகதி உயிரிழந்துள்ளார்.
அதனையடுத்து பிளட்சர், தாயின் இறுதி சடங்கில் கலந்து கொள்வதற்காக தென்னாபிரிக்காவுக்குப் பயணமாகியுள்ளார்.
அவர் நாளை சனிக்கிழமை ஆம் திகதி பர்மிங்காமில் நடைபெறவுள்ள பாகிஸ்தானுக்கெதிராக கடைசி லீக் ஆட்டத்துக்கு முன்னர், இந்திய அணியோடு மீண்டும் இணைந்து கொள்வார் என்று தெரிவிக்கப்படுகிறது. (ற)



## ஜடேஜா சாதனை

மேற்கிந்திய தீவுகள் அணிக்கு எதிரான சம்பியன்ஸ் கிண்ணத் தொடரில் இந்தியா 8 இலக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.
இந்த ஆட்டத்தில் இந்திய வீரர் ரவீந்திர ஜடேஜா 5 இலக்குகளைக் கைப்பற்றி சாதனை படைத்தார்.
ஓவல் மைதானத்தில் இந்த சாதனையை நிகழ்த்திய முதல் இந்திய வீரர் என்ற பெருமையும் கிடைத்தது.
இதற்கு முன்னதாக சச்சின் 4 இலக்குகளை வீழ்த்தியதே அதிகபட்சமாக இருந்தது குறிப்பிடத்தக்கது. (ற)




## ஸ்ரெயின் ஆடுவார்

தென்னாபிரிக்கா - மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கிடையிலான சம்பியன்ஸ் கிண்ண ஆட்டத்தில் வேகப்பந்து வீச்சாளர் டேல் ஸ்ரெய்ன் பங்குபற்றுவார் என எதிர்பார்க்கப்பட்டுள்ளது. பயிற்சிகளில் அவர் பங்குபற்றியதையடுத்தே இந்த நம்பிக்கை எழுந்துள்ளது.
தென்னாபிரிக்க அணியின் ஆரம்பப் பந்துவீச்சாளரான டேல் ஸ்ரெய்ன் அவ்வணியின் முதலிரண்டு ஆட்டங்களிலும் பங்குபற்றியிருக்கவில்லை. அவருக்கு ஏற்பட்ட உபாதை காரணமாகவே பங்குபற்றியிருக்கவில்லை.
இந்நிலையில் அவரது உடற்தகுதி முன்னேறியதையடுத்து பயிற்சிகளில் ஈடுபட்டார். இதன் காரணமாக அவர் பங்குபற்றுவார் என்ற நம்பிக்கை எழுந்துள்ளது.(ற)

## பொறுப்பற்ற ஆட்டம் கவலை தருகின்றது

பாகிஸ்தான் துடுப்பாட்ட வீரர்களின் பொறுப்பற்ற ஆட்டம் வேதனை அளிக்கிறது என்று அந்த அணியின் தலைவர் மிஸ்பா உல் ஹக் தெரிவித்துள்ளார்.
சம்பியன்ஸ் கிண்ண தொடரில் பாகிஸ்தான் அணி தனது தொடக்க லீக் ஆட்டத்தில், மேற்கிந்திய தீவுகள் அணியிடம் 2 இலக்குகள் வித்தியாசத்தில் தோற்றது.
அந்த ஆட்டத்தில் பாகிஸ்தான் 48 பந்துப் பரிமாற்றங்களி 170 ஓட்டங்களை மட்டுமே எடுத்து அனைத்து இலக்குகளையும் இழந்திருந்தது.
இதனையடுத்து தென்னாபிரிக்க அணியுடனான ஆட்டத்திலும் 235 ஓட்டங்களை துரத்தி பாகிஸ்தான் 45 பந்துப்பரிமாற்றங்களில் 167 ஓட்டங்களுக்கு சுருண்டது.
தொடர்ச்சியாக 2 ஆட்டங்களில் தோல்வியடைந்துள்ளதால், பாகிஸ்தான் அணி அரை இறுதிக்கு முன்னேறும் வாய்ப்பு மங்கிவிட்டது.
அதுகுறித்து அணித்தலைவர் மிஸ்பா உல் ஹக் கூறுகையில்,
''235 ஓட்டங்கள் என்பது எளிதான இலக்குதான். ஆனால் துடுப்பாட்டத்தில் மீண்டும் [illegible] [illegible] றாகவே விளையாடினார்கள். அதன் பிறகு என்ன நடந்தது என்று எனக்கு தெரியவில்லை.
ஆடுகளத்தில் பந்து சற்று மெதுவாக வந்தது. ஆனாலும் இலக்கை எங்களால் எட்டியிருக்க முடியும், பந்து வீச்சு சிறப்பாகவே இருந்தது.
துடுப்பாட்டத்தில் இப்படி சொதப்பியதை கொஞ்சம் கூட எதிர்பார்க்கவில்லை.
இந்த இரண்டு ஆட்டத்தையும் மறந்துவிட்டு இந்திய அணியுடனான கடைசி லீக் ஆட்டத்தில் கவனம் செலுத்துவோம்'' என்று தெரிவித்துள்ளார். (ற)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சங்காவின் சதத்தால் மீண்டது இலங்கை

இங்கிலாந்துடனான நேற்றைய ஆட்டத்தில் சங்ககாராவின் சதத்தின் உதவியுடன் 7 இலக்குகளால் வெற்றியீட்டி அரையிறுதிக்கான வாய்ப்பை அதிகரித்துக்கொண்டது இலங்கை அணி.

இங்கிலாந்தில் நடைபெற்றுவரும் மினி உலகக்கிண்ண சுற்றுப்போட்டியில் 8 ஆவது ஆட்டத்தில் இலங்கை அணியும் இங்கிலாந்து அணியும் மோதிக்கொண்டது. லண்டன் ஓவல் மைதானத்தில் நேற்று பகல் இரவாக இடம்பெற்ற ஆட்டத்தில் நாணயச் சுழற்சியில் வெற்றி இலங்கை அணி முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்தது.

இதனையடுத்து முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 50 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 7 இலக்குகளை இழந்து 293 ஓட்டங்களைப் பெற்றது. இந்த அணி சார்பாக ஜெனாதன் ரொட் 76 ஓட்டங்களையும் ரூட் 68 ஓட்டங்களையும் அலக்ஸ் டெர்குக் 59 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர். இலங்கை பந்து வீச்சு சார்பாக மலிங்க, எரங்க, ஹெரத் ஆகியோர் தலா இரு இலக்குகளையும் நுவான் குலசேகர ஒரு இலக்கையும் கைப்பற்றினர்.

இதனையடுத்து 294 என்ற கடின இலக்குடன் களம் இறங்கிய இலங்கை அணி ஆரம்பத் துடுப்பாட்ட வீரரான சங்ககாரவின் சதத்தின் உதவியுடன் 47.1 பந்துப்பரிமாற்றம் நிறைவில் மூன்று இலக்குகளை இழந்து 297 ஓட்டங்களைப் பெற்று 7 இலக்குகளால் வெற்றி பெற்றுக்கொண்டது இலங்கை அணி. அதில் சங்ககார ஆட்டமிழக்காது 135 பந்துகளை எதிர்கொண்டு 134 ஓட்டங்களையும் டில்சான் 46 ஓட்டங்களையும் குலசேகர ஆட்டமிழக்காமல் 38 பந்துகளைச் சந்தித்து 3 ஆறு ஓட்டங்கள், 5 நான்கு ஓட்டங்கள் அடங்கலாக 58 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

பந்து வீச்சில் அண்டர்சன் 2 இலக்குகளையும் ஸ்வான் ஒரு இலக்கையும் கைப்பற்றினர். இந்த வெற்றியின் மூலம் இலங்கை அணி அரையிறுதி ஆட்டத்துக்குச் செல்லும் வாய்ப்பை அதிகரித்துள்ளது. இருந்த போதும் அடுத்து நடைபெறவுள்ள ஆஸ்திரேலியா அணியுடனான வெற்றி தோல்வியைப் பொறுத்தே இலங்கை அணியின் அரையிறுதி ஆட்டத்துக்கான வாய்ப்பு உறுதி செய்யப்படும்.

இந்தப் போட்டியின் ஆட்டநாயகனாக குமார் சங்ககார தெரிவு செய்யப்பட்டார். (400)

**Chicken** **Prima**

## விநியோகஸ்தர்கள் தேவை

இலங்கையில் உயர்தரமான Chicken களை உற்பத்தி செய்து சந்தைப்படுத்தும் **Prima Chicken** நிறுவனத்துக்கு கீழ்வரும் பிரதேசங்களில் விநியோகஸ்தர்கள் உடனடியாகத் தேவைப்படுகின்றனர்.

யாழ்ப்பாணம் | வவுனியா

மேற்குறிப்பிட்ட பிரதேசங்களில் தற்போது விநியோக நடவடிக்கைகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் விண்ணப்பதாரிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

(முன்னனுபவம் இல்லாதவர்களும் விண்ணப்பிக்கலாம்)

(38276)(10.6.3)

தொடர்புகளுக்கு:
0777755482, 0777731494, 0777766819

## ஐரோப்பிய நாடான சைப்பிரஸுக்கு 50ஆவது நபராக யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவ பீட 3ஆம் வருட மாணவன் கோகுலராசா மதுசன் STUDENT VISA பெற்றார்.

★ நீர்வேலி வடக்கு நீர்வேலி என்னும் முகவரியைச் சேர்ந்த கோ.மதுசன் திசைகாட்டியின் வழிகாட்டலில் மேற்படி விசா பெற்றுள்ளார்.

★ யாழ். பல்கலைக்கழக உள்வாரி மாணவர் ஒருவர் எமது நிறுவனத்தினூடாக முதன் முறையாக விசா வென்றுள்ளமையை மிக்க பெருமையோடு அறியத் தருகின்றோம்.

அவருக்கு எமது வாழ்த்துக்களைத் தெரிவிப்பதுடன் அவர் உச்ச கல்வி நிலையடைந்த பின்னர் ஊர் திரும்பி எமது பிரதேச முன்னேற்றத்துக்கு அயராது பாடுபடவேண்டுமென அவாவி நிற்கின்றோம்.

(38290)(10.6.3)

**திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்**
முன்மாதிரியான விசா ஆலோசனை நிறுவனம்
175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 221 9016, 021 568 9090

## WANTED



★ Computer Hardware Technician
Salary Negotiable
Please Send Your CV
ASTP TEC Pvt Ltd.
No.49, 1ST Cross Street, Jaffna

## கனடா கணவன் - மனைவி ஒரு மாதத்தில் பறக்கலாம்

படிக்க, உழைக்க சட்ட ஆலோசனை

அரிய வாய்ப்பு
2 குடும்பங்களிற்கே

**திசைகாட்டி பிறைவேற் லிமிட்**
175, பருத்தித்துறை வீதி, (38287)
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

## FRENCH LANGUAGE CENTRE
CENTRE FOR FRENCH

## FRENCH CLASSES

France,Canada,Swiss,Belgium செல்வோர், ஆர்வமுள்ளோர் French கற்று International Certificates இனை பெற்றுக் கொள்ளலாம்..

ஆசிரியர் : Mr. V. Jegan (Teaching Training in France - 2007, University இல் பகுதி நேர French விரிவுரைகளை மேற் கொள்பவரும்)

இது வரைக்கும் 710 க்கும் மேற்பட்டோர் French கற்றுள்ளனர்...

ஆரம்பம் : 22.06.13 Sat at 2pm.
No. 23, Palaly Road, ஆரியகுளம்.
(அப்பலோ Hospital க்கு அண்மையில்).

: 24.06.13 Mon at 11am.
No. 181, 1st Floor, Main Street, Nelliady. (சோதி வீதி முன்பாக)

0779 789 456

English, Deutsch, Italian, & Sinhala வகுப்புக்களும்...

## பதவி வெற்றிடங்கள்

பின்வரும் பதவிகளிற்கு 20 - 50 வயது வரையான ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். சனி, ஞாயிறு வேலை நாளாகும். வெள்ளி ஓய்வாகும். யாழ்ப்பாணம், நல்லூர், கோப்பாய், பிரதேசத்தவர்கள் மாத்திரம் நேரில் வரவும்.

**முகாமையாளர்:**
பல்கலைக்கழக பட்டம் ஒன்று. அத்துடன் சேவை முன் அனுபவம் மேலதிக தகமையாகும். ஆங்கில, சிங்கள மொழியாற்றல் முக்கியம்.
மாதாந்த வேதனம் 35000/- முதல் இணைந்த படிகளும்.

**முகாமைத்துவ உதவியாளர்:**
க.பொ.த. உயர்தரத்தில் 3 பாடங்களில் சித்தி. அத்தோடு சேவை முன் அனுபவம் மேலதிக தகமையாகும். ஆங்கிலம், சிங்கள மொழியாற்றல் முக்கியம். வேதனம் நேரில் தீர்மானிக்கப்படும்.

**அலுவலக சிற்றூழியர் (பியோன்)**
8ஆம் தரச் சித்தி. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

நேர்முகப் பரீட்சை சனி 15.06.2013
மு.ப. 10 மணிக்கு நடைபெறும்.
(38289)

**திசைகாட்டி பிறைவேற் லிமிட்**
175, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

## பிந்திய அதிரடி வரவு

## IELTS தேவையில்லை

## ஆஸ்திரேலியாவில் படிக்க, உழைக்க 3 மாதங்களில் செல்லலாம்

சட்ட ஆலோசனைகளுக்கு விரைந்து வாருங்கள்

**திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்**
175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 221 9016,
(38288)(10.6.3)

OFFER Mega OFFER SALES
DUAL CORE RS-48,500/=
3rd.Gen,intel m/b,500GB,2GB,DVD,Keyboard,Mouse,19'LED,Ups
CORE i3 RS-56,900/=
3rd.Gen,intel m/b,500GB,2GB,DVD,Keyboard,Mouse,19'LED,Ups
CORE i5 RS-68,500/=
3rd.Gen,intel m/b,500GB,2GB,DVD,Keyboard,Mouse,19'LED,Ups
FREE H.PHONE MOUSE PAD
FOR 3 DAYS
எமது சுன்னாக கிளையில்

OFFER Mega OFFER SERVICE for 1 month
CHECKING CHARGE FREE
SYSTEM SERVICE ONLY RS 100/=
எங்கும் இல்லாத மிகக் குறைந்த கட்டணத்தில்
♣ System Repair ♣ Printer Repair
♣ Laptop Repair ♣ CCTV Installation
♣ Network Installation ♣ Intercom Installation

NALIN Information Technologies Pvt Ltd
Mega OFFER NALIN City Show Room
116 G, K.K.S Road, Chunnakam.
TP:- 021-2242222 ,0777-140431

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 14.06.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.